(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 4.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் புத்தகம்

**2021 யூன் 08, செவ்வாய்க்கிழமை உட்பட அன்றைய தினத்திலிருந்து**
**2021 மே 21, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது**

---

## 2021 யூன் 08, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

12/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சரும், நிதி அமைச்சரும், புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வறட்சி காரணமாக இரத்தினபுரி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகள்;

(ii) அவற்றில் எம்பிலிபிட்டிய பிரதேச செயலகப் பிரிவு உள்ளடங்காவிடின் அதற்கான காரணங்கள்;

யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2018 ஆம் ஆண்டில் வறட்சி நிவாரணம் வழங்கும் கட்டம் II இன் கீழ் நிவாரணம் வழங்கப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகள் யாவையென்பதையும்;

(ii) அதற்கு செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அமைவாக தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 2018 ஆம் ஆண்டில் வறட்சி நிவாரணம் வழங்கும் கட்டம் II இன் கீழ் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) அவற்றில் இறுதியாக செயற்படுத்தப்பட்ட செல்லுபடியாகும் சுற்றறிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி சுற்றறிக்கைக்கு அமைவாக இரத்தினபுரி மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் நிவாரணம் வழங்குவதற்கு செலவிடப்பட்ட பணத்தொகை என்பன ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் அமைவாக தனித்தனியாக யாவையென்பதையும்;

(iv) NDR/2018/03 சுற்றறிக்கைக்கு அமைவாக இரத்தினபுரி மாவட்டத்தில் இனங்காணப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுக்கும் அமைவாக தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2.

246/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பால் மற்றும் பால் சார் உற்பத்திகளின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி பால் மற்றும் பால் சார் உற்பத்திகள் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iv) மேற்படி பால் மற்றும் பால் சார் உற்பத்திகளை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு பால் மற்றும் பால் சார் உற்பத்திகளை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

274/2020

கௌரவ புத்திக பத்திறண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "ஆயுர்வேத சாஸ்த்ரீ" பாடநெறியை பயில்வதற்குத் தேவையான கல்வித் தகைமைகள் யாவை;

(ii) மேற்படி பாடநெறி நடாத்தப்படுகின்ற நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(ii) தற்போது இப்பாடநெறியைப் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி பாடநெறிக்கு மாணவர்களை சேர்த்துக்கொள்வது தற்போது நிறுத்தப்பட்டுள்ளதையும்;

(ii) பட்டப்பாடநெறிக்கு ஒப்பான மேற்படி பாடநெறியில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்கள் காரணமாக இப்பாடநெறியானது டிப்ளோமா பாடநெறியின் நிலைக்கு தாழ்த்தப்பட்டுள்ளதாகவும்;

(iii) மேற்படி பாடநெறியை நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதையும்;

அவர் அறிவாரா?

(இ) (i) "ஆயுர்வேத சாஸ்த்ரீ" பாடநெறிக்கு பட்டப் பாடநெறியின் அந்தஸ்தை மீளளிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா;

(ii) ஆமெனில், "ஆயுர்வேத சாஸ்த்ரீ" பட்டதாரிகளுக்கு ஏனைய ஆயுர்வேத வைத்தியர்களுக்கு உரித்தான சிறப்புரிமைகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா;

(iii) மேற்படி பாடநெறிக்கு மாணவர்கள் சேர்த்துக்கொள்வதை மீண்டும் ஆரம்பிக்கப்படுமா;

(iv) மேற்படி பாடநெறியை நிறுத்துவதற்கு அரசாங்கம் கொள்கைரீதியான தீர்மானமொன்றை மேற்கொண்டுள்ளதா;

(v) ஆமெனில், அத்திகதி யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4.

444/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையம் எனும் பெயரில் நிறுவனமொன்று உள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அந்நிறுவனத்தின் தொலைநோக்கு, பணி மற்றும் செயற்பாடுகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை பகிர்ந்தளிக்கும் போது அந்நிறுவனம் ஊழல்களிலும் மோசடிகளிலும் ஈடுபடுகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(iv) மேற்படி ஊழல் மற்றும் மோசடிகளை தடுத்து நிறுத்துவதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

731/2020

கௌரவ கே.பீ.எஸ். குமாரசிறி,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் பரவி வரும் டெங்கு நோயைக் கட்டுபடுத்துவதற்கு அரசாங்கத்தினால் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்பதையும்;

(ii) அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை போன்ற மாவட்டங்களில் நிலவுகின்ற வறட்சி காலநிலை மாறி மீள மழை பெய்யத் தொடங்கியதும் நுளம்புப் பெருக்கம் அதிகரிக்கும் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கையில் இதுவரை டெங்கு நோய்க்கு ஆளானவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) டெங்கு நோயை ஒழிப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) டெங்கு நுளம்புக் குடம்பிகளை ஒழிப்பதற்கு 2008/2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அப்போதைய அரசாங்கத்தினால் B.T.I பக்றீரியாவை கியூபாவிலிருந்து இறக்குமதி செய்வதற்கு பலவேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அது தோல்வியடைந்ததென்பதை அவர் அறிவாரா?

(ஈ) (i) இலங்கையில் டெங்கு நுளம்புகளை ஒழிப்பதற்கு B.T.I பக்றீரியாவை பயன்படுத்துவதற்கான சாத்தியம் தொடர்பாக ஆய்வு நடாத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இலங்கையில் டெங்கு நுளம்புகளை ஒழிப்பதற்கு B.T.I பக்றீரியாவை பயன்படுத்துவதற்கு சாத்தியம் இல்லாத பட்சத்தில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) B.T.I பக்றீரியாவுக்குப் பதிலாக டெங்கு நுளம்புகளை அழிப்பதற்கு பயன்படுத்தக்கூடிய மாற்றுவழி என்ன என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

6.

783/2020

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1989-1990 காலப்பகுதியில் அரசாங்க ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது மேற்படி ஆசிரியர்கள் ஓய்வுபெறும் கட்டத்தை அண்மித்துள்ளனர் என்பதையும்;

(ii) மேற்படி ஆசிரியர்கள் ஓய்வுபெற்றதன் பின்னர் ஆசிரியர் சேவையில் பெருமளவிலான வெற்றிடங்கள் ஏற்படுமென்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) இந்த நிலைமையை சமநிலைப்படுத்துவதற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

7.

864/2020

கௌரவ அமரகீர்த்தி அதுகோரள,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாடு பூராகவும் அமைந்துள்ள அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திற்குரிய அரச ஒசுசல மருந்தகங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அரச ஒசுசல மருந்தகங்கள் இல்லாத மாவட்டங்கள் இருப்பின், அம்மாவட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் குறைந்த தரத்திலான மற்றும் காலாவதியான மருந்துகள் அரச ஒசுசல மருந்தகங்களுக்கு வழங்கப்பட்டன என்பதை அவர் அறிவாரா?

(இ) (i) 2015 தொடக்கம் 2019 வரை அரச ஒசுசல மருந்தகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த குறைந்த தரத்திலான மற்றும் காலாவதியான மருந்துகளின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி மருந்துகளின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

வெவ்வேறாக அவர் இச்சபையில் மேலும் தெரிவிப்பாரா?

(ஈ) (i) அரச ஒசுசல மருந்தகங்களுக்கு காலாவதியாகிய மருந்துகள் வழங்கப்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி மருந்துகளின் பெறுமதியை உரிய வழங்குநர்களிடமிருந்து அறவிடுவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) உரிய பெறுமதி அறவிடப்படாத வழங்குநர்களுக்கெதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

8.

938/2020

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த அரசாங்கத்தினால் "அண்மித்த பாடசாலை சிறந்த பாடசாலை" என்ற பெயரில் நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டதென்பதையும்;

(ii) அத்திட்டத்தின் கீழ் கொழும்பு கல்வி வலயத்தில் அமைந்துள்ள சுசமயவர்தன வித்தியாலயம், புனித அந்தோனியார் ஆண்கள் வித்தியாலயம், மகாபோதி வித்தியாலயம், அனுருத்த மகளிர் வித்தியாலயம், புனித அந்தோனியார் மகளிர் வித்தியாலயம் (ஆரம்ப பிரிவு), முத்துவெல்ல இந்து வித்தியாலயம் மற்றும் கொ/முகத்துவாரம் ஆனந்த வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன என்பதையும்;

(iii) அப்பணிக்காக கடந்த அரசாங்கத்தினால் நிதி ஒதுக்கப்பட்டதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொழும்பு - 12, ஹமீத் அல் ஹுசைனி வித்தியாலயத்தில் கட்டிடமொன்றை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) அது தொடர்பாக எதிர்காலத்தில் எடுக்கவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொழும்பு மாவட்டத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டம் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) மேலே அ (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலைகளின் கட்டிட நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

9.

946/2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) யாழ்ப்பாணம் மாவட்டத்தின் வேலணை பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள வேலணைத்துறையிலிருந்து புங்குடுதீவு, மடத்துவெளி வரையிலான பாலம் இலங்கையில் அமைந்துள்ள நீளமான பாலங்களில் ஒன்றென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாலத்தின் நீளம் யாதென்பதையும்;

(ii) மேற்படி பாலம் இறுதியாக புனரமைக்கப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(iii) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்கு செலவிடப்பட்ட தொகை யாதென்பதையும்;

(iv) அதற்கான நிதி பெற்றுக் கொள்ளப்பட்ட மூலம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி பாலத்தினூடாகப் பயணிப்பது அபாயகரமானது என்பதையும்;

(ii) பொது மக்களும் பெரும் எண்ணிக்கையிலான வாகனங்களும் பயணிக்கின்ற இந்தப் பாலத்தின் மீது பல விபத்துக்கள் இடம்பெறுகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஈ) (i) மேற்படி விபத்துக்கள் இடம்பெறுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி பாலம் பூரணமாக புனரமைக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

10.

1428/2021

கௌரவ வடிவேல் சுரேஷ்,— பிரதம அமைச்சரும், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எனது கோரிக்கைக்கு அமைவாக தோட்டப்புறங்களில் வாழும் மக்களின் சமய, கலாசார, நலனோம்புகை மற்றும் பிற செயற்பாடுகளுக்காக பயன்படுத்தக்கூடிய வகையில் அப்போதைய தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு பதுளை மாவட்டத்தில் தோட்டப்புற பிரதேசங்களை உள்ளடக்கும் வகையில் 16 கலாசார நிலையங்களை நிர்மாணிப்பதற்காக 2019 ஆம் ஆண்டில் அங்கீகாரம் வழங்கி இதற்காக 100 மில்லியன் ரூபாவை ஒதுக்கியிருந்ததென்பதையும்;

(ii) இதில் 14 கலாசார நிலையங்களை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டதென்பதையும்;

(iii) ஆயினும், மேற்படி கலாசார நிலையங்களை நிர்மாணிக்கும் நிகழ்ச்சித்திட்டம் தற்போது நிறுத்தப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கலாசார நிலையங்களை நிர்மாணிப்பதற்கான பூர்வாங்க பணிகளுக்கென ரூபா 20.5 மில்லியன் பதுளை மாவட்ட செயலாளருக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி 16 கலாசார நிலையங்களை நிர்மாணிப்பதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் பெற்றுக்கொடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 1),— 2020 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் தனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறித்துரைக்கப்பட்ட 58 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2020 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 58

2020 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளையினை ஆக்குவதன் மூலம், அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 33101 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "அரச அலுவலர்களுக்கான முற்பணக் கணக்கு — சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய செலவினங்களின் வரையறை | திருத்தப்படவில்லை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த பெறுகைகளின் வரையறை | ரூபா. 47,300,000 இலிருந்து ரூபா. 42,500,000 வரை. |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய பொறுப்புக்களின் வரையறை | திருத்தப்படவில்லை |

(இக்கட்டளை 2020.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்/ மஹிந்த ராஜபக்ஷ*
நிதி அமைச்சர்

2021.05.12 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. )

* 2.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 2),— 2020 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் தனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறித்துரைக்கப்பட்ட 59 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2020 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 59

2020 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளையினை ஆக்குவதன் மூலம், அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 22302 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "களஞ்சியசாலைகள் முற்பணக் கணக்கு (வெடி பொருட்கள்) - இலங்கை கடற்படை" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய செலவினங்களின் வரையறை | திருத்தப்படவில்லை. |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த பெறுகைகளின் வரையறை | ரூபா. 620,000,000 இலிருந்து ரூபா. 450,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை | திருத்தப்படவில்லை |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய பொறுப்புக்களின் வரையறை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2020.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்/ மஹிந்த ராஜபக்ஷ*
நிதி அமைச்சர்

2021.05.12 ஆம் திகதி
கொழும்பு - 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. )

* 3.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 3),— 2020 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் தனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறித்துரைக்கப்பட்ட 60 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2020 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 60

2020 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளையினை ஆக்குவதன் மூலம், அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 25002 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "ஏனைய அரசாங்கங்கள் சார்பான கொடுப்பனவுக்கான முற்பணக் கணக்கு — அரச கணக்குகள் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய செலவினங்களின் வரையறை | திருத்தப்படவில்லை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த பெறுகைகளின் வரையறை | ரூபா. 2,000,000 இலிருந்து ரூபா. 1,120,600 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை | திருத்தப்படவில்லை |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய பொறுப்புக்களின் வரையறை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2020.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்/ மஹிந்த ராஜபக்ஷ*
நிதி அமைச்சர்

2021.05.12 ஆம் திகதி
கொழும்பு - 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. )

* 4.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 4),— 2020 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் தனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறித்துரைக்கப்பட்ட 61 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2020 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 61

2020 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளையினை ஆக்குவதன் மூலம், அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 25003 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "நானாவித முற்பணக் கணக்கு — அரச கணக்குகள் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய செலவினங்களின் வரையறை | திருத்தப்படவில்லை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த பெறுகைகளின் வரையறை | ரூபா. 2,000,000 இலிருந்து ரூபா. 430,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய பொறுப்புக்களின் வரையறை | திருத்தப்படவில்லை |

(இக்கட்டளை 2020.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்/ மஹிந்த ராஜபக்ஷ*
நிதி அமைச்சர்

2021.05.12 ஆம் திகதி
கொழும்பு - 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. )

* 5.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 5),— 2020 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் தனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறித்துரைக்கப்பட்ட 62 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2020 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 62

2020 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளையை ஆக்குவதன் மூலம், அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 28502 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "விவசாய பண்ணை பராமரிப்பு மற்றும் விதை விற்பனை முற்பணக் கணக்கு — விவசாயத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய செலவினங்களின் வரையறை | ரூபா. 620,000,000 இலிருந்து ரூபா. 645,000,000 வரை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த பெறுகைகளின் வரையறை | ரூபா. 620,000,000 இலிருந்து ரூபா. 645,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய பொறுப்புக்களின் வரையறை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2020.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்/ மஹிந்த ராஜபக்ஷ*
நிதி அமைச்சர்

2021.05.12 ஆம் திகதி
கொழும்பு - 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. )

* 6.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 6),— 2020 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் தனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறித்துரைக்கப்பட்ட 63 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2020 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 63

2020 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளையை ஆக்குவதன் மூலம், அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 30602 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் “களஞ்சியசாலைகள் முற்பணக் கணக்கு - புகையிரதத் திணைக்களம்” என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய செலவினங்களின் வரையறை | திருத்தப்படவில்லை. |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த பெறுகைகளின் வரையறை | ரூபா. 1,700,000,000 இலிருந்து ரூபா. 1,000,000,000 வரை. |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை | ரூபா. 7,500,000,000 இலிருந்து ரூபா. 8,200,000,000 வரை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய பொறுப்புக்களின் வரையறை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2020.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்/ மஹிந்த ராஜபக்ஷ*

நிதி அமைச்சர்

2021.05.12 ஆம் திகதி
கொழும்பு - 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. )

* 7.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 7),— 2020 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் தனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறித்துரைக்கப்பட்ட 64 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2020 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 64

2020 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளையை ஆக்குவதன் மூலம், அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 31002 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் “களஞ்சியங்கள் முற்பணக் கணக்கு - அரசாங்கத் தொழிற்சாலை” என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய செலவினங்களின் வரையறை | திருத்தப்படவில்லை. |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த பெறுகைகளின் வரையறை | ரூபா. 120,000,000 இலிருந்து ரூபா. 50,000,000 வரை. |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை | ரூபா. 40,000,000 இலிருந்து ரூபா. 70,000,000 வரை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய பொறுப்புக்களின் வரையறை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2020.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்/ மஹிந்த ராஜபக்ஷ*
நிதி அமைச்சர்

2021.05.12 ஆம் திகதி
கொழும்பு - 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. )

* 8.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 8),— 2020 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் தனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறித்துரைக்கப்பட்ட 65 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2020 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 65

2020 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளையை ஆக்குவதன் மூலம், அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 31003 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "வேலை நிறைவு முற்பணக் கணக்கு - அரசாங்கத் தொழிற்சாலை" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய செலவினங்களின் வரையறை | திருத்தப்படவில்லை. |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த பெறுகைகளின் வரையறை | ரூபா. 420,000,000 இலிருந்து ரூபா. 300,000,000 வரை. |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய பொறுப்புக்களின் வரையறை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2020.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்/ மஹிந்த ராஜபக்ஷ*
நிதி அமைச்சர்

2021.05.12 ஆம் திகதி
கொழும்பு - 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. )

* 9.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 9),— 2020 இன் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை கீழ்க்காணும் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டவாறு அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

(இக்கட்டளை 2020.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும். )

அட்டவணை

(இணைக்கப்பட்ட அட்டவணைக்கமைவாக)

**அட்டவணை**

**2020 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை**

நிதி ஆண்டு 2020 தொடர்பில், 2020 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் அதிகாரமளிக்கப்பட்டதன் பிரகாரம், அரசாங்க ஊழியர்களுக்கு முற்பணங்கள் வழங்குவது சம்பந்தமான முற்பணக் கணக்குகளின் எல்லைகளின் மாற்றங்களின் அட்டவணை

**குழுக் கட்டளை இலக்கம். 01**

2020 ஆம் ஆண்டின் 6 இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 வது பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளை மூலம், இதனுடன் காட்டப்பட்டுள்ள அட்டவணையில் காணப்படுகின்ற விதத்தில் அரசாங்க ஊழியர்களின் முற்பணக் கணக்குகளின் விடய இலக்கங்கள் 00601, 01701, 02001, 02301, 10101, 10301, 11201, 11501, 11801, 12201, 12301, 12601, 13001, 13501, 15101, 17601. 19301, 19401, 19801, 40101, 40301, 40401, 40501, 40601, 40801, 40901, 41001, 41101, 41201, 41401, 41601, 41701, 41901, 42101, 42201, 42301, 42401, 42501, 42601, 42701, 42801, 42901, 43001, 43101, 43301, 43401, 43501, 43601, 43701, 43801, 43901, 44001, 20901, 21601, 23501 , 27201 , மற்றும் 27701 ஆகியன தொடர்பான அச்சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் நிரல் II மற்றும் IV என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய வரையறையினைத் திருத்துவதோடு, அதே சட்டத்தின் அவ் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட III ஆம் நிரலில் காணப்படும் ஆகக் குறைந்த வரையறைகளையும் மாற்றுகின்றேன்.

| தொ. இல. | அமைச்சு / திணைக்களம் | விடய இல. | அரசாங்க செயற்பாடுகளின் நிரல் II இல் ஆகக் கூடிய செலவின் வரையறை (ரூபா) | | அரசாங்க செயற்பாடுகளின் நிரல் III இல் ஆகக் குறைந்த பெறுகை வரையறை (ரூபா) | | அரசாங்க செயற்பாடுகளின் நிரல் IV இல் ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை (ரூபா) | | கட்டளை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | இருந்து | வரை | இருந்து | வரை | இருந்து | வரை | |
| 1. | அரசாங்கச் சேவை ஆணைக்குழு அலுவலகம் | 00601 | - | - | - | - | 30,000,000 | 38,000,000 | 1 |
| 2. | பாராளுமன்றச் சபை முதல்வரின் அலுவலகம் | 01701 | - | - | 2,000,000 | 1,100,000 | - | - | 2 |
| 3. | தேர்தல் ஆணைக்குழு | 02001 | - | - | - | - | 85,000,000 | 115,000,000 | 3 |
| 4. | கணக்காய்வுச் சேவைகள் ஆணைக்குழு | 02301 | - | - | 1,600,000 | 600,000 | 4,000,000 | 6,000,000 | 4 |
| 5. | புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் | 10101 | - | - | 31,000,000 | 8,000,000 | - | - | 5 |
| 6. | பாதுகாப்பு அமைச்சர் | 10301 | 38,500,000 | 75,000,000 | - | - | - | - | 6 |
| 7. | வெளிநாட்டு அமைச்சர் | 11201 | - | - | - | - | 120,000,000 | 124,000,000 | 7 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 8. | வலுசக்தி அமைச்சர் | 11501 | - | - | 2,500,000 | 2,400,000 | - | - | 8 |
| 9. | கமத்தொழில் அமைச்சர் | 11801 | - | - | 33,000,000 | 29,000,000 | - | - | 9 |
| 10. | காணி அமைச்சர் | 12201 | - | - | 12,500,000 | 9,000,000 | - | - | 10 |
| 11. | நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் | 12301 | 7,100,000 | 37,000,000 | - | - | - | - | 11 |
| 12. | கல்வி அமைச்சர் | 12601 | - | - | - | - | 2,540,000,000 | 3,100,000,000 | 12 |
| 13. | அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் | 13001 | - | - | 28,500,000 | 22,000,000 | - | - | 13 |
| 14. | பெருந்தோட்ட அமைச்சர் | 13501 | - | - | 14,500,000 | 5,820,000 | - | - | 14 |
| 15. | கடற்றொழில் அமைச்சர் | 15101 | - | - | 4,000,000 | 2,100,000 | - | - | 15 |
| 16. | துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் | 17601 | - | - | - | - | 18,000,000 | 18,600,000 | 16 |
| 17. | தொழில் அமைச்சர் | 19301 | - | - | - | - | 52,000,000 | 55,600,000 | 17 |
| 18. | இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் | 19401 | - | - | 21,500,000 | 14,300,000 | - | - | 18 |
| 19. | நீர்ப்பாசன அமைச்சர் | 19801 | - | - | 4,400,000 | 2,500,000 | - | - | 19 |
| 20. | தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் | 40101 | - | - | 1,200,000 | 500,000 | - | - | 20 |
| 21. | மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சர் | 40301 | - | - | 28,000,000 | 14,500,000 | - | - | 21 |
| 22. | கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் | 40401 | - | - | 1,500,000 | 0.00 | - | - | 22 |
| 23. | அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துஐறமுகங்கள் அபிவிருத்தி, பலநாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சர் | 40501 | - | - | 950,000 | 86,000 | - | - | 23 |
| 24. | சூரிய சக்தி, காற்று மற்றும் நீர் மின்னுற்பத்தி கருத்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் | 40601 | - | - | 1,200,000 | 266,000 | - | - | 24 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 25. | பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பொருட்கள் மற்றும் கிராமியக் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் | 40801 | - | - | 23,500,000 | 3,800,000 | - | - | 25 |
| 26. | உள்ளகப் பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் | 40901 | 52,300,000 | 551,000,000 | - | - | - | - | 26 |
| 27. | கம்பனித் தோட்டங்களைச் சீர்திருத்தல், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் சார்ந்த பயிர்ச் செய்கைகள் மற்றும் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் | 41001 | - | - | 2,000,000 | 74,000 | - | - | 27 |
| 28. | நகர அபிவிருத்தி, கரையோரப் பாதுகாப்பு, கழிவுப் பொருள் அகற்றுகை மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர் | 41101 | - | - | 4,200,000 | 3,900,000 | - | - | 28 |
| 29. | வெளிநாட்டு தொழில்வாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தைப் பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர் | 41201 | - | - | 26,500,000 | 13,000,000 | 50,000,000 | 64,000,000 | 29 |
| 30. | சமுர்த்தி வதிவிடப் பொருளாதார, நுண் நிதிய, சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் | 41401 | 4,400,000 | 5,600,000 | - | - | - | - | 30 |
| 31. | சுதேச வைத்திய மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி மற்றும் சமூக சுகாதார இராஜாங்க அமைச்சர் | 41601 | - | - | 10,000,000 | 4,200,000 | - | - | 31 |
| 32. | தோட்ட வீடமைப்பு மற்றும் மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் | 41701 | - | - | 7,200,000 | 7,126,989.02 | - | - | 32 |
| 33. | பிராந்திய உறவு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சர் | 41901 | - | - | 500,000 | 350,000 | - | - | 33 |
| 34.. | திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் இராஜாங்க அமைச்சர் | 42101 | - | - | 18,000,000 | 16,000,000 | - | - | 34 |
| 35. | அறநெறிப் பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் பிக்குமார் கல்வி இராஜாங்க அமைச்சர் | 42201 | 5,600,000 | 30,000,000 | - | - | - | - | 35 |
| 36. | ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் | 42301 | - | - | 4,000,000 | 2,750,000 | - | - | 36 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 37. | வனசீவராசிகள் பாதுகாப்பு, யானை வேலி மற்றும் அகழிகளை நிர்மாணித்தல் உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் மீள்காடாக்கம், வனவள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் | 42401 | - | - | 1,200,000 | 65,000 | - | - | 37 |
| 38. | நெல் மற்றும் தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழ வகைகள், மிழகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்குச் செய்கை மேம்பாடு, விதை உற்பத்தி மற்றும் உயர் தொழில்நுட்ப விவசாய இராஜாங்க அமைச்சர் | 42501 | - | - | 2,200,000 | 20,000 | - | - | 38 |
| 39. | உர உற்பத்தி மற்றும் வழங்கல்கள், இரசாயன உருங்கள் மற்றும் கிருமிநாசினி பாவனை ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் | 42601 | - | - | 9,500,000 | 200,000 | - | - | 39 |
| 40. | கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த தொழில் இராஜாங்க அமைச்சர் | 42701 | - | - | 12,200,000 | 9,500,000 | - | - | 40 |
| 41. | மகாவலி வலயங்களை அண்டியுள்ள கால்வாய்களின் அகழிகள் மற்றும் குடியிருப்புகள் பொது உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் | 42801 | - | - | 1,000,000 | 400,000 | - | - | 41 |
| 42. | கிராமிய வயல் நிலங்கள் மற்றும் அண்டியுள்ள குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் | 42901 | - | - | 1,500,000 | 205,000 | - | - | 42 |
| 43. | காணி முகாமைத்துவம், அரச தொழில் முயற்சிக் காணிகள் மற்றும் சொத்துக்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் | 43001 | - | - | 1,000,000 | 120,000 | - | - | 43 |
| 44. | தென்னை, கித்துள் மற்றும் பனை செய்கை மேம்பாடு மற்றும் அது சார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிப் பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர் | 43101 | - | - | 1,500,000 | 70,000 | - | - | 44 |
| 45. | கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் கருத்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் | 43301 | - | - | 850,000 | 50,000 | - | - | 45 |
| 46. | களஞ்சிய வசதிகள், கொள்கலன் முனையங்கள், துறைமுக வழங்கல் வசதிகள், இயந்திரப் படகுகள் மற்றும் கப்பற்றொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் | 43401 | - | - | 1,200,000 | 35,000 | - | - | 46 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 47. | கிராமிய வீதிகள் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் | 43501 | - | - | 1,000,000 | 200,000 | - | - | 47 |
| 48. | வாகன ஒழுங்குறுத்துகை, பேருந்துப் போக்குவரத்துச் சேவைகள் மற்றும் புகையிரதப் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் | 43601 | - | - | 1,500,000 | 80,000 | - | - | 48 |
| 49. | விமானச் சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் | 43701 | - | - | 1,200,000 | 100,000 | - | - | 49 |
| 50. | கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் | 43801 | - | - | 2,500,000 | 2,000,000 | - | - | 50 |
| 51. | கத்திக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர் | 43901 | - | - | 1,200,000 | 100,000 | - | - | 51 |
| 52. | இரத்தினக் கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் | 44001 | - | - | 850,000 | 45,000 | - | - | 52 |
| 53. | தேசிய சுவடிக் காப்புத் திணைக்களம் | 20901 | - | - | 3,600,000 | 3,100,000 | - | - | 53 |
| 54. | சமூக சேவைகள் திணைக்களம் | 21601 | - | - | 13,400,000 | 12,500,000 | - | - | 54 |
| 55. | சட்ட ஆணைக்குழுத் திணைக்களம் | 23501 | - | - | 700,000 | 472,256 | - | - | 55 |
| 56. | மாவட்டச் செயலகம், குருணாகல் | 27201 | 80,000,000 | 85,000,000 | - | - | - | - | 56 |
| 57. | மாவட்டச் செயலகம், மொணராகலை | 27701 | 30,000,000 | 30,580,000 | - | - | - | - | 57 |

2021.05.12 ஆம் திகதி
கொழும்பு –01.

ஒப்பம்/ மஹிந்த ராஜபக்ஷ
நிதி அமைச்சர்.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

நீதி அமைச்சர்,— குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 2013 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7(2) ஆம் பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2020 திசெம்பர் 23 ஆம் திகதிய 2207/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.03.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 11.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1), 6 மற்றும் 14 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 ஏப்ரல் 06 ஆம் திகதிய 2222/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

நீதி அமைச்சர்,— காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் உறுப்பினர்களுக்கான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை திருத்தம் செய்தல்,— 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும், நிருவகித்தலும் மற்றும் பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டத்தின் II ஆம் பகுதியின் 10(1) பிரிவின் மூலம் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்துக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்கள் மற்றும் பணிகளை நிறைவேற்றுவதற்காக மேற்படி ஏற்பாடுகளின் கீழ் தாபிக்கப்பட்டுள்ளதுடன். மேற்படி சட்டத்தின் 4(1) மற்றும் 6 ஆம் பிரிவினால் உறுப்பினர்கள் 07 பேர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள் என்பதுடன், அதன் உறுப்பினர் ஒருவர் அவ் அலுவலகத்தின் தவிசாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளதனாலும்;

மேற்படி அலுவலர்களுக்கு 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சட்டத்தின் 20 ஆம் பிரிவுக்கு அமைய பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்ற சம்பளத்தை செலுத்துவதற்கு மற்றும் அதனை திரட்டிய நிதியத்திற்கு பொறுப்பிக்கப்படுதல் வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதனாலும்;

18/0689/705/001 ஆம் இலக்க மற்றும் 2018.06.05 ஆம் திகதிய திருத்திய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் வழங்கப்பட்ட அங்கீகாரம் மற்றும் 2018.09.04 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையின் அடிப்படையில் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் தவிசாளருக்கு ரூபா 100,000/- ஆன மாதாந்தக் கொடுப்பனவும், மாதாந்தத் தொலைபேசிக் கொடுப்பனவாக ரூபா 10,000/- உம் மற்றும் மாதாந்த எரிபொருள் கொடுப்பனவாக லீற்றர் 225 இற்கும், மேற்படி அலுவலகத்தின் உறுப்பினர்களுக்கு 75,000/- ஆன மாதாந்தக் கொடுப்பனவும், மாதாந்தத் தொலைபேசிக் கொடுப்பனவாக ரூபா 8,000/- உம் மற்றும் வீட்டிலிருந்து அலுவலகத்திற்கு உள்ள தூரத்தின் அடிப்படையில் 350 கி.மீ. வரை ரூ. 25,000/- அல்லது கி.மி. 350 அல்லது அதற்கு மேற்பட்ட தூரத்திற்கு ரூபா 50,000/- ஆன மாதாந்தப் போக்குவரத்துக் கொடுப்பனவிற்கும் உரித்துப் பெறுவதனாலும்;

நீதி அமைச்சின் கீழுள்ள இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் உறுப்பினர்களுக்கு சம்பளத்தை தீர்மானிப்பது பாராளுமன்றமாகும் என்பதுடன், 2019.09.20 ஆம் திகதி நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட பிரேரணைக்கு அமைய மேற்படி அலுவலர்களின் சம்பளம் திருத்தம் செய்யப்பட்டு அதிகரிக்கப்பட்டுள்ளதனாலும்;

காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் தவிசாளர் உள்ளிட்ட உறுப்பினர்களுக்கும் 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும், நிருவகித்தலும் மற்றும் பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டத்தின் 20 ஆம் பிரிவுக்கு அமைய 2020.11.30 ஆம் திகதி முதல் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை பின்வருமாறு செலுத்தத் தீர்மானிப்பதற்கு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு அமைப/21/0362/330/022 மற்றும் 2021.03.08 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதனாலும்:—

(அ) காணாமற் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் தவிசாளருக்கு மாதாந்தக் கொடுப்பனவாக தற்போது பெற்றுக் கொடுக்கப்படுகின்ற எரிபொருள் மற்றும் தொலைபேசி கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக ரூபா 100,000/- இலிருந்து ரூபா 135,000/- ஆக அதிகரித்துச் செலுத்துவதற்கும்;

(ஆ) தவிசாளரின் உபயோகத்திற்கு உத்தியோகபூர்வ வாகனமொன்று பெற்றுக் கொடுக்கப்படாத சந்தர்ப்பங்களில் PED 1/2015(i) ஆம் இலக்க பொதுத் தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தவிசாளரின் சொந்த வாகனத்தை கடமைகளுக்குப் பயன்படுத்துவதற்காக ரூபா 50,000/- ஆன மாதாந்தக் கொடுப்பனவைச் செலுத்துவதற்கும்; மற்றும்

(இ) காணாமற் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் உறுப்பினர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவை தற்போது பெற்றுக் கொடுக்கப்படுகின்ற எரிபொருள் மற்றும் தொலைபேசி கொடுப்பனவுக்கு மேலதிகமாக ரூபா 75,000/- முதல் ரூபா 90,000/- ஆக அதிகரித்துச் செலுத்துதல்.

இதற்கமைய, 2016 இன் 14 ஆம் இலக்க காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும், நிருவகித்தலும் மற்றும் பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டத்தின் 20 ஆம் பிரிவுக்கு அமைய காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் தவிசாளர் உள்ளிட்ட உறுப்பினர்களுக்கு அரசாங்க திரட்டிய நிதியத்திற்கு பொறுப்பிக்கப்படுமாறு மேலே குறிப்பிடப்பட்டுள்ள மாதாந்த சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளைச் செலுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக.

* 13.

தேருநர்களைப் பதிவுசெய்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 14.

வேலையாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 15.

குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 16.

இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 17.

நிதி முகாமைத்துவ (பொறுப்பு) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 18.

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 19.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— 2015 சனவரி மாதம் 08 ஆம் திகதியிலிருந்து 2019 நவம்பர் மாதம் 16 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் பதவி வகித்த அரசாங்க உத்தியோகத்தர்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்களின் ஊழியர்கள், முப்படையினர் மற்றும் பொலிஸ் சேவை உறுப்பினர்கள் ஆகியோர்களுக்கு இடம்பெற்றுள்ளதாக கூறப்படும் அரசியல் ரீதியிலான பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராய்ந்து தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் செயற்படுத்துதல்,—

மேற்குறித்த விடயம் சம்பந்தமாக அதிமேதகு சனாதிபதி அவர்களினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 2021.01.15 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு ஏற்புடைய அமைப/21/0105/301/003 ஆம் இலக்க, 2021.02.15 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு ஏற்ப பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக அமைச்சரவையின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது:—

(அ) சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையை (அதன் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் தொகுதிகளையும், எழுத்துப் பிழைகள் மற்றும் அச்சுப் பிழைகள் என்பவற்றைத் திருத்தும் பின் இணைப்பையும் உள்ளடக்கிய) பிரேரணை அங்கீகாரமொன்றினூடாக பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்;

(ஆ) அந்த இறுதி அறிக்கையின் முதலாம் தொகுதியின் 08 ஆம் இலக்க விடயத்தின் கீழ் சுட்டிக்காட்டப்பட்டுள்ள ஊழல் எதிர்ப்புக் குழு சம்பந்தமாக அந்த ஆணைக்குழுவினால் செய்யப்பட்டுள்ள தீர்மானங்களையும், சிபாரிசுகளையும் நடைமுறைப்படுத்தல்;

(இ) குறித்த 08 ஆம் இலக்க விடயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 1 ஆம் இலக்கத் தீர்மானம் மற்றும் 1 ஆம் இலக்க சிபாரிசு என்பவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்றினை நியமித்தல் அல்லது பாராளுமன்றத்தினால் அதற்காக விதித்துரைக்கப்படும் பிற பொருத்தமான வழிமுறையொன்றினை மேற்கொள்ளுதல்;

(ஈ) மேற்குறித்த விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் தொகுதிகளில் மற்றும் அந்த இறுதி அறிக்கையின் எழுத்துப் பிழைகள் மற்றும் அச்சுப் பிழைகள் என்பவற்றைத் திருத்தும் பின் இணைப்பில் 08 ஆம் இலக்க விடயத்திலும் 09 ஆம் இலக்க விடயத்தில் I முதல் LXI வரையிலுமுள்ள முறைப்பாடுகளுக்கு உரியதாக அந்த ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் நடைமுறைப்படுத்தும் பொருட்டு, இந்த தீர்மானங்கள் மற்றும் சிபாரிசுகளை இலஞ்ச அல்லது ஊழல் முறைப்பாடுகள் பற்றி புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவுக்கும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் உரிய அமைச்சுக்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களுக்கும் அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் உரிய அதிகாரிகளுக்கும் அனுப்புதல்; மற்றும்

(உ) குறித்த இறுதி அறிக்கையின் மூன்றாம் தொகுதியில் 10 ஆம் இலக்க விடயத்தின் கீழ் குறிப்பிடப்படும் முறைப்பாடுகளுக்கு உரியதாக குறித்த சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் நடைமுறைப்படுத்தல்

அதற்கேற்ப, மேலே (இ) இல் குறிப்பிடப்பட்டவாறு 2221/54 ஆம் இலக்க, 2021.04.01 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி ஊடாக அதிமேதகு சனாதிபதி அவர்களினால் விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளமையினால், மேற்குறித்த அமைச்சரவைத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் உள்ளடங்கியுள்ள 08 ஆம் இலக்க விடயத்தின் தீர்மானங்கள் மற்றும் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக விசேட சனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை கிடைத்த பின்பு கருத்திற்கொள்வதற்கு உட்பட்ட வகையில் குறித்த அமைச்சரவைத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராய்ந்து தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின் (அதன் முதலாம், இரண்டாம், மூன்றாம் தொகுதிகளையும் எழுத்துப் பிழைகள் மற்றும் அச்சுப் பிழைகள் என்பவற்றைத் திருத்தும் பின் இணைப்பினையும் உள்ளடக்கிய) 08 ஆம் இலக்க விடயத்தைத் தவிர்த்து 09 மற்றும் 10 ஆம் இலக்க விடயங்களில் உள்ளடங்கியுள்ள தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் மேலே (ஈ) மற்றும் (உ) இல் குறிப்பிடப்பட்டவாறு நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்ற பிரேரணை நிறைவேற்றுமாக.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

# 2021 யூன் 09, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

37/2020

கௌரவ ஹேஷா விதானகே,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொது மக்களுக்கான சிறந்த சுகாதாரச் சேவையை வழங்குவதற்கு தற்போது தேவைப்படும் மருத்துவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) 2019.01.01 ஆம் திகதி ஆகும் போது அரச சேவையில் ஈடுபட்டிருந்த மருத்துவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) எதிர்வரும் வருடங்களில் அரச சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ள மருத்துவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்குறிப்பிட்ட மருத்துவப் பட்டதாரிகளை உருவாக்குவதற்கு அரசாங்கம் திட்டங்களை தயாரித்துள்ள முறை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

275/2020

கௌரவ புத்திக பத்திரண,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் இலங்கையின் திராட்சை உற்பத்தி ஒவ்வொரு வருடத்திற்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) திராட்சை உற்பத்தியினை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அந் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கையிலுள்ள திராட்சை இனங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இலங்கையில் திராட்சை செய்கைக்கு உகந்த காலநிலை காணப்படுகின்ற மாவட்டங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் இலங்கைக்கு திராட்சை இறக்குமதி செய்வதற்கு செலவிடப்பட்ட தொகை ஒவ்வொரு வருடத்திற்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) இலங்கை திராட்சையை ஏற்றுமதி செய்கின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் திராட்சை ஏற்றுமதியின் மூலம் பெறப்பட்ட வருமானம் ஒவ்வொரு வருடத்திற்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3.

446/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை புகையிரத திணைக்களம் கொண்டுள்ள புகையிரத என்ஜின்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி என்ஜின்களில் தற்போது சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள புகையிரத எஞ்சின்களின் எண்ணிக்கை யாது;

(iii) தற்போது சேவையில் ஈடுபடுத்தப்படாத புகையிரத எஞ்சின்களின் எண்ணிக்கை யாது;

(iv) மேற்படி புகையிரத எஞ்சின்கள் சேவையில் ஈடுபடுத்தப்படாமைக்கான காரணங்கள் யாவை;

(v) மேற்படி புகையிரத என்ஜின்களை துரிதமாக சேவையில் ஈடுபடுத்துவதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

724/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் ஔடத விற்பனை நிலையங்கள் (ஒசுசல மருந்தகங்கள்) நிறுவப்படவில்லையென்பதையும்;

(ii) மேற்படி மாவட்டங்களில் வசிக்கும் சாதாரண மக்கள் சில ஔடதங்களைப் பெற்றுக்கொள்வதில் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கின்றனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி மாவட்டங்களில் இற்றைவரையில் அரச ஒசுசல மருந்தகங்களை ஆரம்பிக்காமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி மாவட்டங்களில் அரச ஒசுசல மருந்தகங்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

820/2020

கௌரவ சாந்த பண்டார,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது காணப்படுகின்ற சிறைச்சாலைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி சிறைச்சாலைகளில் தடுத்து வைத்திருக்கக்கூடிய கைதிகளின் எண்ணிக்கை மற்றும் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(iv) கொள்ளளவையும் தாண்டி தடுத்து வைக்கப்பட்டுள்ள மேலதிக சிறைக் கைதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(v) தடுத்து வைக்கப்பட்டுள்ள மேலதிக சிறைக் கைதிகள் தொடர்பில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

849/2020

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "எழுச்சிபெறும் பொலன்னறுவை" மாவட்ட அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் கதுருவெல மாற்று வீதியின் கி.மீ 0 + 000 முதல் கி.மீ. 2 + 687 வரையிலான பகுதியை, நான்கு ஒழுங்கைகளைக் கொண்ட வீதியாக விரிவாக்கும் பொருட்டு தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்தி சபைக்கும், அரச விதை நெல் உற்பத்திப் பண்ணைக்கும் சொந்தமான மற்றும் பிரதேசவாசிகளினால் பயன்படுத்தப்பட்ட மேட்டு நிலங்கள், சேற்று நிலங்கள், தரிசு நிலங்கள், வீட்டுத் தோட்டக் காணிகள் மற்றும் நிலையான கட்டிடங்களைக் கொண்ட காணிகள் என்பன அரசாங்கத்திற்குச் சுவீகரித்துக்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாறு சுவீகரிக்கப்பட்ட மொத்தக் காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்;

(iii) சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கான உரிமையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(iv) இவர்களுக்கு நட்டஈடு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், வழங்கப்பட்ட நட்டஈட்டுத் தொகை ஒவ்வொரு காணி உரிமையாளர்களுக்கும் அமைவாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட வீதிப் பகுதியை விரிவாக்கும் திட்டத்தின் கீழ் தற்போது வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள தூரம் எவ்வளவு என்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

997/2020

கௌரவ சந்திம வீரக்கொடி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கல்வியியற் கல்லூரிகளில் பயிற்சிப் பாடநெறிகளை அண்மைக்காலத்தில் கற்று முடித்துள்ள டிப்ளோமாதாரிகளுக்கு இதுவரை ஆசிரியர் நியமனம் வழங்கப்படவில்லை என்பதையும்;

(ii) அதன் காரணமாக அண்மைக்காலம் முதல் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆசிரியர் பற்றாக்குறைக்குத் தீர்வாகவும், பிள்ளைகளின் கல்வியை மேம்படுத்து வதற்காகவும் கல்வியியற் கல்லூரிகளின் பயிற்சிப் பாடநெறிகளை கற்று முடித்துள்ள மேற்படி டிப்ளோமாதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்களை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

1063/2020

கௌரவ அசோக பிரியந்த,— வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் யானை –மனித மோதல் இடம்பெறுகின்ற பிரதேச செயலாளர் பிரிவுகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி பிரதேச செயலாளர் பிரிவுகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி பிரதேச செயலாளர் பிரிவுகளில் சஞ்சரிக்கின்ற காட்டு யானைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) மேற்படி காட்டு யானைகளை விரட்டுவதற்காக இருக்கின்ற அலுவலர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(v) மேற்படி காட்டு யானைகளை விரட்டுவதற்கான அலுவலர்களின் பற்றாக்குறையை தவிர்த்துக் கொள்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2021 யூன் 10, வியாழக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

74/2020

கௌரவ ஹேஷா விதானகே,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எனினும், இதுவரை தீர்ப்பு வழங்கப்படாதுள்ள மனித உரிமை வழக்குகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) உயர் நீதிமன்றத்தில் அத்தகைய வழக்கு ஒவ்வொன்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ள திகதி தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) அத்தகைய வழக்கு ஒவ்வொன்றுக்குமான வழக்கிலக்கம் மற்றும் மனுதாரர்கள் தனித்தனியாக யாவர் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

276/2020

கௌரவ புத்திக பத்திறண,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் இலங்கையின் வாழைப்பழ உற்பத்தி ஒவ்வொரு வருடத்திற்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) வாழைப்பழ உற்பத்தியினை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அந் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கையிலுள்ள வாழை இனங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இலங்கையில் வாழைச் செய்கைக்கு உகந்த காலநிலை காணப்படுகின்ற மாவட்டங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இலங்கை வாழைப் பழங்களை இறக்குமதி செய்கின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் வாழைப் பழங்களை இறக்குமதி செய்வதற்கு செலவிடப்பட்ட தொகை ஒவ்வொரு வருடத்திற்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) இலங்கை வாழைப் பழங்களை ஏற்றுமதி செய்கின்றதா என்பதையும்;

(iv) ஆமெனில், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் வாழைப்பழ ஏற்றுமதியின் மூலம் பெறப்பட்ட வருமானம் ஒவ்வொரு வருடத்திற்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3.

447/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை புகையிரத திணைக்களம் கொண்டுள்ள புகையிரதப் பெட்டிகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி புகையிரதப் பெட்டிகளில் தற்போது சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள புகையிரதப் பெட்டிகளின் எண்ணிக்கை யாது;

(iii) தற்போது சேவையில் ஈடுபடுத்தப்படாத புகையிரதப் பெட்டிகளின் எண்ணிக்கை யாது;

(iv) மேற்படி புகையிரதப் பெட்டிகள் சேவையில் ஈடுபடுத்தப்படாமைக்கான காரணங்கள் யாவை;

(v) மேற்படி புகையிரதப் பெட்டிகளை துரிதமாக சேவையில் ஈடுபடுத்துவதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

459/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— மின்சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 13,200 லீற்றர் எரிபொருளை ஏற்றிச் செல்லக்கூடியவாறான கொள்ளளவுடன் கூடிய தாங்கிகளைக் கொண்டமைந்த 05 வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்காக 2016 ஆம் ஆண்டில் அமைச்சினால் கேள்விப்பத்திரம் கோரப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், மேற்படி கேள்விப்பத்திரத்தை கோரியவர்கள் யார்;

(iii) மேற்படி கேள்விப்பத்திரம் அப்போதைய உரிய அமைச்சின் பெறுகைகள் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி 05 வாகனங்களையும் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டுள்ள மொத்தத் தொகை;

(ii) ஒரு வாகனத்தைக் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டுள்ள தொகை;

(iii) மேற்படி வாகனங்கள் கொள்வனவு செய்யப்படும்போது வாகனமொன்றுக்கான சந்தைப் பெறுமதி;

எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

745/2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அனுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள கல்னேவ பொலிஸ் நிலையம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பொலிஸ் நிலையம் மற்றும் அதற்குரிய உத்தியோகபூர்வ இல்லங்கள் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன என்பதையும்;

(ii) ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து இதுவரை மேற்படி கட்டிடங்கள் போதுமான வகையில் சீரமைக்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) மேற்படி பொலிஸ் நிலையம் மற்றும் அதற்குரிய உத்தியோகபூர்வ இல்லங்கள் எத்திகதியில் சீரமைக்கப்படுமென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

6.

867/2020

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1970 ஆம் ஆண்டு காலப்பகுதி வரை செயற்பட்டு வந்த திருகோணமலை மாவட்டத்தில் அமையப்பெற்றிருந்த கிண்ணியா சுற்றுலா நீதிமன்றம், வடகிழக்கு மாகாணங்களில் நிலவிய யுத்தச் சூழ்நிலை காரணமாக தற்காலிகமாக மூடப்பட்டது என்பதையும்;

(ii) நிரந்தர கட்டிடங்கள் நிர்மாணிக்கப்படும் வரை நீதிமன்ற செயற்பாடுகளை அரசாங்கக் கட்டிடமொன்றில் தற்காலிகமாக மீள ஆரம்பிப்பதற்கு கடந்த வருடம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இதுவரை மேற்படி நீதிமன்ற செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) திருகோணமலை நிதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படுகின்ற வழக்குகளின் எண்ணிக்கையினைக் குறைப்பதற்கும் கிண்ணியா பிரதேச மக்கள் வழக்கு நடவடிக்கைகளுக்கென திருகோணமலை வரை செல்லும்போது ஏற்படுகின்ற அசௌகரியங்களைக் குறைப்பதற்கும் கிண்ணியா சுற்றுலா நீதிமன்றத்தினை மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

874/2020

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) பாகிஸ்தான், நேபாளம், பங்காளதேசம், மாலைதீவு மற்றும் மியன்மார் ஆகியவற்றை உள்ளிட்ட 80 நாடுகள் கொவிட் - 19 தொற்றின் பொருளாதாரத் தாக்கத்தை கருத்திற்கொண்டு சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து (IMF) அவசர உதவிகளைப் பெற்றிருப்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கை அரசாங்கம், கொவிட் - 19 தொற்று காரணமாக சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து உதவியைக் கோரியுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், கோரப்பட்டுள்ள உதவியின் தன்மையையும்;

(iii) மேற்குறிப்பிட்ட உதவி கோரப்பட்ட திகதியையும்;

(iv) மேற்குறிப்பிட்ட கோரிக்கைக்கு சர்வதேச நாணய நிதியம் பதிலளித்துள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், சர்வதேச நாணய நிதியத்தின் பதிலையும்;

(vi) இதுவரை நிவாரணத்தைப் பெற்ற 80 நாடுகள் போலல்லாது இலங்கை அரசாங்கம் நிவாரணத்தைப் பெற்றிருக்காமைக்கான காரணத்தையும்;

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

881/2020

கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையின் வருடாந்த மீன் தேவை எவ்வளவென்பதையும்;

(ii) அத்தேவையில் உள்நாட்டு ரீதியாக உற்பத்தி செய்யப்படுகின்ற அளவு மற்றும் இறக்குமதி செய்யப்படுகின்ற அளவு தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) 1982 ஆம் ஆண்டு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்ட மீன் உற்பத்தியானது இலங்கையின் மொத்த மீன் உற்பத்தியின் சதவீதமாக எவ்வளவென்பதையும்;

(iv) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவிய யுத்த நிலைமை முடிவடைந்து தற்போது 11 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் 1982 ஆம் ஆண்டு அம்மாகாணங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற மீன் அறுவடை இன்னும் கிடைக்கப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வட மாகாணத்தில் இனங்காணப்பட்டுள்ள பிரதேசங்களில் இதுவரை மீன்பிடித் துறைமுகங்கள் நிர்மாணிக்கப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) கடந்த 15 வருட காலப்பகுதியில் ஏனைய மாகாணங்களில் நிர்மாணிக்கப் பட்டுள்ள மீன்பிடித் துறைமுகங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) பருத்தித்துறை மீன்பிடித் துறைமுகத்திற்கான நிர்மாணப் பணிகளின் முன்னேற்றம் யாதென்பதையும்;

(iv) இதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து கிடைத்த உதவியின் தன்மை மற்றும் அந்த உதவிகள் தற்போது நிறுத்தப்பட்டுள்ளமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(v) நோர்வே மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகள் வழங்கும் கடன் தொகைகளைக் கொண்டு இத்துறைமுகம் நிர்மாணிக்கப்படுவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(vi) அதன்மூலம் கிடைக்கப்படும் மேலதிக அனுகூலங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

1082/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குவைத்திலுள்ள இலங்கைத் தூதரகத்தில் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி ஊழியர்களின் பெயர்கள் மற்றும் பதவிகள் யாவை;

(iii) குறித்த ஊழியர்களில் இது வரையில் கொவிட்-19 நோய் தொற்றியுள்ளவர்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குவைத்திலுள்ள இலங்கைத் தூதரகத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு கொவிட்-19 நோய் தொற்றியுள்ளமையானது அந்நாட்டில் பணிபுரியும் இலங்கையர்களுக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை அறிவாரா?

(ii) ஆமெனில், இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

1280/2020

கௌரவ குமாரசிறி ரத்நாயக்க,— பெருந்தோட்ட அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் வருடாந்த மிளகு அறுவடை மெட்ரிக் டொன்களில் எவ்வளவு என்பதையும்;

(ii) அதிகப்படியாக மிளகு அறுவடை செய்யும் மாவட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு மாவட்டத்தின் வருடாந்த மிளகு அறுவடை மெட்ரிக் டொன்களில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மிளகு தவிர்ந்த வேறு வகையான வாசனைத் திரவியங்கள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு வாசனைத் திரவியத்தின் வருடாந்த தேவைப்பாடு மற்றும் இறக்குமதி செய்யப்படுகின்ற அளவு மெட்ரிக் டொன்களில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) இறக்குமதி செய்யப்படுகின்ற வாசனைத் திரவியங்களின் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2021 யூன் 11, வெள்ளிக்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

76/2020

கௌரவ ஹேஷா விதானகே,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள இரத்தினபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள தனியார் நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிதியத்தில் அங்கத்துவம் பெற்றுள்ள இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்த ஊழியர்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவுக்கமைய வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் பதிவு செய்துகொள்வதற்காக கொண்டிருக்க வேண்டிய குறைந்தபட்ச தகைமைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

227/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— பெருந்தோட்ட அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட சோளத்தின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி சோளம் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iv) மேற்படி சோளம் இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு சோளத்தினை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

347/2020

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகப் பிரிவிலுள்ள காணி உறுதியற்ற வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அக்காணிகளுக்குரிய உறுதிகளை வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அவ்வேலைத்திட்டம் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

356/2020

கௌரவ புத்திக பத்திறண,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தறை நில்வளா கங்கையில் கழிவுகள் அகற்றப்படுவதன் காரணமாக இந்த கங்கை மாசடைந்துள்ளது என்பதையும்;

(ii) மாத்தறை மாவட்டத்திலுள்ள மக்களின் சுகாதார நிலைக்கு இது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதையும்;

(iii) நீரின் தரத்தை பாதுகாத்துக்கொள்வதற்கு நில்வளா கங்கையின் இருமருங்கும் ஒதுக்கிடமாக பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என்பதையும்;

அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஆ) (i) நில்வளா கங்கையின் இருமருங்கிலும் 33 அடிகளிலான ஒதுக்கிடமொன்றைத் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாவென்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 2016 ஆம் ஆண்டில் நில்வளா கங்கையில் கழிவுகளை கொட்டியதன் காரணமாக ஆட்கள் கைது செய்யப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தகைய ஆட்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5.

493/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பண்டாரவளை தேர்தல் தொகுதியில் மத்திய அரசாங்கம், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அதிகார சபைகளுக்குச் சொந்தமாகவிருக்கும் வீதிகளின் நீளம் கிலோ மீற்றர்களில் தனித் தனியாக எவ்வளவு என்பதையும்;

(ii) அத்தகைய வீதிகளில், இன்றளவில் சேதமடைந்துள்ள வீதிகளின் நீளம் மேற்படி ஒவ்வொரு நிறுவனத்திற்கமைய தனித் தனியாக யாது என்பதையும்;

(iii) பண்டாரவளை தேர்தல் தொகுதிக்குச் சொந்தமான சகல வீதிகளையும் துரிதமாக அபிவிருத்தி செய்ய அமைச்சினால் எடுக்கப்படும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

620/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மருத்துவப் பட்டங்களை வழங்கும் சில சர்வதேச பல்கலைக்கழகங்களை கறுப்புப் பட்டியலில் சேர்ப்பதற்கு இலங்கை மருத்துவச் சபை தீர்மானித்துள்ளதா;

(ii) ஆமெனில், மேற்படி பல்கலைக்கழகங்களின் பெயர்கள் யாவை;

(iii) அவ்வாறான தீர்மானமொன்றை மேற்கொள்வதற்கு ஏதுவான காரணங்கள் யாவை;

என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் மேற்குறிப்பிட்ட (அ) (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள பல்கலைக்கழகங்களிலிருந்து பட்டம் பெற்ற இலங்கை மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டுக்கமைய வெவ்வேறாக எத்தனை;

(ii) மேற்படி பல்கலைக்கழகங்கள் தொடர்பாக அமைச்சு மேற்கொள்ளவுள்ள அடுத்தகட்ட நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

754/ 2020

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மட்டக்களப்பு மாவட்டத்தில் சுற்றுலாக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக தயார் செய்யப்பட்டுள்ள திட்டங்கள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

822/2020

கௌரவ சாந்த பண்டார,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தில் வசிக்கும் பெரும் எண்ணிக்கையிலானவர்களின் காணிகளுக்கு உறுதிகள் இல்லை என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி காணிகளுக்கு உறுதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு வேலைத்திட்டமொன்று தயார் செய்யப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பொல்பித்திகம பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட இறுதெனியாய கிராம மக்கள் இதுவரை சுமார் 50 வருடங்கள் அங்கு வசித்து வருகின்றனர் என்பதையும்;

(ii) அவர்களின் காணிகளுக்கு இதுவரை உறுதிகள் வழங்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) இறுதெனியாய கிராம மக்களின் காணிகளுக்கு உறுதிகள் வழங்கப்படுகின்ற திகதி யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

9.

1203/2020

கௌரவ கே.பீ.எஸ். குமாரசிறி,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அநுராதபுரம் மாவட்டத்தில் —

(i) பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் 14 குளங்கள் காணப்படுவதோடு அவற்றுக்கான பயிர்நிலப் பரப்பு 126,242 ஏக்கர்கள் என்பதையும்;

(ii) நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் 83 குளங்கள் காணப்படுவதோடு அவற்றுக்கான பயிர்நிலப் பரப்பு 29,775 ஏக்கர்கள் என்பதையும்;

(iii) மாகாண நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் 3,019 குளங்கள் காணப்படுவதோடு அவற்றுக்கான பயிர்நிலப் பரப்பு 106,185 ஏக்கர்கள் என்பதையும்;

(iv) மேற்படி பெரும்பாலான குளங்களில் தற்போது வண்டல் மண் படிந்துள்ளதுடன் செல்வீனியா மற்றும் ஆகாயத்தாமரை போன்ற பல்வகை நீர்த் தாவரங்கள் வளர்ந்து குளங்கள் நிரம்பியிருப்பதால் அவற்றின் நீர்க்கொள்ளளவு குறைவடைந்துள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட குளங்களை புனரமைப்பதற்காக இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) செல்வீனியா மற்றும் ஆகாயத்தாமரை போன்றவற்றைப் பயன்படுத்தி சேதனப் பசளை உற்பத்தி செய்வது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

1283/2020

கௌரவ வருண லியனகே,— பிரதம அமைச்சரும் நிதி அமைச்சரும், புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இனங்காணப்பட்டுள்ள, இரத்தினபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள உயர் அபாய நேர்வுமிக்க வீடுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவ்வீடுகளில் வசிக்கும், மீள் குடியேற்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அனுகூலங்கள் உரித்தான குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மீள் குடியேற்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்குறிப்பிட்ட உயர் அபாய நேர்வுமிக்க வீடுகளில் வசிக்கும் குடும்பங்களுக்கு அனுகூலங்களை வழங்குவதில் தாமதம் நிலவுவதனை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

1.

பா. 1/2020

கௌரவ ஹேஷா விதானகே,— கிராமியப் பிரதேசங்களில் பௌத்த விஹாரைகளில் தங்கியிருக்கும் வயோதிப பிக்குமார்களைப் பாதுகாத்தல்,— இலங்கையின் அநேகமான கிராமியப் பிரதேசங்களில் பௌத்த விஹாரைகள் மிகக் குறைந்த பொருளாதார நிலையிலுள்ளதால், அத்தகைய விஹாரைகளில் தங்கியிருக்கும் வயோதிப பிக்குமார்களைப் பாதுகாப்பதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

2.

பா. 2/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பிராந்திய ஊடகவியலாளர்களின் தொழில்கள் பிரச்சினைகளைத் தீர்த்தல்,— ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு தகவல்கள் முக்கிய காரணிகளாக இருப்பதுடன் இவ்வாறான தகவல்களை அளிப்பதில் முக்கிய பங்காற்றி வரும் பிராந்திய ஊடகவியலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொறிமுறை ஒன்று அரசாங்கத்தினால் தாபிக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

3.

பா. 3/2020

கௌரவ ஹேஷா விதானகே,— ஆற்றுப்பள்ளத்தாக்குகளிலிருந்து உச்ச பயன் பெறுதல்,— ஒரு விவசாய நாடான எமது நாட்டின் ஆற்றுப்பள்ளத்தாக்குகளிலிருந்து விவசாய கைத்தொழிலுக்கு பாரிய சேவையாற்றப்படுகின்ற போதிலும், இந்த ஆற்று நீர் பாரியளவு பயன்படுத்தப்படாது கடலுடன் கலப்பதாக அறிவியல்சார் ஆராய்ச்சிகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளமையால், மகா பராக்கிரமபாகு மன்னனுடைய காலத்தைப் போன்று இந்த நீர் வளத்தைக் கொண்டு நாட்டின் அபிவிருத்திக்கு உச்ச பயன் பெறக்கூடியவாறு வேலைத்திட்டமொன்று அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

4.

பா. 4/2020

கௌரவ ஹேஷா விதானகே,— புகையிரதம் மூலம் காய்கறிகளை எடுத்துச் செல்லல்,— பதுளை மாவட்டம் உள்ளிட்ட காய்கறி உற்பத்தி செய்யப்படும் மாவட்டங்களிலிருந்து காய்கறி உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை குறைந்த செலவிலும் விரயத்தினை இயன்றளவு குறைக்கும் வகையிலும் புகையிரதம் மூலமாக நாட்டின் ஏனைய பிரதேசங்களுக்கு எடுத்து செல்வதற்கான திட்டமொன்று அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

5.

பா. 5/2020

கௌரவ ஹேஷா விதானகே,— இரத்தினபுரி மாவட்டத்தில் வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தல்,— பாதகமான காலநிலை காரணமாக தொடர்ச்சியாக வெள்ளப் பெருக்கினால் அனர்த்தத்துக்கு உட்படும் இரத்தினபுரி மாவட்டத்தின் வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்துவதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்று அரசாங்கத்தினால் தயார் செய்யப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

6.

பா. 6/2020

கௌரவ ஹேஷா விதானகே,— எதிர்கால சந்ததியினருக்காக சப்ரகமுவாவுக்குத் தனித்துவமான மரபுரிமைகளைப் பாதுகாத்தல்,— கலை, விளையாட்டு போன்ற பல்வேறு துறைகளில் சப்ரகமுவாவுக்கு உரித்தான தனித்துவமிக்க பண்புகள் காணப்படுவதுடன், இன்று வர்த்தகமயமாக்கல் காரணமாக மேற்படி தனித்துவமிக்க பண்புகள் அழிவடைகின்ற அச்சுறுத்தல் காணப்படுவதனால் எதிர்கால சந்ததியினருக்காக சப்ரகமுவாவுக்கு தனித்துவமிக்க மரபுரிமைகளை பாதுகாக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றை தயார் செய்ய வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

7.

பா. 7/2020

கௌரவ ஹேஷா விதானகே,— இரத்தினபுரி மாவட்டத்தில் இயற்கை அனர்த்தங்களைக் குறைத்தல்,— தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கைகளுக்கு அமைய இரத்தினபுரி மாவட்டத்தில் இயற்கை அனர்த்தங்களுக்கு உட்படுகின்ற அச்சுறுத்தலைக் கொண்ட பல இடங்கள் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளதனால் மேற்படி நிலைமைகளை குறைப்பதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று அரசாங்கத்தினால் தயார்செய்யப்பட வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

8.

பா. 8/2020

கௌரவ ஹேஷா விதானகே,— இணையத் தளங்களில் ஆபாச காணொளிகள் உலாவுவதைத் தடுத்தல்,— தற்போது அதிகளவில் இணையத் தளங்கள் ஊடாக பல்வேறு ஆபாச காணொளிக் காட்சிகள் உலாவுவதன் மூலம் ஆட்களின் அந்தரங்கத்துக்கு பாதிப்பேற்படுவதோடு குறிப்பாக பெண்கள் அதன் மூலம் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதால், இவ்வாறான காணொளிக் காட்சிகளை தன் வசம் வைத்துள்ள, விநியோகிக்கின்ற மற்றும் உருவாக்குகின்ற ஆட்கள் தொடர்பாக புலனாய்வு செய்வதற்கு பயன்மிக்க சிறப்பு பிரிவொன்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினுள் தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

9.

பா. 9/2020

கௌரவ ஹேஷா விதானகே,– அறநெறிப் பாடசாலைக் கல்வியை கட்டாயப்படுத்தல்,– நாகரீகமான ஒரு சமூகத்துக்கு ஒவ்வாத வகையில் நாட்டினுள் பரவி வருகின்ற குற்றச் செயல்கள் மற்றும் சிறுவர் குற்றச்செயல்களை ஒழிப்பதற்கும் சுய ஒழுக்கக் கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்குமாக சகல பிள்ளைகளுக்கும் (11 ஆம் தரம் வரை) அவர்களது சமயங்களின் அடிப்படையில் அறநெறிப் பாடசாலைக் கல்வியைக் கட்டாயப்படுத்தல் உகந்ததென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

10.

பா. 10/2020

கௌரவ ஹேஷா விதானகே,— இலங்கையில் சகல தமிழ் மொழிமூல பாடசாலைகளிலும் சிங்கள மொழியில் கற்பித்தல்,— தேசிய நல்லிணக்கத்தையும் மற்றும் இனங்களுக்கிடையே பரஸ்பர புரிந்துணர்வையும் ஒற்றுமையையும் மேலும் பயனுறுதியான விதத்தில் கட்டியெழுப்புவதற்கான நீண்டகால இலக்குகளுக்கு அடியெடுத்து வைக்கும் நோக்கத்துடன், இலங்கையில் சகல தமிழ் மொழிமூல பாடசாலைகளிலும் சிங்கள மொழியில் கற்பிக்கும் பிரிவொன்று தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

11.

பா. 11/ 2020

கௌரவ புத்திக பத்திறண,— மன்னன் இராவணன் தொடர்பாக முறைசார்ந்த ஆய்வொன்றை மேற்கொள்ளல்,— மன்னன் இராவணன் தொடர்பாக உறுதியான வரலாற்றுச் சான்றுகள் இல்லாத போதிலும், முறைசார்ந்த ஆய்வொன்றின் மூலம் அவர் தொடர்பாக நாட்டு மக்களின் மனப்பாங்கினை மேம்படுத்துவதற்கும் மன்னன் இராவணனுக்கு இருந்த அறிவினை நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்துவதற்கும், இலங்கை வரலாற்றில் மறைந்துபோயுள்ள அத்தியாயமொன்றை வெளிக்கொண்டு வருவதற்கும் இயலுமாயுள்ளதால் புத்திஜீவிகள் குழுவொன்றின் மூலம் மன்னன் இராவணன் தொடர்பான ஆய்வொன்று மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

12.

பா.12/2020

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கைக்குத் தேவையான சீனியை நாட்டினுள்ளேயே உற்பத்தி செய்தல்,— சீனியை உற்பத்தி செய்வதற்குத் தேவையான வளங்களை இலங்கை தன்னகத்தே கொண்டிருப்பதால், சிறந்த முகாமைத்துவத்துடன், வினைத்திறனாகவும் திட்டமிட்ட வகையிலும் செயலாற்றி நாட்டுக்குத் தேவையான சீனியை உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்கும், சுத்திகரிப்பதற்கும் தேவையான தொழிற்சாலைகளை அரசாங்கம் தாபித்து சீனிக் கைத்தொழிற் துறையை பாதுகாத்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

13.

பா. 13/ 2020

கௌரவ புத்திக பத்திறண,— 60 வயதைத் தாண்டியுள்ளவர்களை சமூகத்தில் முனைப்பான நபர்களாக ஆக்குகின்ற வேலைத்திட்டமொன்றை தயாரித்தல்,— சமூக, பொருளாதார செயற்பாட்டின் முன்னேற்றத்திற்காக தமது உழைப்பை அர்ப்பணித்து, 60 வயதைத் தாண்டிய பின்னர் சமூகத்தில் முறையான அங்கீகாரம் இன்றி செயலிழந்து ஓரங்கட்டப்பட்டுள்ள முதியவர்களை, சமூகத்தின் முனைப்பான நபர்களாக ஆக்குவதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரிப்பதற்காக பாடசாலை சமுதாயம் உள்ளிட்ட முழுச் சமூகத்தையும் விழிப்புணர்வூட்டுகின்ற முறையியலொன்று உருவாக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

14.

பா. 14/ 2020

கௌரவ புத்திக பத்திறண,— மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறை தொடர்பில் பாடசாலை மாணவர்களின் அறிவை வளர்த்தல்,— இலங்கையின் எதிர்கால இளைஞர், யுவதிகளின் வேலைவாய்ப்புப் பிரச்சினைக்கான ஒரு தீர்வாகவும், மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறையில் ஏற்படும் வளர்ச்சிக்கு ஒப்பீட்டளவில் பயிற்றப்பட்ட ஊழியர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடனும் பாடசாலை பாடத் திட்டத்தில் மோட்டார் வாகன தொழில்நுட்பத்தை ஒரு பாடமாக உள்ளடக்குவதற்கான முறைசார்ந்த வேலைத் திட்டமொன்று ஏற்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

15.

பா. 15/ 2020

கௌரவ புத்திக பத்திறண,— முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் சார்ந்த தொழிலில் ஈடுபடுபவர்களின் தொழில் பாதுகாப்பினை உறுதிசெய்தல்,— முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் சார்ந்த நேரடி மற்றும் மறைமுக தொழில்களில் ஈடுபடுவதற்கு விருப்பம் கொண்டுள்ள இலங்கையில் வாழும் இளைஞர்கள், ஓய்வுபெற்ற முப்படை உத்தியோகத்தர்கள் மற்றும் மூத்த பிரஜைகள் ஆகிய சமூக குழுக்களின் பொருளாதார பலத்தை மேம்படுத்துவதன் மூலம் மொத்தத் தேசிய உற்பத்திக்கு அவர்களது பங்களிப்பை பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் குறித்த துறையில் ஈடுபட்டுள்ளவர்களது முனைப்புடனான பங்களிப்பை தேசிய பொருளாதாரத்திற்கு பெற்றுக் கொள்வதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று விரைவாக தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

16.

பா. 16/ 2020

கௌரவ புத்திக பத்திறண,— மோட்டார் வாகன தொழில்நுட்பக் கல்வி பாடத் திட்டங்களை இற்றைப்படுத்தல்,— மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறையுடன் தொடர்புடைய அரசாங்க தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களில் கற்பித்தல் நடவடிக்கைகள் 25-30 வருடங்கள் பழமையான பாடத் திட்டங்களின் கீழேயே நடைபெறுவதால், அந்நிலைமையை மாற்றியமைக்கும் பொருட்டு மேற்படி பாடத் திட்டங்களை இற்றைப்படுத்துவதற்கு முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று வகுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

17.

பா. 17/ 2020

கௌரவ புத்திக பத்திறண,— மோட்டார் வாகன தொழில்நுட்பக் கல்வியை கற்பிப்பதற்கான ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கு கல்வியியற் கல்லூரியொன்றை தாபித்தல்,— இலங்கையிலும் வெளிநாடுகளிலும் மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறையில் ஏற்படக்கூடிய வளர்ச்சிக்கேற்ப மேற்படி துறையில் பயிற்றப்பட்ட ஊழியர்களின் தேவையை பூர்த்தி செய்வதற்கேற்ற வகையில் பாடசாலை மட்டத்தில் அதனை கற்பிப்பதற்கான ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கு மோட்டார் வாகன தொழில்நுட்பத்துறை தொடர்பாக கல்வியியற் கல்லூரியொன்று தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

18.

பா. 18/2020

கௌரவ புத்திக பத்திறண,— முதியோர் சமூகம் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் பங்கேற்கச் செய்வதற்கு கடன் வழங்கும் வேலைத்திட்டமொன்றைத் தயார் செய்தல்,— 60 வயதைத் தாண்டியுள்ள முதியோர் சமுதாயத்தினரின் வாழ்வாதார வழிமுறைகளை வலுவூட்டி இலங்கையின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சியில் பங்கேற்கச் செய்வதற்கு வங்கி முறைமையின் ஊடாக கடன் வழங்கும் முறையியல் ஒன்று அமுல்படுத்தப்படாமையானது அவர்கள் சமூகத்தினுள் வித்தியாசமாகக் கவனிக்கப்படுவதாகும் என்பதால் அத்தகைய அநீதியான நிலைமையைத் தடுப்பதற்கு முறைசார்ந்த வேலைத் திட்டமொன்று உருவாக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

19.

பா. 19/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— வெளிநாட்டில் பணிபுரியும் ஊழியர்களுக்கு நலனோம்புகை வசதிகளை வழங்குதல்,— இலங்கைக்கு ஆகக்கூடிய அந்நியச் செலாவணியை ஈட்டித்தருவதில் பங்களிப்புச் செய்கின்ற வெளிநாட்டில் பணிபுரியும் ஊழியர்களின் குடும்பங்களின் நலனோம்புகைக்காக துரித நிகழ்ச்சித்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

20.

பா. 20/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— புகையிரதப் பெட்டிகளை உள்நாட்டில் உற்பத்தி செய்தல்,— புகையிரதத் திணைக்களம் பெருமளவு பௌதீக வளங்களையும் மனித வளங்களையும் கொண்டதொரு திணைக்களமாக இருப்பதாலும், இந்நாட்டிற்கு புகையிரதப் பெட்டிகள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும்போது பெருந்தொகையான பணம் வெளிநாடுகளைச் சென்றடைவதாலும், இந்நிலையைத் தடுப்பதற்கு புகையிரதப் பெட்டிகளை இந்நாட்டில் உற்பத்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

21.

பா. 21/2020

கௌரவ வேலு குமார்,— இலங்கையின் தபால் சேவையினை பெருந்தோட்டத் துறையில் ஒழுங்குமுறைப்படுத்துதல்,— இலங்கையினுள் தபால் சேவையானது விரிவாக்கப்பட்டிருப்பினும் இன்றளவிலும் பெருந்தோட்டத் துறையில் பணியாற்றுகின்ற மக்களுக்கான தபால் சேவைகள் ஒழுங்குமுறைப்படுத்தப்படாததால் அவர்கள் பலவிதமான சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாலும், சுமார் நூற்றி ஐம்பது வருடங்கள் பெருந்தோட்டத் துறையில் பணியாற்றுகின்ற மேற்படி மக்களுக்கான தபால் சேவையினை ஒழுங்குமுறைப் படுத்துவதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

22.

பா. 22/2020

கௌரவ வேலு குமார்,— மத்திய மாகாணத்தில் வனச் செய்கையை விருத்தி செய்தல்,— இலங்கையிலுள்ள அநேகமான நீரேந்தும் பிரதேசங்கள் மத்திய மலை நாட்டின் வலயங்களில் குறிப்பாக கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் அமைந்துள்ளதாலும், அத்தகைய நீரேந்தும் பிரதேசங்கள் பயினஸ் செய்கை காரணமாக கடுமையான பாதிப்புக்கு இலக்காகி உள்ளதாலும், வனச் செய்கைக்காக பயினஸ் மரங்கள் நாட்டப்படுவதை முழுமையாக நிறுத்த வேண்டியுள்ளதாலும், அவற்றை அகற்றி அதற்கு மாற்றீடாக இயற்கை வனச் செய்கை முறையை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தகுந்த நடவடிக்கையை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

23.

பா. 23/2020

கௌரவ வேலு குமார்,— மலைநாட்டு தோட்ட மக்களுக்கு குடிநீர் வழங்கல்,— மலைநாட்டில் தோட்டங்களைச் சார்ந்துள்ள பிரதேசங்களில் குடிநீர் வழங்கும் திட்டங்கள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படாத காரணத்தினால் அந்த மக்களின் குடிநீர்த் தேவை இயற்கை நீர் ஊற்றுக்கள், ஆறுகள், ஓடைகள் மற்றும் கிணறுகள் மூலம் பூர்த்தி செய்யப்படுவதாலும், தற்போதைய சனத்தொகை அதிகரிப்பு மற்றும் விவசாய இரசாயனப் பதார்த்தங்களின் மிகையான பயன்பாடு காரணமாக பயன்பாட்டுக்கு உகந்த நீரைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை உருவாகியுள்ளதால், அந்த மக்கள் பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாலும், தோட்டப் பிரதேசங்களில் காணப்படுகின்ற நீரை வெளிப் பிரதேசங்களுக்குக் கொண்டு செல்வதன் காரணமாக நீர்ப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாலும், நாட்டின் ஏனைய பாகங்களில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற குடிநீர் வழங்கல் திட்டங்களை இப்பிரதேசங்களிலும் நடைமுறைப்படுத்த வேண்டியதன் தேவை குறித்து கவனம் செலுத்தி அரசாங்கத்தின் குடிநீர் வழங்கல் வேலைத்திட்டத்தில் தோட்டப் பிரதேசங்களையும் உள்வாங்கத் தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

24.

பா. 24/2020

கௌரவ வேலு குமார்,— மலைநாட்டு தொழிற்சங்க வீரர்கள் தினத்தை அங்கீகரித்தல்,— இலங்கை வரலாற்றில் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பினை வழங்குகின்ற மலைநாட்டுத் தோட்டத் தொழிலாளர்கள் தமது உரிமைகளை சனநாயகப் போராட்டங்கள் ஊடாக வென்றெடுத்துள்ளதால், அவ்வாறான போராட்டங்களில் உயிர் நீத்த தொழிற்சங்க வீரர்களை பொதுவான நாளொன்றில் நினைவுகூர வேண்டுமென்ற இலங்கை வாழ் இந்திய வம்சாவழி மலைநாட்டு மக்களின் நீண்ட கால கோரிக்கையினைக் கருத்தில் கொண்டு அதன் பிரகாரம் சனவரி 10 ஆம் திகதியன்று மலைநாட்டு தொழிற்சங்க வீரர்கள் தினத்தை அனுஷ்டிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

25.

பா. 25/2020

கௌரவ வேலு குமார்,— தோட்டங்கள் சார்ந்து காணப்படுகின்ற வீதிகளை அரசாங்கத்திற்குச் சுவீகரித்தல்,— இலங்கையில் பெருந்தோட்டத்துறைக்கு முக்கியமான இடம் வழங்கப்படுகின்றதோடு, தோட்டங்களின் உரிமை, முகாமைத்துவம் மற்றும் நிருவாகம் பல்வேறு காலக் கட்டங்களில் மாற்றங்களுக்குள்ளாகி வருவதாலும், தோட்டத் தொழிலாளர்களின் வாழ்விடங்கள் பிரதான வீதியிலிருந்து நீண்ட தூரத்தில் தோட்டங்களின் நடுவில் அமைந்துள்ளதாலும், இம்மக்கள் பயன்படுத்தும் தோட்ட வீதிகள் அபிவிருத்தி செய்யப்படாது மிகவும் மோசமான நிலையில் காணப்படுவதாலும் இந்த வீதிகளை உள்ளூராட்சி மாகாண சபை வீதிகளின் கீழ் கொண்டு வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

26.

பா. 26/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— சகல அரச நிறுவனங்களையும் அரசுக்குச் சொந்தமான கட்டிடங்களில் நிலையப்படுத்தல்,— பொது மக்களின் வரிப் பணத்தில் பேணப்படுகின்ற அரச நிறுவனங்களை தனியார் கட்டிடங்களில் நிலையப்படுத்துவதன் மூலம் பெருந்தொகை பணம் வீணாக செலவாவதாலும், மேற்படி நிறுவனங்களை அரச கட்டிடங்களில் நிலையப்படுத்துவதன் மூலம் பெருமளவு பணத்தை சேமிக்க முடியுமென்பதாலும், சகல அரச நிறுவனங்களையும் அரசுக்குச் சொந்தமான கட்டிடங்களில் மாத்திரம் நிலையப்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

27.

பா. 27/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— வீழ்ச்சியடைந்துள்ள நிதி நிறுவனங்களை மீளக் கட்டியெழுப்புதல்,— ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் நிதிச் சந்தை மீது நிதி நிறுவனங்கள் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்துகின்ற போதிலும், கடந்த காலம் பூராகவும் இந்நாட்டின் சில நிதி நிறுவனங்கள் வீழ்ச்சியடைந்துள்ளமையினாலும், அதன் வைப்பாளர்கள் பொதுவாகப் பல பிரச்சனைகளுக்கு முகங் கொடுத்துள்ளமையினாலும் குறிப்பிட்ட நிதி நிறுவனங்களை மீள்கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் துரித வேலைத்திட்டமொன்றை தயார் செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

28.

பா. 28/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்நாட்டு டின் மீன் உற்பத்தியை அதிகரித்தல்,— இலங்கையைச் சூழ கடல் காணப்படுகையில், நாட்டுக்குத் தேவையான டின் மீன்களை இறக்குமதி செய்வதற்காக வருடாந்தம் பெருந்தொகை நிதி வெளிநாடுகளுக்குச் செலவிட வேண்டி ஏற்படுவதனால் இந்நிலைமையைத் தவிர்ப்பதற்காக உள்நாட்டு டின் மீன் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக துரித வேலைத்திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

29.

பா. 29/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளூராட்சி நிறுவனங்களினால் கழிவகற்றப்படுதல்,— இலங்கையில் பெரும்பாலான உள்ளூராட்சி நிறுவனங்கள் கழிவுகளை அகற்றும் பொறுப்பினை இன்றளவில் தனியார் கம்பனிகளுக்குக் கையளித்துள்ளமையின் காரணமாக, வரி செலுத்தும் மக்களது பெருந்தொகை நிதி குறிப்பிட்ட கம்பனிகளைச் சென்றடைவதனால், குறித்த பணிகளை குறிப்பிட்ட உள்ளூராட்சி நிறுவன ஊழியர்களை ஈடுபடுத்தி மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

30.

பா. 30/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளூராட்சி நிறுவனங்களில் பழுதடைந்துள்ள வாகனங்களைத் திருத்துதல்,— பெரும்பாலான உள்ளூராட்சி நிறுவனங்களின் பழுதடைந்த நிலையில் காணப்படும் வாகனங்கள் குவித்து வைக்கப்பட்டுள்ள நிலையானது மிக சாதாரண ஒரு காட்சியாக அமைந்துள்ளதாலும், குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு புதிதாக வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்குப் பதிலாக, இந்த வாகனங்களை திருத்துவதன் மூலம் பெருந்தொகை நிதியை மீதப்படுத்த முடியுமென்பதாலும், உள்ளூராட்சி நிறுவனங்களின் வாகனங்களைத் திருத்துவதற்கான துரித வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயார் செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

31.

பா. 31/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வெற்றிலைப் பயிர்ச் செய்கையாளர்களின் பிரச்சினைகளைத் தீர்த்தல்,— வடமேல் மாகாணத்தில் கணிசமானளவு குடும்பங்கள் வெற்றிலைச் செய்கையில் ஈடுபட்டுள்ளதுடன் தற்போது குறித்த வெற்றிலைப் பயிர்ச் செய்கையாளர்கள் பல பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளமையால், இந்நிலைமையை தணிப்பதற்காக துரித வேலைத்திட்டமொன்று அரசாங்கத்தினால் தயார் செய்யப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

32.

பா. 32/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வடமேல் மாகாணத்தில் தரிசு நிலங்களாக மாறியுள்ள வயல்களில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளுதல்,— ஒரு நாட்டின் அபிவிருத்தியில் உணவுப் பாதுகாப்பு மிகவும் முக்கியத்துவம் பெறுவதனால் வடமேல் மாகாணத்தில் தற்போது தரிசு நிலங்களாக காணப்படுகின்ற வயல்களில் மீண்டும் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கான துரிதமானதும் பொருத்தமானதுமான வேலைத்திட்டமொன்று அரசாங்கத்தினால் தயார்செய்யப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

33.

பா. 33/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— குருநாகல் மாவட்டத்தில் யானை-மனித மோதலைத் தீர்த்தல்,— வடமேல் மாகணத்தில் குருநாகல் மாவட்டத்திலுள்ள ஏராளமான கிராமங்களில் யானை - மனித மோதல் மிக உக்கிரமாக காணப்படுவதனால் அதற்கான நிரந்தரத் தீர்வாகப் பொருத்தமான வேலைத்திட்டமொன்று அரசாங்கத்தினால் தயார்செய்யப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

34.

பா. 34/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— குருணாகல் மாவட்டத்தில் சிறு குளங்களை மறுசீரமைத்தல்,— வடமேல் மாகாணத்திலுள்ள அதிகமானோர் கமத்தொழில் சார்ந்த தொழில்களில் ஈடுபடுவதானலும், அம்மக்களுடைய வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்காக நீர் அத்தியாவசியமான காரணியொன்றாக அமைந்துள்ளதாலும் வடமேல் மாகணத்தில் காணப்படுகின்ற சிறு குளங்கள் அனைத்தையும் மறுசீரமைப்பதற்காக அரசாங்கத்தினால் உரிய நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

35.

பா. 35/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— குருணாகல் மாவட்டத்திலுள்ள தொல்பொருள் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பாதுகாத்தல்,— குருநாகலை மாவட்டத்திலுள்ள பெரும்பாலான பிரதேசங்களில் தொல்பொருள் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் காணப்படுவதால், எதிர்கால சந்ததியினருக்காக அவற்றைப் பாதுகாப்பதற்கு துரித வேலைத் திட்டமொன்று அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

36.

பா. 36/2020

கௌரவ எச். நந்தசேன,— வன எல்லைகள் விரிவாக்கப்படுவதன் விளைவாக விவசாயிகள் பல வருடங்களாக பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்திய காணிகளை அவர்கள் இழக்க நேரிடுவதால் ஏற்படும் பாதக நிலையை தடுத்து நிறுத்துதல்,— வன வளங்கள் மற்றும் சுற்றாடல் அமைச்சினால் விடுக்கப்பட்டுள்ள 2001.08.10 ஆம் திகதிய 5/2001 ஆம் இலக்கமுடைய சுற்று நிருபத்தினை அடிப்படையாகக் கொண்டு வன எல்லைகளை விரிவாக்கும் போது நீண்டகாலமாக பயிர்செய்கையில் ஈடுபடுத்தப்பட்ட விவசாயக் காணிகள் வன எல்லைகளுக்கு உள்வாங்கப் படுவதால் சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு அநீதி ஏற்பட்டுள்ளதாலும், சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் பொறுப்பற்ற விதத்தில் பணியாற்றியுள்ளதாலும், இப்பாதக நிலைக்கு முகம் கொடுத்துள்ள அப்பாவி விவசாயிகளுக்கு நீதியை நிலைநாட்டுவதற்கு அரசாங்கத்தினால் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

37.

பா. 37/2020

கௌரவ எச். நந்தசேன,— அரச பாடசாலைகளில் 15 வருடங்களுக்கு மேலாக கற்பித்தல் பணிகளில் ஈடுபட்ட சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு ஆசிரியர் பயிற்சியினை வழங்கி ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்த்துக்கொள்ளுதல்,— பயங்கரவாதத் தாக்குதல்கள் உக்கிரமடைந்திருந்த காலகட்டத்தில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருந்த கிராமங்களில் அமைந்திருக்கும் பாடசாலைகளில் பெருமளவு ஆசிரியர் பற்றாக்குறை நிலவியதன் காரணமாக இன்று வரை, பாடசாலை மாணவர்களுக்கான கற்பித்தல் நடவடிக்கைகளில் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஈடுபட்டதாலும், வடக்கு கிழக்கு மாகாணங்களில் அத்தகைய உத்தியோகத்தர்கள் ஆசிரியர் சேவைக்கு உள்வாங்கப் பட்டுள்ளதாலும், வடமத்திய மாகாணத்தின் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களையும் அரச சேவைக்கு உள்வாங்கிக் கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

38.

பா. 38/2020

கௌரவ புத்திக பத்திறண,— உள்நாட்டு அரிசி வகைகளின் போசாக்குக் குணம் தொடர்பில் மக்களை விழிப்புணர்வூட்டல்,— தற்போது இலங்கையிலுள்ள சந்தைகளில் கிடைக்கின்ற பழைய உள்நாட்டு அரிசி மற்றும் தற்போது பயன்படுத்தப்படுகின்ற புதிய அரிசி வகைகளின் போசாக்குக் குணம் தொடர்பாகவும், பல்வேறு நோய்களால் பீடிக்கப்பட்டுள்ளவர்கள் நுகர வேண்டிய அரிசி வகைகள் தொடர்பில் மக்களை விழிப்புணர்வூட்டல் மற்றும் விவசாயிகள் அத்தகைய நெல் வகைகளை பயிரிடுவதற்கு வசதிகளை ஏற்படுத்துவது தொடர்பாகவும் அரசாங்கம் தேசிய மட்டத்திலான நிகழ்ச்சித் திட்டமொன்றைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

39.

பா. 39/2020

கௌரவ புத்திக பத்திறண,— ஆக்கிரமிப்புச் செடிகள் மற்றும் விலங்குகள் காரணமாக உயிரினப் பல்வகைமைக்கு ஏற்படுகின்ற பாதிப்பினைக் குறைத்தல்,— இலங்கையின் உயிரினப் பல்வகைமைக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய ஆக்கிரமிப்புச் செடிகள் மற்றும் விலங்குகளை இனங்கண்டு, அவற்றைப் பெயரிடுவதன் மூலம் அத்தகைய செடிகள் மற்றும் விலங்குகள் பெருகச் செய்யப்படுவதையும், இறக்குமதி செய்யப்படுவதையும் தடை செய்து இலங்கையின் சுற்றுச் சூழலைப் பாதுகாக்க அரசாங்கம் இடையீடு செய்து துரிதமாக தேவையான சட்டங்களை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

40.

பா. 40/2020

கௌரவ குணதிலக்க ராஜபக்ஷ,— உள்நாட்டு விவசாய உற்பத்திகளின் உயர் விளைதிறன் கருதி வன விலங்குகளினால் ஏற்படுத்தப்படுகின்ற பயிர்ச் சேதத்தினைத் தடுத்தலும் பயிர் நட்டஈடு வழங்குதலும்,— சிறிய அளவிலான மற்றும் வீட்டுத்தோட்டச் செய்கையாக விவசாயத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் பயிரிடுகின்ற சாதிக்காய், கிராம்பு, மிளகு, தேங்காய், பல்வேறு பழ வகைகள் போன்ற நிரந்தரப் பயிர்கள் மற்றும் கிழங்கு, வெங்காயம், மரக்கறிகள், நெல் போன்ற போகப் பயிர்களுக்கு மந்திகள், காட்டுப் பன்றிகள், முள்ளம்பன்றிகள், யானைகள் போன்ற பல்வேறு வன விலங்குகளினால் ஏற்படுத்தப்படுகின்ற பாதிப்பைத் தடுப்பதற்காக சம்பந்தப்பட்ட சகல அமைச்சுகளும் இணைந்து தேசிய விவசாய உற்பத்திப் பாதுகாப்புக் கொள்கையொன்றை நடைமுறைப்படுத்தும் தேசிய வேலைத்திட்டமொன்றை தயாரிப்பதற்கும், வன விலங்குகளினால் ஏற்படுத்தப்படுகின்ற பயிர்ச் சேதத்திற்கான முழுமையான இழப்பீட்டினை வழங்கும் பயிர்க் காப்புறுதித் திட்டமொன்றை உருவாக்குவதற்காகவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

41.

பா. 41/2020

கௌரவ குணதிலக்க ராஜபக்ஷ,— அறநெறிப் பாடசாலைக் கல்வியை மேம்படுத்துவதற்குத் தேவையான பௌதீக வளங்களை வழங்குதல்,— அறநெறிப் பாடசாலைக் கல்வியின் மூலம் நற்பண்புகளுடன் கூடிய ஒழுக்கசீலமான சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்கான அடிப்படையினை உருவாக்க முடியுமென்ற போதிலும்,மேற்படி பாடசாலைகளில் நிலவும் பௌதீக வளப் பற்றாக்குறையினால் ஏற்படுகின்ற சிரமங்கள் காரணமாக அநேகமான பிள்ளைகள் அறநெறிப் பாடசாலைக் கல்வியில் கவனம் செலுத்தாத காரணத்தினால், நாட்டின் பெரும்பாலான அறநெறிப் பாடசாலைகளுக்கு அத்தியாவசிய மாணவர் மேசைகள், வாங்குகள், ஆசிரியர் மேசைகள், கரும்பலகைகள், வெண்பலகைகள், மற்றும் அதன் சிறு அறநெறி நூலகங்களுக்கான புத்தக அலுமாரிகளை வழங்குவதற்கும், அறநெறிப் பாடசாலைப் பிள்ளைகளுக்கு சிறுமியர் சீருடை (லமா சாரி), தேசிய உடை மாதிரியான உடையொன்றுக்குத் தேவையான துணிகளை வழங்குவதற்கும், தனியார் துறையினர் மற்றும் கொடையாளிகளினதும் பங்களிப்புடன் அரசாங்கம் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

42.

பா. 42/2020

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கு தேசிய அபிவிருத்தி வங்கியொன்றையும் பொருளாதார தலைமைத்துவமொன்றையும் கட்டியெழுப்புதல்,— இலங்கையில் அதிக வட்டிக்கு இயங்குகின்ற நுண்நிதிக் கடன்கள், நிதி நிறுவனக் கடன்கள் மற்றும் குத்தகைக்கடன்கள் பொறியிலிருந்து சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில்முயற்சியாளர்களை மீட்டெடுத்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தையினை இலக்காகக் கொண்ட புத்தாக்க மற்றும் பெறுமதி சேர்க்கின்ற தொழில்முயற்சிகளில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கு, கமத்தொழில் உற்பத்தியாளர்களுக்கு மற்றும் சேவை வழங்கும் தொழில்முயற்சியாளர்களுக்கு தளர்த்தப்பட்ட நிபந்தனைகள் மற்றும் தளர்த்தப்பட்ட வட்டித் தொகையொன்றுக்கு நீண்ட காலமாக செலுத்தும் வகையிலான நிதிக் கடன்களை வழங்கும் வங்கியொன்றை தாபிப்பதற்கும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்கு மற்றும் தொழில்முயற்சி பொருளாதார தலைமைத்துவமொன்றை கட்டியெழுப்புவதற்கும், இன்றளவில் தொழில்முயற்சித் துறையின் வளர்ச்சிக்கு உதவுகின்ற சகல நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து உள்நாட்டு தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் பொருளாதார மீளெழுச்சி செயலணியொன்றை உருவாக்கும் பொருட்டு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

43.

பா.43/2020

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களைத் தரப்படுத்தல்,— ஒரு நாட்டின் எதிர்கால பிரசைகள் புத்திசாதுர்யமிக்கவர்களாவதற்கு முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தியானது அடிப்படையாக அமைவதனால் நாட்டிலுள்ள முன் பள்ளிகள், சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் மற்றும் முன் பிள்ளைப் பருவ நிலையங்களை உயர் தரத்தில் பேணிச் செல்ல வேண்டும் என்பதாலும் அந்த நிலையங்களைப் பதிவுசெய்து அவை உரிய தர நியமங்களுக்கு அமைவாக பேணிச் செல்லப்படுவதனை ஒழுங்குபடுத்துவதற்கும், அவற்றைப் பேணிவரும் முயற்சியாளர்கள் மற்றும் பதவியணியினரிடம் தேசிய தொழில்திறன் சான்றிதழ்கள் (NVQ) இருப்பதனை கட்டாயமாக்குவதற்கும், அவ்வாறான நிலையங்களில் இருக்க வேண்டிய இடவசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான பரிந்துரைகளை சட்டமாக்குவதற்கும், அவற்றில் பணியாற்றுபவர்களுக்கு பங்களிப்பு ரீதியிலான சமூக பாதுகாப்பு முறையிலொன்றை உருவாக்குவதற்கும், நாட்டிலுள்ள சகல கிராம சேவகர் பிரிவுகளிலும் அவ்வாறான நிலையங்களை ஆரம்பிப்பதற்காக சலுகை வட்டிக்கு கடன் வசதிகளை வழங்குவதற்கும், தேவையான கொள்கைகள் மற்றும் சட்டங்களை உருவாக்கி தேசிய முன்பிள்ளைப் பருவ அபிவிருத்திக் கொள்கையொன்றை ஆக்குவதற்கும் பொருத்தமான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

44.

பா. 44/2020

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— இருபத்தொறாம் நூற்றாண்டின் மூன்றாம் தசாப்தத்தின் சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய கூட்டுறவு இயக்கமொன்றை உருவாக்குதல்,— இலங்கையில் தற்போதுள்ள கூட்டுறவு முறையானது இன்றைக்கு அரை நூற்றாண்டுக்கு முன்னர் நியமிக்கப்பட்ட கூட்டுறவு மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவாக உருவாக்கப்பட்ட ஒரு முறை என்பதாலும், இந்த இயக்கமானது இருபத்தொறாம் நூற்றாண்டின் மூன்றாம் தசாப்தத்தின் சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய அதாவது சுயஉதவி, பரஸ்பர உதவி, மற்றும் சிக்கனம் ஆகிய கூட்டுறவு கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு இந்நூற்றாண்டின் சவால்களை வெற்றி கொள்ளத்தக்க நவீன தொழில் நுட்ப பயன்பாட்டின் ஊடாக பாரிய வர்த்தக வலையமைப்புக்களுடன் சிறந்த முறையில் போட்டியிடக் கூடியவாறு விவசாயத் துறையின் மேம்பாட்டுக்கும் மூலதனப் பிரச்சனை மற்றும் சந்தைப் பிரச்சினைகளுக்கு வெற்றிகரமான மாற்று வழியாகவும் ஏற்றுமதித் துறையின் மேம்பாட்டுக்கும் ஈடுபடுத்தத்தக்க அதிக சொத்துக்களைக் கொண்ட துறை என்பதாலும் தற்போதைய கூட்டுறவு முறையில் மேற் குறிப்பிட்ட நோக்கங்களை மேம்பாடு செய்வதற்காக ஏற்புடைய புதிய கொள்கைகள் மற்றும் சட்டங்களை உருவாக்கி, கூட்டுறவு இயக்கத்தின் உண்மையான உரிமையாளர்களான கூட்டுறவு பங்குரிமையாளர்களின் அதிகாரத்தை அதிகரித்து கூட்டுறவு இயக்கத்தினை முழுமையாக மறுசீரமைப்பதற்கு அரசாங்கத்ததினால் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

45.

பா. 45/2020

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் பெண்களின் முன்னேற்றத்தை உறுதிப்படுத்துதல்,— பெண்களின் உடல், உள, சமூகப் பாதுகாப்பு மற்றும் முன்னேற்றத்தை ஏற்படுத்துவது நாட்டின் முக்கிய அபிவிருத்தி தேவைப்பாடொன்றாக இருப்பதனால், பெண்கள் உரிய முறையில் நடத்தப்படாமைக்கு எதிராக வழக்கு விசாரணை மூலம் தண்டனை விதிப்பதற்குப் பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல் துஷ்பிரயோம், பருவமடையாத சிறுமியர் அல்லது பெண்களை வன்புணர்தல் தொடர்பில் பிணை வழங்கப்படாத சட்டங்களை ஆக்குவதற்கும், பொலிஸ் மகளிர் மற்றும் சிறுவர் பிரிவின் தத்துவங்களை விஸ்தரிப்பதற்கும், பராமரிப்பு மற்றும் விவாகரத்து வழக்குகளை தாமதிக்காது தீர்த்து வைப்பதற்கு பொருத்தமான நீதிமன்ற செயன்முறையை ஏற்படுத்துவதற்கும், பஸ் வண்டிகளில் பெண்களுக்கு ஒரு பக்கமாக ஆசன வரிசையை ஒதுக்குவதற்கும், நுண் நிதிக் கம்பனிகளின் சுரண்டலுக்கு ஆளாவோரின் கடனை பதிவழிப்பு செய்வதற்கான சட்டங்களை ஆக்குவதற்கும், ஒவ்வொரு வீட்டுக்கும் நீர் மற்றும் சமையல் நடவடிக்கைகளுக்கு குறைந்த செலவைக் கொண்ட எரி சக்தியை உறுதி செய்வதற்கும், சமயலறை உபகரணங்களை சலுகை வட்டி அடிப்படையில் கொள்வனவு செய்வதற்காக வங்கி வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும், விதவைப் பெண்களுக்கு கணவர் பெற்றுக் கொண்ட சம்பளம் வழங்கப்படுவதை சட்டமாக்குவதற்கும், தொழில் வாய்ப்பற்ற விதவைகளுக்கு தங்கியிருத்தல் கொடுப்பனவொன்றை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொடுப்பதற்கும், சமமான சேவைக்கு சமமான சம்பளத்தைப் பெற்றுக் கொடுப்பதை சட்டமாக்குவதற்கும், பெண்களின் உற்பத்திகளை சந்தைப்படுத்தலுக்கு தகுந்த சந்தைப்படுத்தல் வலையமைப்பை ஏற்படுத்தவும் தேவையான கொள்கைகள் மற்றும் சட்டங்களை ஆக்குவதற்கும், அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

46.

பா. 46/2020

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையின் அபிவிருத்தியை மேம்படுத்தல்,— இரத்தினக்கல் படிமங்கள் உள்ள காணிகளை இனங்காண்பது முதல் இரத்தினக்கல் சந்தைப்படுத்தல் வரையிலான நடவடிக்கைகளில் பல்வேறுபட்ட தரப்பினர்கள் சம்பந்தப்படுவதும் பல்வேறு கட்டமைப்புகள் செயற்படுவதும் இடம்பெறுகின்ற போதிலும், அவற்றுக்கு இடையிலான இடைத்தொடர்புகள் காணப்படாமை இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்கும் அபிவிருத்திக்கும் பாரிய தடையாக அமைவதால் இக்கைத்தொழில் தொடர்பான தேசிய முன்னுரிமைகளை உள்ளடக்கிய தேசிய கொள்கையை வகுத்து கைத்தொழிலின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவது சம்பந்தமான இடைத்தொடர்பை கட்டியெழுப்புவதற்கும் பெறுமதி சேர்க்கப்பட்ட இரத்தினக்கல் அல்லது இரத்தினக்கல் பயன்படுத்தப்பட்ட தயாரிப்புகளை ஊக்குவிப்பதற்கும் வரிச் சலுகை உள்ளிட்ட சலுகைகளை பெற்றுக் கொடுப்பதற்கும் இரத்தினக் கல் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள சுரங்கப் பணியாளர்களின் உயிருக்குள்ள அச்சுறுத்தல் மற்றும சுரங்கங்கள் மூலம் சுற்றாடலுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகளை ஈடுசெய்வதற்கான காப்புறுதித் திட்டமொன்றை ஏற்படுத்துவதற்கும் அகழ்வு உரிமைப் பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதனை முன் நிபந்தனையாக சட்டமாக்குவதற்கும், இரத்தினக்கல் உரிமையாளர்களுக்குக் கிடைக்கும் நிதியை மீள் முதலீடு செய்வதற்கான வாய்ப்புக்களை விஸ்தரிப்பதற்கும், இரத்தினக்கல் கொள்வனவுக்காக வருகைதரும் வெளிநாட்டவர்களுக்கு விதிக்கப்படுகின்ற கட்டுப்பாடுகளை நீக்குவதற்கும், இரத்தினக்கல் கட்டுப்பாடுகளை நீக்குவதற்கும் இரத்தினக்கல் பயன்படுத்தி கைப்பணி உற்பத்திகள் உள்ளடங்கலாக மனைசார் கைத்தொழில் வரை உற்பத்திகளை பல்வகைப்படுத்துவதற்கும் சந்தைப்படுத்தல் வரை சகல துறைகளிலும் புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்தவும் பொருத்தமான கொள்கைகள் மற்றும் சட்டங்களை ஆக்குவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

47.

பா. 47/2020

கௌரவ குணதிலக்க ராஜபக்ஷ,— சிறு ஏற்றுமதிப் பயிர்கள் பொருளாதார நிலையம் உட்பட ஏற்றுமதி விவசாயப்பயிர்கள் தொடர்பான புத்தாக்க கைத்தொழில் வலயமொன்றினை உருவாக்குதல்,— ஆரம்ப காலத்தில் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட சிறு ஏற்றுமதிப் பயிர்களின் மரபுரிமையாக காணப்பட்ட "சிலோன் ஸ்பைசஸ்" என்ற நற்பெயரை மீளக் கட்டியெழுப்பி உலக சந்தையை வெற்றிகொள்வதற்காக சிறு ஏற்றுமதிப் பயிர்களை பாரிய அளவில் உற்பத்தி செய்யும் மாவட்டங்களை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார நிலையங்களை உள்ளடக்கியதாக அப்பயிர்கள் தொடர்பில் பெறுமதிசேர் புத்தாக்கக் கைத்தொழில் வலயங்களை உருவாக்குமாறும் இந்த ஏற்றுமதி உற்பத்திகளுக்கு தற்போது விதிக்கப்பட்டுள்ள வரிக் கொள்கையை மீளாய்வு செய்து ஏற்றுமதி விவசாயப் பயிர் கைத்தொழிற்துறையின் முன்னேற்றத்திற்கு பொருந்தும் வகையிலான வரிக் கொள்கை ஒன்றினை உருவாக்குமாறும் சிறு ஏற்றுமதிப் பயிர் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்கு உதவியாக அறுவடை விற்பனையின் பின்னர் கொடுப்பனவினை மேற்கொள்ளக் கூடிய முறையிலான கடன் வசதிகளை பெற்றுக் கொடுத்தல் மற்றும் அதனோடு விவசாயக் காப்புறுதி ஒன்றினையும் விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுக்கும் முறைமையொன்றினை ஏற்படுத்துவதற்கும் அரசாங்கத்தினால் அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

48.

பா. 48/2020

கௌரவ குணதிலக்க ராஜபக்ஷ,— கண்டிய நடனம், பாரம்பரிய கலைகள், மர வேலைப்பாடுகள், சிற்பங்கள் மற்றும் கட்டிட நிர்மாணங்களை உலக மரபுரிமைகளாக பிரகடனப்படுத்தல் மற்றும் அவற்றை பாதுகாத்தல்,— இலங்கையின் வரலாற்றுப் பெருமையையும் அடையாளத்தினையும் வெளிப்படுத்தும் பாரம்பரிய கண்டிய நடனங்கள் மற்றும் கலைகள், ஓவியங்கள், மரவேலைப்பாடுகள், சிற்பங்கள் மற்றும் கட்டிட நிர்மாணங்கள் எமது நாட்டுக்கேயுரியதும் மிக அரிதான கலாசார மற்றும் கலைகள் என்ற காரணத்தினாலும் அவற்றை உலக மரபுரிமைகளாக பிரகடனப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளமாறும் மேற்படி மரபுரிமைகளைப் பாதுகாத்து பேணிச் செல்லும் கலைஞர்களது சமூக, பொருளாதார அபிவிருத்தியை மேற்கொள்வதற்கும், கண்டிய மரபுரிமைகளை பாதுகாத்து, மேம்படுத்தி, முறையாக நிர்வாகம் செய்வதற்கு சட்ட ரீதியான மன்றம் ஒன்றையோ அல்லது சபையொன்றினையோ ஸ்தாபிப்பதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

49.

பா. 49/2020

கௌரவ குணதிலக்க ராஜபக்ஷ,— இலங்கையின் வெளிநாட்டுச் சேவை அலுவல்களை மேம்படுத்துதல்,— இலங்கையின் மொத்தத் தேசிய வருமானத்தில் 8% அளவு பங்களிப்பு வெளிநாட்டிலுள்ள ஊழியப்படையின் மூலம் கிடைக்கப் பெறுவதனால் குறித்த துறையினை மேம்படுத்துவதற்காகவும், வெளிநாட்டு ஊழியக் கேள்விக்கு இணையாக ஊழியர்களைப் பயிற்றுவிக்கும் நிறுவனமொன்றைத் ஸ்தாபிப்பதற்கும், வெளிநாட்டிலுள்ள பிரஜைகளுக்கு வாக்களிக்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும், அவர்களுக்கான பங்களிப்பு ரீதியிலான ஓய்வூதியச் சம்பளம் போன்ற சமூகப் பாதுகாப்பு முறைமை ஒன்றினை ஏற்படுத்துவதற்கும், வெளிநாட்டுச் சேவை காரணமாக ஏற்படக் கூடிய தவிர்க்க முடியாத துர்ப்பாக்கிய நிலைமைகளின் போதும், ஏற்படக் கூடிய விபத்துக்களின் போதும் நட்டஈடு வழங்கக் கூடியவாறான காப்புறுதி முறைமையொன்றினை ஏற்படுத்துவதற்கும், அவர்களது சேமிப்புகளுக்கு அதிகளவான வட்டியினை வங்கிகளினுடாகப் பெற்றுக் கொடுப்பதற்கும், அவர்களது வீடுகளை நிர்மாணிப்பதற்காக சலுகை அடிப்படையிலான வட்டி மற்றும் கடன்களை வழங்குவதற்கும், அரசாங்க தொழில் வாய்ப்புக்களை வழங்குகையில் வெளிநாட்டிலுள்ள பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு முன்னரிமை அளிப்பதற்கும் இலங்கைத் தூதுவராலயங்கள் மற்றம் உள்நாட்டு, வெள்நாட்டு தொழில் முகவர் நிறுவனங்கள் மூலமாக இடம்பெறுகின்ற முறைகேடுகளைத் துரிதமாக தீர்ப்பதற்கு பொருத்தமான முறைமையொன்றினை உருவாக்குவதற்கும் ஊழியர்களைப் பதிவு செய்கையில் அறவீடு செய்யப்படுகின்ற கட்டணங்களில் இருந்தும் மற்றும் வீட்டுப் பணிக்காக வெளியேறுகையில் முகவர் நிலையம் வழங்கும் பணத்தொகையில் குறிப்பிட்ட ஒரு தொகையினைப் பெற்றுக் கொண்டு அதன் மூலம் குடியகல்வுக்கு முன்னரும் அதன் பின்னருமான நம்பிக்கைப் பொறுப்பொன்றினை ஏற்படுத்துவதற்கும் அரசாங்கத்தினால் பொருத்தமான வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்படல் வேண்டும் எனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

50.

பா. 50/2020

கௌரவ எச். நந்தசேன,— 40 வருடங்களுக்கும் அதிகமான காலம் நிரந்தர வீடுகளில் குடியுள்ள (அனுமதிப்பத்திரம் உள்ள அல்லது இல்லாத) குடியிருப்பாளர்களுக்கு காணிகளின் உரிமையை வழங்குதல்,— 40 வருடங்களுக்கும் அதிகமான காலம் நிரந்தர வீடுகளை நிர்மாணித்து குடியிருந்த வேளையில் பிற்காலத்தில் வனசீவராசிகளுக்கான பிரதேசங்களாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுதல் அல்லது மக்கள் விழிப்பூட்டப்படுதல் காரணமாக ஜயபூமி உறுதிகள் அல்லது வேறு அளிப்புப் பத்திரங்கள் கிடைக்கப் பெற்றுள்ள போதிலும், அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளும் இடைநிறுத்தப்பட்டதன் விளைவாக பதவிய – கெப்பிட்டிகொல்லாவ வீதியிலுள்ள வீடுகள், நகரம் மற்றும் ஆதார வைத்தியசாலை நிலம் மற்றும் மிஹிந்தலை இலக்கம் 564 பொத்தானை துலானேயிலுள்ள வீடுகள், அறுதியுறுதி அல்லது வரைபடங்களூடான வயற்காணிகளைக் கொண்ட குடியிருப்பாளர்களுக்கு பாரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளதால் மேற்படி காணிகளை விடுவித்துத் தருவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

51.

பா. 51/2020

கௌரவ எச். நந்தசேன,— வடமத்திய மாகாணத்தின் அனைத்துக் கிராமங்களிலும் ஊடுகலப்பு நீர்வடி முறைமைகளைப் பொருத்துதல்,— மூல காரணம் இனங்காணப்படாத சிறுநீரக நோயாளர்களை அதிகமாகக் கொண்டுள்ள பிரதேசமாக இனங்காணப்பட்டுள்ள வடமத்திய மாகாணத்தில் தற்போது நீர்வடி முறைமைகள் பொருத்தப்பட்டு வருவதாலும், அதன் காரணமாக அதிகரித்து வரும் நோயாளர் எண்ணிக்கையில் கணிசமான குறைவு காணப்படுவதாலும் சகல கிராமங்களிலும் நீர்வடி முறைமைகள் பொருத்தப்படும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தும் வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

52.

பா. 52/2020

கௌரவ எச். நந்தசேன,— அனைத்துக் கிராமங்களுக்குமான பிரதான நுழைவுப் பாதைகள் நிரந்தர வீதிகளாக அபிவிருத்தி செய்யப்படுதல்,— பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள பெரும்பாலான கிராமங்கள் ஒரு நுழைவுப் பாதையை மட்டுமே கொண்டுள்ளதாலும், அவை பல வருடங்களாக அபிவிருத்தி செய்யப்படாதுள்ளதாலும், குறிப்பிட்ட சகல நுழைவுப் பாதைகளையும் துரிதமாக அபிவிருத்தி செய்வதற்கான விசேட கருத்திட்டமொன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

53.

பா.53/2021

கௌரவ சமிந்த விஜேசிறி,— கண்டங்கத்திரியை உள்நாட்டில் செய்கை செய்தல்,— கடந்த சில ஆண்டுகளாக கண்டங்கத்திரியை இறக்குமதி செய்ததன் காரணமாக பெருந்தொகையான பணம் இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு சென்றடைந்ததால் அந்நிலையை தடுத்து நிறுத்துவதற்கு உள்நாட்டில் கண்டங்கத்திரி செய்கையை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

54.

பா.54/2021

கௌரவ சமிந்த விஜேசிறி,— இஞ்சி செய்கையினை முன்னேற்றுதல்,— கடந்த சில வருடங்களாக இலங்கைக்கு இஞ்சி இறக்குமதி செய்யப்பட்டதன் காரணமாக பெருந்தொகையான பணம் வெளிநாடுகளுக்கு சென்றடைந்ததால் இந்நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு பெருமளவு பணம் சென்றடைவதைத் தடுப்பதற்காகவும், இஞ்சி செய்கையினை உள்நாட்டில் முன்னேற்றுவதற்காகவும் துரித நிகழ்ச்சித்திட்டமொன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

55.

பா 55 /2021

கௌரவ சமிந்த விஜேசிறி,— தேன் கைத்தொழிலை மேம்படுத்தல்,— மிகத் தரமான மருத்துவ குணமிக்க, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தையில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள தேன் கைத்தொழிலை உள்நாட்டில் மேம்படுத்துவதற்கு துரித வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

56.

பா 56/2021

கௌரவ ரோஹண பண்டார,— உள்நாட்டு விதை உற்பத்திச் செயன்முறையினை உயிர்ப்பூட்டுதல்,— தற்போது உள்நாட்டு விதை உற்பத்தியானது வெளிநாட்டுக் கம்பெனிகளின் பிடியில் சிக்கியுள்ளமையினாலும், அதன் மூலம் உள்நாட்டு விவசாயத் தொழில்துறைக்கு பாதகமான விளைவுகள் ஏற்பட்டுள்ளமையினாலும், இந்நிலையைத் தடுக்கும் பொருட்டு உள்நாட்டு விதை உற்பத்தியை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

57.

பா.57/2021

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வட மேல் மாகாணத்தில் தொல்லியல் முக்கியத்துவமிக்க இடங்களை பேணிப் பாதுகாத்தல்,— ஒரு நாட்டின் எதிர்கால சந்ததியினருக்கு அந் நாட்டின் வரலாறு மிக முக்கியமென்பதாலும், இன்றளவில் இலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க பாரம்பரியங்களுக்கு ஏற்படுகின்ற சேதங்கள் தொடர்பான பல்வேறு சம்பவங்கள் பதிவாகியுள்ளதாலும், எதிர்கால சந்ததியினருக்காக வட மேல் மாகாணத்தின் தொல்லியல் சார்ந்த இடங்களை பேணிப் பாதுகாப்பதற்கு அரசாங்கத்தினால் துரித வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

58.

பா.58/2021

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வடமேல் மாகாணத்தில் நீரேந்து பிரதேசங்களையும் நீர் ஊற்றுக்களையும் பாதுகாத்தல்,— வடமேல் மாகாணத்தில் கணிசமான அளவினர் கமத்தொழிலில் ஈடுபடுவதனால் அவர்களது எதிர்காலத்தை பாதுகாக்கும் பொருட்டு இப்பிரதேசத்தின் விலைமதிப்பற்ற வளமான நீரேந்து பிரதேசங்களையும் நீர் ஊற்றுக்களையும் பாதுகாப்பதற்கு அரசாங்கம் துரித வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

59.

பா.59/2021

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— எல்லே விளையாட்டை மேம்படுத்துதல்,— எல்லே விளையாட்டானது இலங்கையில் கிராமிய மக்களின் விளையாட்டாகத் திகழ்வதனால், அதனை மேலும் மேம்படுத்துவதற்கான துரித வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

60.

பா. 60/2021

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— விளையாட்டுக் கழகங்களின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல்,— தற்போது விளையாட்டுக் கழகங்களில் பதவி வகிப்போர், விளையாட்டின் மேம்பாட்டுக்காக செயற்படுவதை புறக்கணித்து தமது தனிப்பட்ட நோக்கங்களுக்காக செயற்படுவதனால் விளையாட்டுக் கழகங்களின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக ஆய்வாராய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

61.

பா. 61/2021

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— நகரங்களிலிருந்து வெளிப் பிரதேசங்களுக்கு சிறைச்சாலைகளை இடமாற்றுதல்,— தற்சமயம் இலங்கையிலுள்ள பெரும்பாலான சிறைச்சாலைகள் நகரங்களை அண்டியதாக அமைந்துள்ளதாலும், சிறைச்சாலைகளுக்குள் பாரிய இடநெருக்கடி நிலவுவதாலும், இச்சிறைச்சாலைகளை நகரங்களிலிருந்து வெளிப் பிரதேசங்களுக்கு இடமாற்றி, தற்போது சிறைச்சாலைகள் அமைந்துள்ள வளாகங்களிலிருந்து உச்சப் பயனை பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

62.

பா. 62/2021

கௌரவ ஏ.எல்.எம். அதாஉல்லா,— (222 ஆம் அத்தியாயமான) தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த் தடுப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளைகளை இரத்துச் செய்தல்,— (222 ஆம் அத்தியாயமான) தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த் தடுப்பு கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் மற்றும் 3 ஆம் பிரிவுகளின் கீழ் சுகாதார மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2020 ஏப்பிறல் 11 ஆம் திகதிய 2170/08 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகள் இரத்துச் செய்யப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

63.

பா. 63/2021

கௌரவ உத்திக பிரேமரத்ன,— அனுராதபுர நகரில் பிரதான பாடசாலையொன்றினை புதிய தேசிய மாதிரிப் பாடசாலையாக மாற்றுதல்,— இலங்கையில் வாழும் இனங்களுக்கு இடையில் தேசிய ஒருமைப்பாட்டினைக் கட்டியெழுப்புவதற்காக சகல இனங்களையும் சார்ந்த மாணவர்கள் மும்மொழியிலும் கல்வி பயிலக்கூடிய வகையில் விடுதி வசதிகளையும் கொண்டதாக அனுராதபுர நகரில் பிரதான பாடசாலையொன்றினை அபிவிருத்தி செய்து புதிய மாதிரிப் பாடசாலையாக மாற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

64.

பா.64/2021

கௌரவ உத்திக பிரேமரத்ன,— மன்னார் - அனுராதபுரம் வீதியை அபிவிருத்தி செய்து மீண்டும் திறத்தல்,— முப்பது வருட யுத்த காலப்பகுதியில் மூடப்பட்ட அனுராதபுரம் தொடக்கம் எலயாபத்துவ, பமேடுவ, மன்னார் சந்தி, சிலாவத்துறை மற்றும் மன்னார் வரை செல்லும் பழுதடைந்த நிலையில் காணப்படும் பிரதான வீதியானது, மன்னாரில் இருந்து பொருட்கள் மற்றும் மீன் ஆகியவற்றினைக் கொண்டு வருவதற்கும், போக்குவரத்திற்கும் மட்டுமன்றி கொழும்பு உட்பட அனைத்துப் பிரதான நகரங்களையும் மிக இலகுவாக அடையக்கூடிய குறுகிய வழியாக காணப்படுவதனாலும், அனுராதபுரம் மற்றும் மன்னார் மாவட்டங்களுக்கிடையிலான நேரடித் தொடர்புகளையும் மக்களது சமூக பொருளாதார நிலைமைகளையும் மேம்படுத்துவதனாலும், இவ்விடயம் தொடர்பில் விரிவான சாத்தியவள ஆய்வொன்றினை மேற்கொண்டு வீதியை அபிவிருத்தி செய்து துரிதமாக திறப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

65.

ப.65/2021

கௌரவ வேலு குமார்,— தோட்டப் பிரதேசங்களில் விளையாட்டுத்துறையை விருத்தி செய்தல்,— தோட்டப் பிரதேசங்களில் வாழும் இளைஞர், யுவதிகள் விளையாட்டுத் துறையில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் தமது திறமைகளை வெளிப்படுத்தியிருப்பதனாலும், அவர்கள் கல்வி பயிலும் தோட்டத்துறைப் பாடசாலைகள் மற்றும் வாழும் தோட்டப் பிரதேசங்களிலும் விளையாட்டுத்துறைக்கு எந்தவொரு வசதியும் இல்லாமையினாலும், நாட்டின் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு தோட்டப் பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதற்காக பிரதேசத்திற்குரிய விளையாட்டு அபிவிருத்திக்கான வேலைத்திட்டம் ஒன்றை அமுல்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

66.

ப.66/2021

கௌரவ வேலு குமார்,— மலையக தோட்டப்புறப் பிரதேசங்களில் கிரிக்கட் விளையாட்டை மேம்படுத்தல்,— இலங்கை கிரிக்கட் விளையாட்டின் மூலம் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுள்ள நாடாக இருப்பதனாலும், கடந்த காலங்கள் முழுவதிலும் கிரிக்கட் அணியின் செயற்பாடுகள் நிலையற்றதாகக் காணப்பட்டதனாலும், மிகச் சிறந்த வீரர்கள் பலர் இருக்கின்ற தோட்டப்புறப் பிரதேசங்களிலும் கிரிக்கட் விளையாட்டை பயிற்சி பெறுவதற்குத் தேவையான வசதிகளைச் செய்துகொடுப்பதன் மூலம் அவர்களின் பங்களிப்பையும் இலங்கை கிரிக்கட் விளையாட்டின் முன்னேற்றத்திற்கு பெற்றுக் கொள்வதற்கான விசேட வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

67.

பா.67/2021

கௌரவ வேலு குமார்,— பெருந்தோட்ட தேயிலைக் கைத்தொழில் முறைமைக்குப் பதிலாக தேயிலை சிறு தோட்ட முறைமையொன்றினை ஏற்படுத்துதல்,— இலங்கையின் தேயிலைப் பயிர்ச் செய்கையானது பெருந்தோட்டங்கள் மற்றும் தேயிலை சிறு தோட்டங்கள் ஆகிய இருவழி முறைகளைக் கொண்டமைந்திருப்பதனாலும், இதில் பெருந்தோட்ட முறைமையானது ஏற்கனவே வீழ்ச்சியடைந்து வருவதனாலும், பெருந்தோட்ட முறைமையில் மேற்கொள்ளப்படும் தேயிலை பயிர்ச் செய்கையினை சிறு தோட்ட முறைமையாக மாற்றியமைத்து குறித்த தோட்டங்களில் பணியாற்றும் தொழிலாளர்களை, சிறு தோட்ட உரிமையாளர்களாக்குவதன் மூலம் அவற்றினை முன்னேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

68.

பா.68/2021

கௌரவ வேலு குமார்,— மலையக சமுதாயத்தின் பாரம்பரிய கலைநுட்பங்களை வணிக மட்டத்திற்குக் கொண்டுவருதல்,— பெருந்தோட்டத் துறையினை மையமாகக் கொண்ட இந்திய வம்சாவளி மலையக சமுதாயம், இலங்கையின் ஒட்டுமொத்த மக்கள் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு பிரிவினர் என்பதாலும், கூத்துக்கள், கரகாட்டம், காவடியாட்டம், கோலாட்டம் போன்ற பாரம்பரிய கலைநுட்பங்கள் இச்சமூகத்தில் காணப்படுவதாலும், குறிப்பிட்ட கலைநுட்பங்களைப் பாதுகாத்து வணிக மட்டத்திற்குக் கொண்டு வருவதற்குத் தேவையான வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் பொருத்தமான மத்திய நிலையமொன்றைத் தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

69.

பா.69/2021

கௌரவ வேலு குமார்,— பகல் நேர சிறுவர் பராமரிப்பு நிலையங்களுக்கான தரநியமங்களையும் ஒழுங்குமுறைகளையும் ஏற்படுத்துதல்,— நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் தனிப்பட்ட தரப்பினர்களால் பகல் நேர சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் பேணப்பட்டு வருவதாலும், பெருந்தோட்டக் கம்பனிகளால் பேணப்பட்டுவரும் இத்தகைய நிலையங்களில் உரிய தரநியமங்களோ, ஒழுங்குமுறைகளோ பின்பற்றப்படுகின்றமை கண்காணிக்கப்படுவதில்லையென்பதாலும், நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கக்கூடிய பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் நலநோம்புகையினை நோக்காகக் கொண்டு குறித்த நிலையங்களில் உரிய தரநியமங்களையும் ஒழுங்குமுறைகளையும் ஏற்படுத்துவதற்காக அரசாங்கம் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

70.

பா 70/2021

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களை வலுவூட்டுதல்,— இலங்கையில் அரிசி விலையைக் கட்டுப்படுத்துவதற்கான ஆற்றலைக்கொண்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்கள் இன்றளவில் பல சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளதனால், அச்சிக்கல்களைத் தீர்ப்பதற்காக அரசாங்கம் துரிதமான வேலைத்திட்டமொன்றை உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

71.

பா 71/2021

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— மகாவலி விவசாயப் பண்ணை வலையமைப்பினை பலப்படுத்துதல்,— இலங்கையின் விவசாயத்துறையின் முன்னேற்றத்திற்காக பெரும் பலத்தினைப் பெற்றுத்தருகின்ற மகாவலி திட்டத்தின் கீழ் இயங்கிவரும் மகாவலி அதிகார சபையின் கீழுள்ள விவசாயப் பண்ணையினை அரசாங்கம் மேலும் பலப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

72.

பா.73/2020

கௌரவ உத்திக பிரேமரத்ன,— குடாவிலச்சிய குளத்தை துரிதமாக அபிவிருத்தி செய்து மஹவிலச்சிய, தந்திரிமலை, எலயபத்துவ, நொச்சியாகம போன்ற பிரதேசங்களுக்கு குடிநீரை வழங்குதல்,— அனுராதபுரம் மாவட்டத்தில் கஷ்டப் பிரதேசமாக காணப்படுகின்ற மஹவிலச்சிய பிரதேச செயலக ஆளுகையின் மஹவிலச்சிய கமத்தொழில் இயக்கம் தவிர்ந்து தந்திரிமலை, துனுமடலாவ, கதுருபிட்டிய போன்ற பிரதேசங்கள் குறிப்பாக மழை நீரைப் பயன்படுத்தி சேனைப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதாலும், சுத்தமான குடிநீர் இல்லாததால் சிறு பிள்ளைகளும்கூட சிறுநீரக நோய் மற்றும் வேறு நோய்கள் பலவற்றுக்கு இலக்காகி உள்ளதாலும், இந்த நிலைமைக்குத் தீர்வாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் திட்டமிடப்பட்டுள்ள "விசல் அனுராதபுரம் வடக்கு", "விசல் திருகோணமலை" நீர் வழங்கல் திட்டங்களுக்காக இதுவரை அங்கீகாரம் கிடைக்காததாலும், நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவிப்பதற்கிணங்க குடாவிலச்சிய குளத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம் இந்த நீர் வழங்கல் திட்டத்திற்குத் தேவையான நீரை பெற்றுக்கொள்ள முடிவதாலும் இந்தக் குளத்தை துரிதமாக அபிவிருத்தி செய்து மஹவிலச்சிய, தந்திரிமலை, எலயபத்துவ, நொச்சியாகம போன்ற பிரதேசங்களுக்கு குடிநீரை வழங்கும் திட்டமொன்றை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

73.

பா.74/2020

கௌரவ உத்திக பிரேமரத்ன,— ஹபரண நகரத்தை மையமாகக் கொண்ட சுற்றுலா வலயத்தை அபிவிருத்தி செய்தல்,— உலகெங்கிலுமுள்ள சுற்றுலாப் பயணிகளை ஈர்த்த பிரசித்தி பெற்ற ஹபரண நகரத்தின் பிரதான சுற்றுலா காட்சித் தளங்களாக மின்னேரிய, றிட்டிகல மற்றும் ஹபரண வனத்தை அறிமுகம் செய்ய முடிவதாலும், இங்கு காட்டு யானைகளைக் கண்டு ரசிக்கும் வாய்ப்பு காணப்படுகின்றமை சுற்றுலா ஈர்ப்புக்கு முக்கிய ஏதுவாக உள்ளதாலும், சுற்றுலாக் கைத்தொழிலின் பல்வேறு துறைகளான அதாவது, ஹோட்டல்கள் மற்றும் தங்குமிட வசதிகள், வீடுகளில் தங்குமிட வசதி, சபாரி, பலவித வியாபாரங்கள், முச்சக்கர வண்டிச் சேவை போன்றவற்றை தமது வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள சுமார் 15000 குடும்பங்களைச் சேர்ந்த 35000 பேர் இந்தப் பிரதேசத்தில் வசிப்பதாலும், எமது நாட்டுக்கு பெருந்தொகையான அந்நியச் செலாவணியை இக்கைத்தொழில் மூலமாக ஈட்ட முடிவதாலும், ஹபரண நகரத்தை மையமாகக் கொண்ட சுற்றுலா வலயத்தை அபிவிருத்தி செய்வதற்கென வடமத்திய மாகாண சபையைத் தொடர்புபடுத்திய ஒருங்கிணைந்த சுற்றுலா அபிவிருத்திக் கருத்திட்டம் ஒன்றை அரசாங்கம் ஆரம்பிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

74.

பா.75/2021

கௌரவ ரோஹண பண்டார,— இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த அலுவலர்களுக்கு முறையான இடமாற்றங்களை வழங்குதல்,— இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த அலுவலர்களுக்கென முறையான இடமாற்றக் கொள்கை நடைமுறையில் இல்லாதமை காரணமாக அவர்கள் மிகவும் அநாதரவான நிலைக்கு ஆளாகியிருப்பதனால், இச் சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்காக முறையான இடமாற்றக் கொள்கையொன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

75.

பா.76/2021

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ள இலங்கைத் தொழிலாளர்களின் சிரமங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக ஒம்புட்சுமன் ஒருவரை நியமனம் செய்தல்,— வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தொழிலாளர்கள் வெளிநாடுகளில் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாவதன் காரணமாகவும், மேற்படி தொழிலாளர்களுக்கு அந்நாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களினால் மிகச் சொற்பமான சேவையே வழங்கப்படுவதனாலும், வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தொழிலாளர்களின் சிரமங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக ஒம்புட்சுமன் ஒருவரை நியமனம் செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

76.

பா. 77/2021

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— ஆனவிழுந்தாவ ஈர நிலத்தைப் பாதுகாத்தல்,— சர்வதேச ரம்சார் சமவாயத்தின் மூலம் ஈர நிலமாக பெயரிடப்பட்டுள்ள ஆனவிழுந்தாவ ஈர நிலத்தை எதிர்கால சந்ததிக்காக பாதுகாப்பதற்கு துரித வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

77.

பா. 78/2021

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— புத்தளம் மாவட்டத்தின் கண்டல் தாவர சூழல் தொகுதியைப் பாதுகாத்தல்,— சூழல் சமநிலையைப் பாதுகாப்பதில் பெரும்பங்காற்றுகின்ற புத்தளம் மாவட்டத்தின் கண்டல் தாவரச் சூழல் தொகுதியினை எதிர்கால சந்ததிக்காக பாதுகாப்பதற்கு அரசாங்கம் துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

78.

பா. 79/2021

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்புகின்ற இலங்கைத் தொழிலாளர்களை அவர்களது இல்லங்களில் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்குதல்,— கொவிட்-19 தொற்று நோய் காரணமாக வெளிநாடுகளில் தமது தொழில்களை இழந்து பெரும் துன்பகரமானதொரு காலப்பகுதியை கடந்து இலங்கைக்குத் திரும்புகின்ற வெளிநாடு வாழ் இலங்கைத் தொழிலாளர்களை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்த அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ள முறையியல் இத் தருணத்தில் அவர்களால் தாங்க முடியாத பணச்சுமையாக உள்ளதால் உரிய காலப்பகுதியில் தமது இல்லங்களில் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாவதற்கு ஏற்ற வகையில் வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

79.

பா.80/2021

கௌரவ உத்திக பிரேமரத்ன,— அனுராதபுரம், விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயத்தை அபிவிருத்தி செய்தல்,— பண்டைய காலத்திலிருந்து சிங்களவர்கள், தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் உள்ளிட்ட பல்வேறு இனக் குழுக்கள் அனுராதபுரம் நகரத்தில் வசித்து வந்துள்ளதாலும், 1983 கருப்பு யூலை உள்ளிட்ட நாசகார நிலைமைகள் காரணமாக அனுராதபுரம் நகரத்தை அண்டியதாக வசித்துவந்த தமிழ் மக்களில் பெரும்பாலானோர் நகரத்தை கைவிட்டுச் சென்றுள்ள போதிலும் அவர்களின் உரிமைகள் முன்பிருந்ததைப் போலவே காணப்பட வேண்டும் என்பதாலும், தமிழ் மாணவ, மாணவிகளுக்கான அனுராதபுரம், விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயம் இன்றளவில் வீழ்ச்சிப் போக்கினை எதிர்நோக்கி வருவதாலும், ஏனைய இனக் குழுமங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் பாடசாலைகள் காணப்படுவதைப் போலவே தமிழ் மாணவ மாணவிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அனுராதபுரம், விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயத்தையும் அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான தீர்மானங்கள் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

80.

பா. 81/2021

கௌரவ (திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ,— அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள கலைஞர்களுக்கு ஓய்வூதியத் திட்டமொன்றைத் தயாரித்தல்,— திரைப்படத்துறை, தொலைக்காட்சி நாடகத்துறை, மேடை நாடகத்துறை மற்றும் இசைத்துறை ஆகிய அனைத்து கலைத்துறைகளையும் பிரதிநிதித்துவம் செய்கின்ற இலங்கை கலைஞர்கள் தமது உழைப்பு, நேரம் மற்றும் திறமை என்பவற்றை ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது மிகவும் குறைந்த விலைக்குப் பெற்றுத்தருவதனாலும், தமது வாழ்க்கையின் இறுதிக் காலப் பகுதியை பெரும்பாலான கலைஞர்கள் மிகவும் துன்பகரமான, நிர்க்கதியான மற்றும் துரதிஷ்டவசமான வகையில் கழிப்பதனாலும், இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள அரசாங்கத்திலிருந்து சம்பளம் பெற்றுக்கொள்ளாத பல குழுக்களுக்கு அதாவது, விவசாயிகளுக்கான ஓய்வூதியம், மீனவர்களுக்கான ஓய்வூதியம் வழங்கப்படுகின்ற வகையில் 10 க்கு மேற்பட்ட திரைப்படங்களுக்கு பங்களிப்பு நல்கியுள்ள அல்லது 60 வயதினைக் கடந்துள்ள நடிகர்கள், இயக்குனர்கள், ஒளிப்பதிவாளர்கள், உதவி இயக்குனர்கள் மற்றும் ஒப்பனையாளர்கள் உள்ளடங்கும் வகையில் ஓய்வூதியத்துடன்கூடிய சமூகப் பாதுகாப்புத் திட்டமொன்றை கலைஞர்களுக்கும் பெற்றுக்கொடுப்பதற்கு பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் துரிதமாக தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

81.

பா.82/2021

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— கிழக்கு மாகாணத்தில் நிறுவப்பட்டுள்ளதும், திறக்கப்படவுள்ளதுமான பெடிக்லோ கெம்பஸ் (பிரைவெட்) லிமிடெட் நிறுவனத்தை அரசாங்கம் சுவீகரித்தல்,— பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமிருந்து பெடிக்லோ கெம்பஸ் (பிரைவெட்) லிமிடெட் நிறுவனத்திற்கென எவ்வித அனுமதியும் பெறப்படவில்லை என்பதாலும், இதில் ஷரியா சட்டத்துடன் தொடர்புடைய பாடநெறிகள் கற்பிக்கப்படுவதன் ஊடாக தீவிரவாத கருத்துக்களைக் கொண்டவர்கள் உருவாக முடியும் என்பதாலும், இந்த நாட்டில் இனங்களை அல்லது மதங்களை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழகங்களை அமைப்பதன் மூலம் நாடு பிரிவினைவாதத்திற்குள் தள்ளப்படலாம் என்பதாலும், இந்நிறுவனம் தொடர்பாக கடந்த பாராளுமன்றத்தில் இடம்பெற்ற கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினுடைய அவதானிப்பு அறிக்கையின் ஏகோபித்த இறுதி பரிந்துரைகளின் பிரகாரம் சட்டத்திற்கு முரணான இந்நிறுவனத்தை அரசாங்கம் சுவீகரித்து, சகல தவறாளிகளுக்கும் எதிராக துரித சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளதாலும் இந்நிறுவனத்தை அரசாங்கம் சுவீகரித்து இந்த நாட்டில் வாழும் சகல இனங்களையும், மதங்களையும் சார்ந்த பிள்ளைகளுக்கு உயர் கல்வியைப் பயில வாய்ப்பளிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

82.

பா.83/2021

கௌரவ மயந்த திசாநாயக்க,— பதுளை மாவட்டத்தின் மஹியங்கனை தேர்தல் ஆளுகைப் பிரதேசத்தில் யானை,— மனித மோதலையும் காட்டு யானைகளினால் ஏற்படும் பயிர்ச் சேதங்களையும் தடுத்தல்,- ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தில் மஹியங்கனை தேர்தல் ஆளுகைப் பிரதேசத்தில் உள்ள மகாவலி கிராமங்களான அகலஒய, மில்லன்னாவ, விரானகம மற்றும் மேலும் சில மகாவலி கிராமங்களில் காட்டு யானைகளின் அச்சுறுத்தல் காரணமாக மிகவும் சிரமப்பட்டு பயிரிட்ட பயிர்கள் அழிவடைவதாலும், துரதிஷ்டவசமாக உயிர்ச் சேதங்கள் ஏற்படுவதாலும், இந்நிலையிலிருந்து அம்மக்களை மீட்டெடுப்பதற்காக நிரந்தரமான தீர்வொன்றை வழங்குவதற்கு அல்லது யானை வேலியொன்றை அமைத்துக் கொடுப்பதற்கு அரசாங்கத்தினால் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

83.

பா.84/2021

கௌரவ மயந்த திசாநாயக்க,— சகல பிள்ளைகளுக்கும் அறநெறிக் கல்வியை வழங்குதல்,— பெரும்பாலான பிள்ளைகள் அறநெறிக் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடாதமையின் விளைவாக நாகரீகமான சமூகமொன்றுக்குப் பதிலாக தீச்செயல்களும் குற்றச்செயல்களும் மலிந்த சமூகமொன்று உருவாவதற்கான வாய்ப்பு காணப்படுவதனால், அறநெறிப் பாடசாலை தினத்தில் தனியார் வகுப்புக்களை நிறுத்தி அறநெறிக் கல்வியை கட்டாயப்படுத்துவதற்கும், கஷ்டப் பிரதேசங்களிலுள்ள அறநெறிப் பாடசாலைகளுக்கு பௌதீக வளங்களை வழங்குவது மட்டுமன்றி அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின் நலனோம்புகைக்குமாக அரசாங்கம் தகுந்த வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

84.

பா. 85/2021

கௌரவ மயந்த திசாநாயக்க,— முச்சக்கர வண்டி மற்றும் உந்துருளி சார்ந்த தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களின் வாழ்க்கைத் தரத்தைப் பேணுதல்,— இலங்கையில் முச்சக்கர வண்டி மற்றும் உந்துருளி சார்ந்த தொழில்களில் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஈடுபட்டுள்ள சுயதொழிலாளர்களுக்கு கொவிட்-19 தொற்றினைக் கருத்தில் கொண்டு வழங்கப்பட்ட கடன் தவணை சலுகை மீது உயரிய வட்டி வீதம் அறவிடப்படுவதன் காரணமாக அவர்கள் பாரிய சிரமங்களுக்கு முகம் கொடுத்துள்ளமையால் அவர்களது வாழ்க்கைத் தரம் மற்றும் தொழிலை பாதுகாக்கும் முகமாக முறையான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் துரிதமாக உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

85.

பா.86/2021

கௌரவ ரோஹண திஸாநாயக்க,— மரக்கறி கொள்வனவு மற்றும் விற்பனை நிலையமொன்றை ஆரம்பித்தல்,— மாத்தளை மாவட்டத்தின் யட்டவத்த பிரதேச செயலகப் பிரிவானது தக்காளி உள்ளிட்ட மரக்கறிப் பயிர்ச்செய்கை பாரியளவில் மேற்கொள்ளப்படும் விவசாயப் பிரதேசமாக காணப்படுவதனாலும், இந்த உற்பத்திகளைச் சேகரித்து, மொத்த விற்பனையை மேற்கொள்வதற்கான முறையான வேலைத்திட்டமொன்று இதுவரையில் முன்னெடுக்கப்படாமையாலும், யட்டவத்த பிரதேச செயலகப் பிரிவின் யேலக்கரய சந்தியிலிருந்து மாத்தளை குருநாகல் வீதியின் வலதுபுறத்தில் அமைந்துள்ள காணியை நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குப் பொறுப்பேற்று, அங்கு மரக்கறி சேகரிப்பு மற்றும் விற்பனை நிலையமொன்றை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

86.

பா.87/2021

கௌரவ றோஹண திஸாநாயக்க,— யானை-மனித மோதலைத் தடுத்தல்,— யானை-மனித மோதல் காரணமாக காட்டு யானைகளின் உயிர்வாழ்க்கைக்கும், மனிதர்களின் உயிர்வாழ்க்கை மற்றும் சொத்துக்களுக்கும் சேதங்கள் ஏற்படும் மாவட்டங்கள் மத்தியில் மாத்தளை மாவட்டமும் உள்ளடங்குவதுடன், இப்பிரச்சினைக்கானதொரு தீர்வாக யானை வேலிகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளபோதிலும், அது தீர்க்கப்படாமையால், வனப்பூங்காக்களாக துல்லியமாக அடையாளம் காணப்பட்டுள்ள பிரதேசங்களை ஒதுக்கி, அனைத்து காட்டு யானைகளையும் பிடித்து இந்த இடங்களில் விடுவிப்பதற்கும், இந்த வனப்பூங்காக்களைச் சுற்றி மின்சார வேலிகளுக்குப் பதிலாக மண் அணைகளை நிர்மாணித்து அதன் மீது பாதைகளை நிர்மாணிப்பதற்கும், தாவரங்களை வளர்ப்பதற்கும், சுற்றுலா நிலையங்களை அமைப்பதற்கும், இலங்கையின் ஏனைய பிரதேசங்களில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மின்சார வேலிகளை கழற்றி அகற்றுவதற்கும் மற்றும் மேற்குறிப்பிட்ட வனப்பூங்காக்களினுள் வாவிகளை நிர்மாணித்து அவற்றுக்கு நீர்ப்பாசன வசதியை வழங்குவதற்கும் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

87.

பா.88/2021

கௌரவ றோஹண திஸாநாயக்க,— வனப் பாதுகாப்பு மற்றும் வன சீவராசிகளின் வாழிடங்களுக்கு மாடுகள் மேய்ச்சலுக்கு விடப்படுவதைத் தடுத்தல்,— வன சீவராசிகள் திணைக்களம் மற்றும் வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமான ஒதுக்குக் காணிகளில் உணவுக்காக மாடுகளை விடுவிப்பதன் காரணமாக விவசாயிகள் மற்றும் வனசீவராசிகள் திணைக்கள அலுவலர்களுக்கு இடையே பல பிரச்சினைகள் உருவாகியுள்ளதாலும், இதற்கென இக்காணிகளில் காணப்படுகின்ற பாரிய மரங்கள் அவ்வாறே இருக்கத்தக்கதாக காணிகளின் ஒரு பகுதியை மாடு வளர்ப்புக்காக ஒதுக்கி அவற்றில் குளங்களை அமைத்து, பாசன நீரை வழங்குவதன் மூலம் தொடர்ச்சியாக காட்டு யானைகளினால் அல்லலுறும் விவசாயிகளை கறவை மாடு வளர்ப்பில் ஈடுபடுத்த முடிவதாலும், அதனால் சுற்றாடல் தொகுதிக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாததாலும், அதன்மூலம் பால் நிமித்தம் வருடாந்தம் செலவிடப்படும் பெருந்தொகையான பணம் வெளிநாடுகளுக்குச் செல்வதைத் தடுக்க முடிவதாலும், பால் உற்பத்தியால் நாட்டில் பாரிய பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை துரிதகதியில் அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

88.

பா.89/2021

கௌரவ றோஹண திஸாநாயக்க,— மந்திகள் மற்றும் குரங்குகளால் ஏற்படுத்தப்படும் சேதங்களைத் தடுத்தல்,— சுதந்திரமாக நடமாடும் மந்திகள் மற்றும் குரங்குகளால் விவசாயிகளின் மரக்கறிகள், பழச் செய்கை மற்றும் தெங்குச் செய்கை அழிக்கப்படுதல், வீடுகளும் சொத்துகளும் அழிக்கப்படுதல், அணில் மற்றும் கிளி போன்ற பிராணிகளின் கூடுகளும் பொந்துகளும் சிதைக்கப்பட்டு குஞ்சுகள் மற்றும் முட்டைகளைத் தின்றுவிடுதல், ஈரப்பலா போன்ற மரங்களின் தளிர்களை தின்றுவிடுவதன் காரணமாக விளைச்சல் குன்றுதல் போன்ற பல்வேறு பிரச்சினைகள் உருவாகியுள்ளதால் இச்சேதங்களைத் தடுக்கும் தேசிய ரீதியான தேவைப்பாட்டுக்குத் தீர்வாக மொறகஹகந்த போன்ற நீர்த்தேக்கங்களுக்கு நடுவே காணப்படுகின்ற தீவுகளுக்கும் கடற்கரையோரத்தை அண்டியதாகக் காணப்படுகின்ற தீவுகளுக்கும் குரங்குகள் மற்றும் மந்திகளை விடுவித்தல், அவ்வாறான பிரதேசங்களை மந்திகள் மற்றும் குரங்குகள் சரணாலயங்களாக பிரகடனம் செய்தல், பிடிக்கப்படுகின்ற பிராணிகளை கருத்தடை செய்து விடுவித்தல், தம்புள்ளை மற்றும் மெனிங் போன்ற பொருளாதார மத்திய நிலையங்களால் அப்புறப்படுத்தப்படுகின்ற மரக்கறிகள் மற்றும் பழங்களை மந்திகள் மற்றும் குரங்குகள் சரணாலயங்களுக்கு விநியோகிக்கும் பொருட்டு சுற்றுச்சூழல் அமைப்புகள் ஊடாக வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல் மற்றும் இத்தகைய மந்திகள் மற்றும் குரங்குகள் சரணாலயங்களை பார்வையிடுவதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்து அதனால் ஈட்டப்படுகின்ற பணத்தைக் கொண்டு சரணாலயங்களைப் பராமரிப்பதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் துரிதகதியில் நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

# 2021 யூன் 22, செவ்வாய்க்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

26/2020

கௌரவ ஹேஷா விதானகே,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வேலையற்ற பட்டாதரிகளை நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் அரச நிறுவனங்களில் பயிலுநர் பயிற்சிக்கு சேர்த்துக்கொள்வதற்கு 2020 ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை விளம்பத்திரத்திற்கு அமைவாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த பட்டதாரிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நேர்முகப் பரீட்சைக்காக தோற்றிய பட்டதாரிகளின் எண்ணிக்கை, ஒவ்வொரு மாவட்டத்தின் அடிப்படையில் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iii) நேர்முகப் பரீட்சையின் பின்னர் பயிற்சிக்காக சேர்த்துக்கொள்ளப்பட்ட பட்டதாரிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) குறித்த பயிற்சிக்காக சேர்த்துக்கொள்ளும் போது இப்பட்டதாரிகள் வெளிவாரி மற்றும் உள்வாரி பட்டதாரிகள் என்ற அடிப்படையில் வகைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனரா என்பதையும்;

(ii) ஆமெனின், சேர்த்துக்கொள்ளப்பட்ட வெளிவாரி பட்டதாரிகளின் எண்ணிக்கை மற்றும் உள்வாரி பட்டதாரிகளின் எண்ணிக்கை, ஒவ்வொரு மாவட்ட அடிப்படையில் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iii) வெளிவாரி பட்டதாரிகளுக்கு நியமனக் கடிதங்களை பெற்றுக்கொடுக்கும் போது சிக்கலான நிலைமை தோன்றியமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

277/2020

கௌரவ புத்திக பத்திறண,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் இலங்கையின் பப்பாளி உற்பத்தி ஒவ்வொரு வருடத்திற்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) பப்பாளி உற்பத்தியினை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அந் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கையிலுள்ள பப்பாளி இனங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இலங்கையில் பப்பாளி செய்கைக்கு உகந்த காலநிலை காணப்படுகின்ற மாவட்டங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இலங்கை பப்பாளி இறக்குமதி செய்கின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் பப்பாளி இறக்குமதி செய்வதற்கு செலவிடப்பட்ட தொகை ஒவ்வொரு வருடத்திற்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) இலங்கை பப்பாளி ஏற்றுமதி செய்கின்றதா என்பதையும்;

(iv) ஆமெனில், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் பப்பாளி ஏற்றுமதியின் மூலம் பெறப்பட்ட வருமானம் ஒவ்வொரு வருடத்திற்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3.

494/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் பணியாட்டொகுதியில் அங்கீகரிக்கப்பட்டுள்ள சிற்றூழியர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) இன்றளவில் அத்திணைக்களத்தில் பணியாற்றும் சிற்றூழியர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) அந்தத் திணைக்களத்தில் இன்றளவில் காணப்படுகின்ற சிற்றூழியர்களுக்கான வெற்றிடங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அவ்வெற்றிடங்களை நியாயமான முறையில் நிரப்ப அமைச்சினால் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

628/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள அரசாங்க நெற் களஞ்சியசாலைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவை அமைந்துள்ள இடங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நெற் களஞ்சியசாலையினதும் கொள்திறன் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை மேற்படி ஒவ்வொரு நெற் களஞ்சியசாலையிலும் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள நெல்லின் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள நெற் களஞ்சியசாலைகளில் தற்போது பயன்படுத்தப்படாத நெற் களஞ்சியசாலைகள் உள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அவற்றின் எண்ணிக்கை மற்றும் அவை அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையும்;

(iii) குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள நெற் களஞ்சியசாலைகளிலிருந்து உச்சப்பயனை பெற்றுக் கொள்வதற்காக அமைச்சு மேற்கொள்ளவுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

722/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாவட்ட மக்களுக்கு சுகாதார சேவைகளை வழங்கும் மன்னார் மாவட்ட வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவின் கட்டிடம் மிகவும் பழைமையானது எனவும்;

(ii) மேற்படி வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவினை நிர்மாணிப்பதாக கடந்த காலத்தில் வாக்குறுதியளிக்கப்பட்ட போதிலும், இதுவரையில் அதன் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) பெரும்பாலான மருத்துவ பரிசோதனைகள் இந்த வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படுவதில்லை என்பதையும்;

(ii) சீ.டீ.ஸ்கென் (CT SCAN), நரம்பியல் (NEUROLOGY), தொண்டை, காது, மூக்கு (ENT), எலும்பியல் (ORTHOPAEDIC), புற்றுநோயியல் (ONCOLOGY), சிறுநீர்த் தொகுதி சார்ந்த நோயியில்(UROLOGY), சிறுநீரகவியல் (NEPHROLOGY), வாய், முக மற்றும் தாடை(OMF) ஆகிய துறைசார் பரிசோதனைகளை இந்த வைத்தியசாலையில் மேற்கொள்ள முடியாத ஒரு நிலை காணப்படுகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஈ) மேற்படி துறைசார் பரிசோதனைகளை மீண்டும் மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் ஆரம்பிக்க முடியுமா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

6.

737/2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கல்னேவ நகரில் அமைந்துள்ள பேருந்து நிலையம் மகாவலி திட்டம் ஆரம்பிக்கப்பட்டதையடுத்து நிர்மாணிக்கப்பட்டதென்பதையும்;

(ii) மழை நாட்களில் மேற்படி பேருந்து நிலையம் பயணிகளுக்கு பயன்படுத்த இயலாததொரு நிலையில் உள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பேருந்து நிலையத்தைத் திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

893/2020

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது காணப்படும் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவை ஆரம்பிக்கப்பட்டுள்ள திகதி மற்றும் அவற்றின் கொள்ளளவுகள் வெவ்வேறாக யாவை;

(iii) மேற்குறிப்பிட்ட எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களின் துணை உற்பத்திசார் கைத்தொழில்கள் யாவை;

(iv) புதிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமொன்றை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

970/2020

கௌரவ எஸ்.எம்.எம். முஸ்ஸாரப்,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் அமைந்துள்ள மீன்பிடித் துறைமுகங்களின் மொத்த எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அம்பாறை மாவட்டத்தில் மீன்பிடித் துறைமுகங்கள் அமைந்துள்ளனவா என்பதையும்;

(iii) அம்பாறை மாவட்டத்தில் மீன்பிடித் துறைமுகமொன்றை அமைப்பதற்கு பொருத்தமான இடங்கள் உள்ளன என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) பொத்துவில் பிரதேசத்தில் மீன்பிடித் துறைமுகமொன்றை அமைப்பது தொடர்பாக முன்வைக்கப்படும் யோசனைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் கல்முனை பிராந்திய அலுவலகம் அதன் விநியோக நடவடிக்கைகளுக்கு மீன்களை பெற்றுக்கொள்ளும் பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி மீன்கள் கல்முனை மற்றும் மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்கள் தவிர வேறு பிரதேசங்களிலிருந்து பெறப்படுமாயின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

1199/2020

கௌரவ கே.பீ.எஸ். குமாரசிறி,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஓகத்து மாதம் ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கம் கொள்வனவு செய்துள்ள ஒட்டுமொத்த நெல்லின் அளவு கிலோகிராம்களில்;

(ii) மேற்படி நெல் கிலோகிராம் ஒன்றின் கொள்வனவு விலை;

(iii) அவ்வாறு கொள்வனவு செய்துள்ள நெல்லில் விலங்குத் தீனிக்காக விற்பனை செய்துள்ள அளவு கிலோகிராம்களில்;

(iv) மேற்படி நெல் கிலோகிராம் ஒன்றின் விற்பனை விலை;

(v) மேலே (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள நெல் , விலங்குத் தீனிக்காக விற்பனை செய்யப்பட்டதன் காரணமாக ஏற்பட்டுள்ள நட்டம்;

எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

1363/2020

கௌரவ ஜோன் செனெவிரத்ன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வண.உடவலவே அமரவன்ச தேரர் 2008.11.06 ஆம் திகதி இர/போப்பிட்டிய வித்தியாலயத்தில் உதவி ஆசிரியராக சேவையாற்றினார் என்பதையும்;

(ii) மேற்படி தேரர் பொய்யான துஷ்பிரயோகக் குற்றச்சாட்டின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டதன் காரணமாக அவரது பணி தடைசெய்யப்பட்டு சேவை முடிவுறுத்தப்பட்டதென்பதையும்;

(iii) இது தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணையில் வண. அமரவன்ச தேரர் குற்றவிடுதலை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டதன் காரணமாக இடையறாத சேவையுடன் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளார் என்பதையும்;

(iv) ஆயினும், இதுவரை மேற்படி தேரருக்கு நிலுவைச் சம்பளம் செலுத்தப்படவில்லையென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி தேரரின் நிலுவைச் சம்பளம் செலுத்தப்படுமா என்பதையும்;

(ii) வண. அமரவன்ச தேரருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்தப்பட்டு ஒழுக்காற்றுக் கட்டளை வழங்கப்படவில்லையென்பதால் மேற்படி தேரருடன் நியமனம் பெற்ற ஏனைய உதவி ஆசிரியர்களின் நியமனங்கள் நிரந்தரமாக்கப்பட்ட திகதியாகிய 2012.03.31 ஆம் திகதி தொடக்கம் வண. அமரவன்ச நியமனத்தையும் நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2021 யூன் 23, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

79/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சரும் நிதி அமைச்சரும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தொண்டர் கிராம உத்தியோகத்தர் பதவியில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(ii) பிரதேச செயலகங்களுக்கு உரித்தான பிரிவுகளுக்கு இடையில், கிராம உத்தியோகத்தர் இடமாற்றங்களை மேற்கொள்ள முடியுமா;

(iii) கிராம உத்தியோகத்தருக்கு ஒரு பிரிவில் பணியாற்றக்கூடிய காலம் யாது;

(iv) ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்கள் தொடர்பிலான வேலைத்திட்டமொன்று அரசாங்கத்திடம் உள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

278/2020

கௌரவ புத்திக பத்திறண,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் இலங்கையின் தோடம்பழ உற்பத்தி ஒவ்வொரு வருடத்திற்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) தோடம்பழ உற்பத்தியினை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அந் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கையிலுள்ள தோடை இனங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இலங்கையில் தோடை செய்கைக்கு உகந்த காலநிலை காணப்படுகின்ற மாவட்டங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இலங்கை தோடம்பழங்களை இறக்குமதி செய்கின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் தோடம்பழங்களை இறக்குமதி செய்வதற்கு செலவிடப்பட்ட தொகை ஒவ்வொரு வருடத்திற்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) இலங்கை தோடம்பழங்களை ஏற்றுமதி செய்கின்றதா என்பதையும்;

(iv) ஆமெனில், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் தோடம்பழ ஏற்றுமதியின் மூலம் பெறப்பட்ட வருமானம் ஒவ்வொரு வருடத்திற்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3.

462/2020

கௌரவ மொஹமட் முஸம்மில், — சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) டாக்டர் நெவில் பர்னாந்து அரச போதனா வைத்தியசாலை அரசாங்கத்திற்குப் பொறுப்பேற்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி பொறுப்பேற்றலுக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்ததா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்தேதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலையின் ஒட்டுமொத்த பணியாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலையில் பணியாற்றுகின்ற தாதிமாருக்கு 2017 அக்டோபர் முதல் 2020 டிசம்பர் வரையில் செலுத்தப்பட்ட சம்பளத்தின் மொத்தம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) அரசாங்கத்தினால் மேற்படி வைத்தியசாலைக்கு மருந்து வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், 2017 செப்டெம்பர் முதல் இற்றைவரை மேற்படி மருந்துகளை வழங்குவதற்கு செலவிடப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4.

498/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நியூ டயமன் கப்பல் விபத்திற்குள்ளான திகதி யாது என்பதையும்;

(ii) அந்த விபத்து காரணமாக இலங்கையின் சமுத்திர சூழல் தொகுதிக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அப்பாதிப்பு தொடர்பில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அப்பாதிப்பு தொடர்பில், மேற்படி கப்பலின் உரிமையைக் கொண்டுள்ள கம்பனியிலிருந்து இழப்பீட்டைப் பெற்றுக்கொள்வதற்காக இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ள எதிர்பார்த்துள்ள நடவடிக்கைகள் தனித் தனியாக யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

791/2020

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தளை மாவட்டத்தில் அமைந்துள்ள விவசாய நிலங்களில் தொட்டால் சிணுங்கி தாவரம் வியாபித்து வருகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி தொட்டால் சிணுங்கி தாவரத்தின் வியாபித்தலைக் கட்டுப்படுத்துவதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

824/2020

கௌரவ சாந்த பண்டார,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனத்தின் (JICA) நிதி உதவியுடன் கல்கமுவ மாவட்ட வைத்தியசாலை, ஆதார வைத்தியசாலையாக அபிவிருத்தி செய்யப்பட்டபோது பல வசதிகள் வழங்கப்பட்டன என்பதையும்;

(ii) இதன் கீழ் மேற்படி வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட நவீன தொழில்நுட்ப வசதிகளுடன்கூடிய அறுவை சிகிச்சை உபகரணங்கள் இதுவரை இயக்கப்படவில்லையென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

850/2020

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையின் மகாவலி வலயங்களின் —

(i) மொத்த நிலப்பரப்பு;

(ii) நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலப்பரப்பு;

(iii) துணைப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிரப்பரப்பு;

(iv) தரிசு நிலங்களின் அளவு;

ஒவ்வொரு வலயத்தின் பிரகாரம் தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இலங்கையின் மகாவலி வலயங்களில் வதியும் —

(i) மொத்த குடும்ப அலகுகளின் எண்ணிக்கை;

(ii) அந்த அனைத்து குடும்ப அலகுகளிலுமுள்ள மொத்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை;

ஒவ்வொரு வலயத்தின் பிரகாரம் தனித்தனியாக எத்தனையென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

875/2020

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை அரசாங்கம் கடன் தவணை நீடிப்பு உள்ளிட்ட கடன் நிவாரணத்துக்காக ஏனைய அரசாங்கங்கள் மற்றும் பல்தரப்பு முகவராண்மைகள் போன்றவற்றிடமிருந்து பல கோரிக்கைகளை மேற்கொண்டதா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், இலங்கை அரசாங்கத்தால் கடன் தவணை நீடிப்பு உள்ளிட்ட கடன் நிவாரணத்துக்காக இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள கோரிக்கைகளின் தன்மையையும்;

(iii) மேற்குறிப்பிட்ட கோரிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட திகதியையும்;

(iv) மேற்குறித்த கோரிக்கைகளுக்கு பெறப்பட்ட பதில்களையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை அரசாங்கத்துக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நிலுவை நன்கொடை வழங்கல்களையும்;

(ii) மேற்குறித்த நன்கொடை வழங்கல்களின் பெறுமதியையும்;

(iii) இலங்கை அரசாங்கம் மேற்குறிப்பிட்ட நன்கொடை வழங்கல்களை ஏற்றுக்கொள்ளாமைக்கான காரணத்தையும்;

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

1208/2020

கௌரவ நிமல் பியதிஸ்ஸ,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும் உச்ச வயதெல்லை 45 என்ற போதிலும், அதற்கு முரணாக 45 வயதிற்கு மேற்பட்டவர்களும் அரச சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளனர் என்பதையும்;

(ii) அவ்வாறு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அரச உத்தியோகத்தர்களுள் ஒரு பகுதியினருக்கான நியமனங்கள் நிரந்தரமாக்கப்பட்டு உரிய சம்பளம் மற்றும் சலுகைகள் வழங்கப்படுகின்றன என்பதையும்;

(iii) இன்னுமொரு பகுதியினரது நியமனங்கள் நிரந்தரமாக்கப்படாது கொடுப்பனவொன்று மாத்திரம் வழங்கப்படுகின்றது என்பதையும்;

(iv) 45 வயதினைக் கடந்து அரச சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள அரச உத்தியோகத்தர்களுக்கான ஓய்வூதியத் தயாரிப்பினை மேற்கொள்ள ஓய்வூதியத் திணைக்களம் மறுக்கின்றது என்பதையும்;

(v) அதன் காரணமாக, அரச சேவையிலுள்ள ஒரு பகுதியினருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) 45 வயதினைக் கடந்து அரச சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள அனைத்து அரச உத்தியோகத்தர்களும் நிரந்தரமாக்கப்படுவார்களா என்பதையும்;

(ii) அவர்களுக்குரிய சம்பளங்களும் வரப்பிரசாதங்களும் வழங்கப்படுமா என்பதையும்;

(iii) அவர்களுக்குரிய ஓய்வூதியத்தினைப் பெற்றுக்கொடுப்பதற்காக அமைச்சரவைப் பத்திரமொன்றைச் சமர்ப்பித்து அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

1276/2020

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் திடீர் விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வருகைதந்த சீன கமியூனிச கட்சியின் அரசியல் சபையின் உயர்மட்ட உத்தியோகத்தரான திரு. யங் ஜியேஷி (Yang Jiechi) உள்ளிட்ட சீன தூதுக் குழுவினர் இலங்கை ஜனாதிபதி மற்றும் பிரதமரை சந்தித்தமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி திடீர் விஜயத்தின் வாயிலாக இலங்கைக்கு நிவாரண உதவிகள் மற்றும் நிதியுதவிகள் கிடைத்துள்ளனவா என்பதையும்;

(iii) இந்த திடீர் விஜயத்திற்கான முக்கிய காரணமேதும் உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2021 யூன் 25, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

80/2020

கௌரவ ஹேஷா விதானகே,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் நிதியினால் இரத்தினபுரி மாவட்டத்தில் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள வாரச்சந்தைகளின் எண்ணிக்கை யாது;

(ii) அவ்வாறு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள வாரச்சந்தைகளின் பெயர்கள் யாவை;

(iii) மேற்படி ஒவ்வொரு வாராச்சந்தையினையும் அபிவிருத்தி செய்வதற்காக செலவிடப்பட்டுள்ள நிதித்தொகை வெவ்வேறாக யாது;

(iv) மேற்படி ஒவ்வொரு வாரச்சந்தையையும் அபிவிருத்தி செய்வதற்கான ஒப்பந்தத்தை பெற்றுக்கொண்டுள்ள நபரது பெயர் மற்றும் முகவரி ஆகியன வெவ்வேறாக யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

321/2020

கௌரவ புத்திக பத்திரண,— இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் மேசைப்பந்து விளையாட்டை மேம்படுத்துவதற்காக 2019 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி தொகையில் அரசாங்க பாடசாலைகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள தொகையில் பாடசாலைகளிலிருந்து வெளியேறியுள்ள பிள்ளைகளின் மேசைப்பந்து விளையாடும் திறமைகளை வளர்ப்பதற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேசைப்பந்து விளையாட்டின் மூலம் சர்வதேச வெற்றிகளைப் பெற்றுக் கொள்வதற்காக பாடசாலை விளையாட்டு வீரர்களை வழிப்படுத்துவதற்கான திட்டங்களைத் தயார் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இலங்கை மேசைப்பந்து சம்மேளனம் மற்றும் அத்துடன் இணைந்த ஏனைய சங்கங்களின் நிருவாக மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் அரசாங்கம் சம்பந்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகளில் சம்பந்தப்படுகின்ற முறை யாதென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3.

464/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— பிரதம அமைச்சரும் நிதி அமைச்சரும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டு சாலாவ இராணுவ முகாமில் ஏற்பட்ட வெடிப்புச் சம்பவத்தின்போது அழிவடைந்த ஆயுதங்களின் பணரீதியான பெறுமதி;

(ii) இதன்போது இராணுவ முகாமுக்கு ஏற்பட்ட சேதத்தின் பணரீதியான பெறுமதி;

(iii) மேற்படி வெடிப்புச் சம்பவத்தினால் முகாமுக்கு அருகாமையில் அமைந்திருந்த வர்த்தக நிலையங்கள் மற்றும் வீடுகளுக்கு ஏற்பட்ட சேதத்தின் பணரீதியான பெறுமதி;

வெவ்வேறாக யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வெடிப்புச் சம்பவம் தொடர்பில் முறையான விசாரணை நடத்தப்பட்டதா;

(ii) ஆமெனில், அவ்விசாரணைக்கு அமைவாக மேற்குறிப்பிட்ட வெடிப்புக்கான காரணங்கள் யாவை;

(iii) மேற்குறிப்பிட்ட வெடிப்புச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகள் வெளிப்படுத்தப்பட்டிருப்பின், அவர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

510/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட கண்டங்கத்தரியின் அளவு யாது என்பதையும்;

(ii) அதற்கென செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி காலப்பகுதியில் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட கண்டங்கத்தரியின் அளவு யாது என்பதையும்;

(iv) கண்டங்கத்தரிச் செய்கையை இலங்கையில் ஊக்குவிக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

806/2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாடு பூராகவுமுள்ள பாடசாலைகளில் மிகை ஊழியர் அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்டுள்ள அதிபர்களின் எண்ணிக்கை;

(ii) இவர்களில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றும் அதிபர்களின் எண்ணிக்கை;

யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள அதிபர்களுக்கு —

(i) நியமனம் வழங்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) சம்பள அதிகரிப்புகள், பதவி உயர்வுகள் மற்றும் இடமாற்றங்கள் என்பன வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும் ;

(iii) சம்பள அதிகரிப்புகள், பதவி உயர்வுகள் மற்றும் இடமாற்றங்கள் எப்போது வழங்கப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி அதிபர்கள் நிரந்தர சேவையில் உள்ளீர்க்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) அவர்கள் எப்போது நிரந்தர சேவையில் உள்ளீர்க்கப்படுவார்கள் என்பதையும்;

மேலும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

6.

825/2020

கௌரவ சாந்த பண்டார,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தின் பொல்பித்திகம பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சியம்பலன்கமுவ பிரதேசத்தில் சிறுநீரக நோய்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக வைத்தியசாலையொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) கல்கமுவ மற்றும் பொல்பித்திகம பிரதேசங்களில் வசிக்கும் பெருமளவிலானோர் சிறுநீரக நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர் என்பதையும்;

(iii) ஆயினும், மேற்குறிப்பிட்ட வைத்தியசாலை 03 ஆண்டுகளுக்கும் மேலாக மூடப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) மேற்படி வைத்தியசாலையை துரிதமாகத் திறந்து சிறுநீரக நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

945/2020

கௌரவ மயந்த திசாநாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) "செய்கடமை கொவிட் - 19 சுகாதார மற்றும் சமூகப் பாதுகாப்பு நிதியம்" எனும் பெயரில் நிதியமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி நிதியம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கங்கள் யாவை;

(ii) மேற்படி நிதியத்தை நிருவகிக்கும் நிறுவனத்தின் பெயர் யாது;

(iii) மேற்படி நிதியத்தை நிருவகிப்பதற்கு அரசாங்க உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டுள்ளாரா;

(iv) ஆமெனில், குறிப்பிட்ட உத்தியோகத்தரின் பெயர் மற்றும் பதவி என்பவை யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்குறிப்பிட்ட நிதியத்தில் தற்போது காணப்படும் நிலுவை யாது;

(ii) கொவிட்-19 தொற்று காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு மேற்குறிப்பிட்ட நிதியத்தினால் வழங்கப்பட்டுள்ள நன்மைகள் யாவை;

(iii) அதற்காக செலவிடப்பட்டுள்ள நிதித்தொகை யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

8.

1080/2020

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த 05 வருட காலப்பகுதியில் பொலன்னறுவை மாவட்டத்தில் பதிவாகிய சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை எத்தனை;

(ii) மேற்படி காலப்பகுதியில் பொலன்னறுவை மாவட்டத்தில் சிறுநீரக நோயினால் மரணித்த நோயாளர்களின் எண்ணிக்கை எத்தனை;

(iii) சிறுநீரக நோயினைத் தடுப்பதற்கு தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட, சிறுநீரக நோயாளர்களுக்கான மாதாந்த நிதியுதவி வழங்கும் வேலைத்திட்டத்தில் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ள சிறுநீரக நோயாளர்கள் உள்ளடக்கப்படவில்லை என்பதையும்;

(ii) குறைந்த வருமானம் பெறும் சிறுநீரக நோயாளர்களுக்கான வீடமைப்புத்திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) மேற்படி (ஆ) (i) மற்றும் (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களை முறையாக நடைமுறைப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

9.

1108/2020

கௌரவ ஜே சீ. அலவத்துவல,— நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கலகெதர, மாவத்தகம (மல்லவபிட்டிய) நீர் வழங்கல் கருத்திட்டத்தின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் மூலம் நீர் வழங்குவதற்கு எதிர்பார்க்கும் நிறுவனங்கள் மற்றும் வீடுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) அக்கருத்திட்டத்தின் தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

(v) அக்கருத்திட்டத்தின் வேலைகள் நிறைவு செய்யப்பட்டு அது திறந்து வைக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

1200/2020

கௌரவ கே.பீ.எஸ்.குமாரசிறி,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அநுராதபுரம் பெரியாஸ்பத்திரியில் —

(i) பணிப்பாளர் நியமிக்கப்பட்டுள்ள அடிப்படை யாது;

(ii) தற்போது பணியாற்றுகின்ற வைத்தியர்களின் எண்ணிக்கை யாது;

(iii) மருத்துவ உத்தியோகத்தர் பதவியில் தற்போது காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை யாது;

(iv) தற்போது பணியாற்றுகின்ற தாதிமார்களின் எண்ணிக்கை யாது;

(v) தற்போது காணப்படுகின்ற தாதியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனத்தின் (JICA) நன்கொடையின் கீழ் அநுராதபுரம் வைத்தியசாலையில் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த இருதயநோய் சத்திரசிகிச்சைக்கூடத்தின்;

(ii) தாய் சேய் சாய் சாலைக்கான கட்டிடத் தொகுதியின்;

(iii) அனைத்து வசதிகைளயும் கொண்ட அவசர சிகிச்சை பிரிவின்;

தற்போதைய நிலைமை என்ன என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2021 யூலை 06, செவ்வாய்க்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

90/2020

கௌரவ ஹேஷா விதானகே,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தின், எம்பிலிபிட்டிய பிரதேச செயலகப் பிரிவில் உலை எண்ணெய் சார்ந்த மின் உற்பத்தி நிலையமொன்று நிறுவப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி மின் உற்பத்தி நிலையத்தின் செயற்பாடு காரணமாக கடுமையான சுற்றாடல் சேதம் ஏற்படுகின்றதென்பதையும்;

(iii) மேற்படி மின் உற்பத்தி நிலையத்துக்கு சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்கப்படும்போது உரிய முறையியல் பின்பற்றப்படவில்லை என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி மின் உற்பத்தி நிலையத்தின் உரிமையைக் கொண்டுள்ள நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனத்துடன் உடன்படிக்கை கைச்சாதிடப்பட்டுள்ள கால எல்லை யாதென்பதையும்;

(iii) மேற்படி மின் உற்பத்தி நிலையத்தின் மூலம் ஏற்படுகின்ற சுற்றாடல் சேதத்தினைக் குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

194/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தேசிய விளையாட்டுச் சபைக்கு நியமிக்கப்பட்டுள்ள புதிய அங்கத்தவர்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவர்களது பெயர்கள் மற்றும் தகைமைகள் வெவ்வேறாக யாவை;

(iii) விளையாட்டுத் துறையின் மேம்பாட்டுக்காக அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் சேவைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

279/2020

கௌரவ புத்திக பத்திறண,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் இலங்கையின் பெயார்ஸ் உற்பத்தி ஒவ்வொரு வருடத்திற்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) பெயார்ஸ் உற்பத்தியினை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அந் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கையிலுள்ள பெயார்ஸ் இனங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இலங்கையில் பெயார்ஸ் செய்கைக்கு உகந்த காலநிலை காணப்படுகின்ற மாவட்டங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இலங்கை பெயார்ஸ் இறக்குமதி செய்கின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் பெயார்ஸ் இறக்குமதி செய்வதற்கு செலவிடப்பட்ட தொகை ஒவ்வொரு வருடத்திற்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) இலங்கை பெயார்ஸ் ஏற்றுமதி செய்கின்றதா என்பதையும்;

(iv) ஆமெனில், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் பெயார்ஸ் ஏற்றுமதியின் மூலம் பெறப்பட்ட வருமானம் ஒவ்வொரு வருடத்திற்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4.

503/2020

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019.03.29 ஆம் திகதிய அரச வர்த்தமானப் பத்திரிகையில் சிறைச்சாலைக் காவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்தது என்பதையும்;

(ii) அந்த அறிவித்தலின்படி, 2019 யூன் மாதம் ஆட்சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சையை நடாத்தி அதன் பெறுபேறுகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு 2019 நவம்பர் மாதம் உடற் தகுதி பரிசோதனை நடத்தப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி ஆட்சேர்ப்புச் செயன்முறையை இதுவரை முன்னெடுத்தமைக்காக அரசாங்கத்திற்கு உறப்பட்டுள்ள செலவு யாது என்பதையும்;

(ii) இன்றளவில் சிறைச்சாலைக் காவலர் பதவியில் காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) சிறைச்சாலைக் காவலர் பதவி வெற்றிடங்களை நிரப்பும்போது மேற்படி ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு உட்பட்டதாக தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படுமா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், இந்த விண்ணப்பதாரர்களுக்கு நியமனம் வழங்கப்படும் திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

826/2020

கௌரவ சாந்த பண்டார,— பிரதம அமைச்சரும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ''வடமேல் கலாசார சதுக்கம்" கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டளவில் மேற்குறிப்பிட்ட கருத்திட்டத்தில் பணியாற்றிய ஊழியர்களின் எண்ணிக்கை;

(ii) மேற்குறிப்பிட்ட கருத்திட்டத்தில் பணியாற்றுகையில் 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை;

(iii) மேற்படி ஊழியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டமைக்கான அடிப்படை;

(iv) 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை;

(v) மேற்படி ஊழியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அடிப்படை;

யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி கருத்திட்டத்தில் பணியாற்றிய ஊழியர்கள் அரசியல் காரணங்களுக்காக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள் என்பதை ஏற்றுக்கொள்வாரா?

(ii) ஆமெனில், இந்த ஊழியர்களுக்கு நியாயத்தை நிலைநாட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வாரா?

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

6.

876/2020

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை அரசாங்கம் கடன் மீளச்செலுத்துதல் தொடர்பாக சுதந்திரம் அடைந்ததிலிருந்து கறைபடாத வரலாற்றை பேணி வந்ததாக மீண்டும் மீண்டும் கூறியதையும்;

(ii) இலங்கையின் மீளச்செலுத்தும் இயலுமையை மூடீஸ் கடன் தரப்படுத்தும் முகவராண்மை B2 இலிருந்து Caa1 வரை இரு மட்டங்களால் தரவிறக்கம் செய்துள்ளமையையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இலங்கையின் 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான வட்டி மற்றும் கடன்தீர்ப்புக் கொடுப்பனவுகளின் மொத்தப்பெறுமதியையும்;

(ii) 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான எதிர்வுகூறப்பட்ட மொத்த வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையின் பெறுமதியையும்;

(iii) 2020 ஆம் ஆண்டுக்கான முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டுகளுக்கான அரசாங்கத்தின் வருமானத்தையும்;

(iv) 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான எதிர்வுகூறப்பட்ட மொத்த வருமானத்தின் பெறுமதியையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) (i) தவணைத் தவறுகையை தவிர்ப்பதற்கு இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளையும்;

(ii) அரசாங்கம் கடனை மீளச்செலுத்தத் தவறுமாயின் இலங்கையின் பொருளாதாரம் மீதான தாக்கத்தையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

7.

947/2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வலுக்கியாறு – அராலி – வேலணை – புங்குடுதீவு ஊடாக குறிகட்டுவான் வரை செல்லும் வீதியானது யாழ்ப்பாண மாவட்டத்தின் வேலணை பிரதேச செயலாளர் பிரிவுக்குரிய பிரதான வீதியாகும் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியின் நீளம் யாது;

(ii) மேற்படி வீதி இறுதியாக புனரமைக்கப்பட்ட திகதி யாது;

(iii) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு;

(iv) அதற்கான நிதி பெற்றுக்கொள்ளப்பட்ட மூலம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) பிரதான போக்குவரத்துப் பாதையொன்றாக அமைந்துள்ள மேற்படி வீதி புனரமைப்புச் செய்யப்படாமையின் காரணமாக அப்பிரதேச மக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர் என்பதையும் அவர் அறிவாரா?

(ஈ) (i) மேற்படி வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை;

(ii) மேற்படி வீதி புனரமைப்புச் செய்யப்படும் திகதி யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

8.

1020/2020

கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை அப்போது காணப்பட்ட வர்த்தக, வாணிப மற்றும் நுகர்வோர் அலுவல்கள் அமைச்சுப் பொறுப்பை வகித்த அமைச்சர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி அமைச்சின் கீழ் காணப்பட்ட நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட அ(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியில் கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனம், வரையறுக்கப்பட்ட லங்கா சதொச மற்றும் பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்களினால் பேணிவரப்படுகின்ற வர்த்தக நிறுவனங்களுக்குத் தேவையான பொருட்களை இறக்குமதி செய்கையில் அல்லது உள்நாட்டு ரீதியில் கொள்வனவு செய்கையில் பின்பற்றப்பட்டுள்ள நடவடிக்கை முறைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு பொருட்ளை இறக்குமதி செய்கையில் அல்லது உள்நாட்டு ரீதியில் கொள்வனவு செய்கையில் வெளிப்படைத்தன்மை பேணப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இன்றேல், ஏதேனும் முறைகேடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அது தொடர்பாக முழுமையான கணக்காய்வு நடத்தப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

1081/2020

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— மின்சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 30 மற்றும் 60 அம்பியர் மூன்று படி நிறுவுகை மின் இணைப்பை பெறுவதற்கு விண்ணப்பிக்கும்போது இதுவரையில் பட்டயப் பொறியியலாளர் வழங்கும் இணக்க சோதனை அறிக்கையொன்று கோரப்படவில்லை என்பதையும்;

(ii) எனினும், அண்மைக்காலமாக அதற்கென பட்டயப் பொறியியலாளர் வழங்கும் இணக்க சோதனை அறிக்கையொன்று கோரப்படுகின்றது என்பதையும்;

(iii) மேற்படி இணக்க சோதனை அறிக்கையை பெற்றுக்கொள்வதற்காக ரூபா 25,000/-இற்கும் மேலதிகமாக செலவு செய்ய வேண்டியுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) 30 மற்றும் 60 அம்பியர் மூன்று படி நிறுவுகை மின் இணைப்பை பெறுவதற்காக விண்ணப்பிக்கும்போது இணக்க சோதனை அறிக்கை கோரப்படுகின்ற முறையை அகற்றுவதற்கோ அல்லது அதற்கென சலுகை வழங்குவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

1201/2020

கௌரவ கே.பீ.எஸ். குமாரசிறி,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த அரசாங்கத்தின் காலப்பகுதியில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள பசு மாடுகளின் எண்ணிக்கை யாது;

(ii) இப்பசுமாடுகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ள நாடுகளின் பெயர்கள் யாவை;

(iii) ஒரு பசுமாட்டை இறக்குமதி செய்வதற்காக செலவிடப்பட்டுள்ள பணத்தொகை யாது;

(iv) இதற்கேற்ப, பசுமாடுகளை இறக்குமதி செய்வதற்காக செலவிடப்பட்டுள்ள பணத்தொகை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா;

(ஆ) (i) மேற்படி பசுமாடுகள் தொழுவங்களில் அடைக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் யாவை;

(ii) விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ள பசுமாடுகளின் எண்ணிக்கை யாது;

(iii) உயிரிழந்துள்ள பசுமாடுகளின் எண்ணிக்கை யாது;

(iv) மேற்படி பசுமாடுகளை இறக்குமதி செய்ததன் மூலம் அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ள நட்டம் எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2021 யூலை 07, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

82/2020

கௌரவ ஹேஷா விதானகே,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலன்னறுவை, மன்னம்பிட்டி பிரதேசத்தில் அகழப்படும் மணல், தேவைக்கு அமைவாக மன்னம்பிட்டி மணல் கம்பனியினால் விநியோகிக்கப்படுகின்றது என்பதையும்;

(ii) மேற்படி கம்பனி ஓர் அரச கம்பனியா என்பதையும்;

(iii) இல்லையெனில், பகுதியளவு அல்லது முழுமையான தனியார் கம்பனியா என்பதையும்;

(iv) மேற்படி கம்பனியின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(v) விண்ணப்பிப்பவர்களின் தேவைக்கு அமைவாக மேற்படி கம்பனியினால் மணல் விநியோகிக்கப்படும் போது பின்பற்றப்படும் முறையியல் யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

280/2020

கௌரவ புத்திக பத்திறண,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் இலங்கையின் பாற்கட்டி உற்பத்தியானது ஒவ்வொரு வருடத்திற்கும் அமைவாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) பாற்கட்டி உற்பத்தியை அதிகரிப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் இலங்கைக்கு பாற்கட்டி இறக்குமதி செய்வதற்காக செலவிடப்பட்ட நிதியானது ஒவ்வொரு வருட அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) இலங்கை பாற்கட்டி ஏற்றுமதி செய்கின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் பாற்கட்டி ஏற்றுமதி மூலம் பெற்றுக் கொண்ட வருமானமானது ஒவ்வொரு வருட அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

314/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் எரிபொருள் களஞ்சியப்படுத்தப்படும் இடங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு இடத்திலும் களஞ்சியப்படுத்தக்கூடிய எரிபொருளின் அளவு தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) எரிபொருள் களஞ்சியப்படுத்தப்படும் இடங்களை அபிவிருத்தி செய்வதற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

465/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் பாடசாலை பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

(ii) மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு ஆண்டிலும் அச்சிடப்பட்டுள்ள பாடப்புத்தகங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iii) அப்போதைய கல்வி அமைச்சரது வண்ணப் புகைப்படம் இப்பாடப்புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டிருந்ததா;

(iv) ஆமெனில், இப்புகைப்படத்தை மேற்படி பாடப்புத்தகங்களில் அச்சிட்டு வெளியிடுவதற்காக செலவிடப்பட்டுள்ள பணத்தொகை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

743/2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அநுராதபுரம், கெபித்திகொல்லாவ பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட ரத்மல்கஹவெவ சந்தியிலிருந்து கிவுலேகட சந்தி வரையிலான சுமார் 10 கி.மீ நீளமுடைய வீதிப் பகுதி மிகவும் மோசமான நிலையில் உள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதிப்பகுதியை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு ஏற்கனவே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி வீதிப் பகுதியின் புனரமைப்புப் பணிகளை நிறைவுசெய்வதற்கு எதிர்பார்க்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

941/ 2020

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாவட்டத்தில் அமைந்துள்ள க.பொ.த. உயர் தரத்திற்கு தொழில்நுட்பவியல்துறை பாடங்களில் வகுப்புகள் நடாத்தப்படுகின்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பாடசாலைகளில் தொழில்நுட்பவியல் பாடங்களைக் கற்பிப்பதற்குத் தேவையான ஆசிரியர்களின் எண்ணிக்கையும் இன்றளவில் காணப்படுகின்ற ஆசிரியர்களின் எண்ணிக்கையும் இன்றளவில் காணப்படுகின்ற ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கையும் ஒவ்வொரு பாடசாலைக்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) க.பொ.த. உயர் தரத்திற்கு தொழில்நுட்பவியல்துறை பாடங்களைக் கற்பிப்பதற்கு ஆசிரியர் பற்றாக்குறை ஏற்படுவதற்கு தாக்கம் செலுத்தியுள்ள காரணங்கள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

1083/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்திய கிழக்கு நாடுகளில் பேணப்பட்டு வருகின்ற இலங்கைத் தூதரகங்களின் கீழ் பாதுகாப்பு இல்லங்கள் காணப்படுகின்றதென்பதையும்;

(ii) மேற்படி பாதுகாப்பு இல்லங்களில் இட வசதிகள் போதுமானதாக இல்லையென்பதையும்;

(iii) அதன் காரணமாக பாதுகாப்புக் கருதி குறித்த இல்லங்களுக்கு வருகைதரும் வீட்டுப் பணிப் பெண்கள் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகின்றனர் என்தையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) குறித்த ஒவ்வொரு பாதுகாப்பு இல்லத்திலும் தற்போது தங்கியுள்ள இலங்கை வீட்டுப் பணிப்பெண்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) மேற்படி பணிப் பெண்களை இலங்கைக்கு மீண்டும் அழைத்து வருவது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

1202/2020

கௌரவ கே.பீ.எஸ். குமாரசிறி,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தபால் திணைக்களத்தில் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றும் உப தபால் நிலையப் பொறுப்பதிகாரிகள் 1996 ஆம் ஆண்டு தொடக்கம் அரச சேவைக்கு உள்ளீர்க்கப்பட்டனர் என்பதையும்;

(ii) பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 06/2006 இற்கு அமைவாகவும் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் அமுலாக்கப்பட்ட புதிய ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறைக்கு ஏற்பவும் இவர்கள் முகாமைத்துவ உதவியாளர் சேவையின் – II தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) முகாமைத்துவ உதவியாளர் சேவையின்-II ஆம் தர பதவிகளில் சேவையாற்றும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் தபால் திணைக்களத்தில் சேவையாற்றும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் பெற்றுக்கொடுக்கப்படும் பிரசவ விடுமுறை, வருடாந்த விடுமுறை, மேலதிக நேர கொடுப்பனவு மற்றும் அலுவலக வசதிகள் போன்ற சிறப்புரிமைகள் மேற்படி (அ) (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) இது தொடர்பாக இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2021 யூலை 08, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

83/2020

கௌரவ ஹேஷா விதானகே,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மகாவலி அதிகாரசபையின் வளவ வலயத்திற்குரிய காணிகளின் பரப்பு, ஏக்கர்களில் யாது என்பதையும்;

(ii) அத்தகைய காணிகளில் மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள காணிகளின் பரப்பு, அந்த வலயத்தின் ஒவ்வொரு பிரிவு வாரியாக தனித் தனியாக யாது என்பதையும்;

(iii) வளவ வலயத்திற்குரிய காணிகளில் பல்வேறு கருத்திட்டங்களுக்காக வழங்கப்பட்டுள்ள, 50 ஏக்கருக்கு மேற்பட்ட விஸ்தீரணம் கொண்ட காணிகளின் பரப்பு யாது என்பதையும்;

(iv) அத்தகைய காணிகள், அமைச்சரவை அங்கீகாரத்திற்கு உட்பட்டதாக வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(v) இன்றேல், அந்தக் காணிகள் வழங்கப்பட்ட வழிமுறை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

281/2020

கௌரவ புத்திக பத்திறண,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாராளுமன்ற உறுப்பினர்களினதும் அமைச்சர்களினதும் பணியாட்டொகுதிகளில் குறிப்பிடத்தக்க சேவையை ஆற்றிவருகின்ற ஆராய்ச்சி உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்படுகின்ற சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் போதுமானதல்ல என்பதையும்;

(ii) மேற்படி உத்தியோகத்தர்களுக்கு தொலைபேசி மற்றும் போக்குவரத்து வசதிகளை வழங்குவது தொடர்பாகவும் அவர்களின் ஏனைய தொழில்சார் கோரிக்கைகள் தொடர்பாகவுமான கோரிக்கைகள் அமைச்சுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரை அது தொடர்பாக சாதகமான பதில் கிடைக்கவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆராய்ச்சி உத்தியோகத்தர்களின் கொடுப்பனவுகளையும் வசதிகளையும் அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அது நடைமுறைபடுத்தப்படும் விதம் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

315/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம் தாபிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) இன்றளவில் மேற்படி எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தின் கொள்ளளவு எவ்வளவென்பதையும்;

(iii) புதிய எரிபொருள் சுத்திகரிப்பு நிலையமொன்றைத் தாபிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

744/2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அனுராதபுரம் மாவட்டத்தில் எப்பாவல பொலிஸ் நிலையம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பொலிஸ் நிலையம் மற்றும் அதற்குரிய உத்தியோகபூர்வ இல்லங்கள் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன என்பதையும்;

(ii) ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து இதுவரை மேற்படி கட்டிடங்கள் போதுமான வகையில் சீரமைக்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) மேற்படி பொலிஸ் நிலையம் மற்றும் அதற்குரிய உத்தியோகபூர்வ இல்லங்கள் எத்திகதியில் சீரமைக்கப்படுமென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5.

828/2020

கௌரவ சாந்த பண்டார,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஏராளமான இலங்கை ஊழியர்கள் தென் கொரியாவில் பணியாற்றுகின்றனர் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இன்றளவில் தென்கொரியாவில் பணியாற்றும் இலங்கை ஊழியர்களின் எண்ணிக்கை யாது;

(ii) 2021 ஆம் ஆண்டுக்காக தென்கொரியாவிடமிருந்து இலங்கைக்குக் கிடைக்கப்பெற்றுள்ள வேலைவாய்ப்புப் பங்கு யாது;

(iii) மேற்படி வேலைவாய்ப்புப் பங்குக்காக தகுதிவாய்ந்தவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனரா;

(iv) ஆமெனில், அதற்காக பயன்படுத்தப்பட்ட முறையியல் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

832/2020

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சரும், நிதி அமைச்சரும், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்கு முதன்முதலில் நேரடி வெளிநாட்டு முதலீடுகள் கிடைக்கப்பெற்ற வருடம் யாதென்பதையும்;

(ii) அந்த வருடத்திலிருந்து இதுவரை இலங்கைக்குக் கிடைக்கப்பெற்றுள்ள மொத்த நேரடி வெளிநாட்டு முதலீடுகளின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(iii) 2014.12.31 ஆம் திகதி வரை இலங்கைக்குக் கிடைத்துள்ள மொத்த வெளிநாட்டு முதலீடுகளின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(iv) 2015 தொடக்கம் 2020 வரையில் கிடைத்துள்ள நேரடி வெளிநாட்டு முதலீடுகளின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி (iv) இல் குறிப்பிட்ட முதலீடுகளின் பெறுமதியானது ஒவ்வொரு கருத்திட்டத்தின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

868/2020

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை வடக்கு மற்றும் கந்தளாய் ஆகிய கல்வி வலயங்களில் அமைந்துள்ள அரசாங்கப் பாடசாலைகளில் நிலவும் சிங்கள மொழிமூல ஆசிரியர் பற்றாக்குறையானது ஒவ்வொரு பாடத்தின் அடிப்படையில் வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி ஆசிரியர் பற்றாக்குறையின் காரணமாக மேற்குறித்த கல்வி வலயங்களில் அமைந்துள்ள அரசாங்கப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவ மாணவிகள் பல்வேறுபட்ட சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர் என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(iii) தற்போது கிழக்கு மாகாண சபை இயங்காத நிலையில் மேற்படி மாகாண சபையின் நிர்வாக நடவடிக்கைகள் நேரடியாக உரிய ஆளுநரின் கீழ் மேற்கொள்ளப்படுவதனால் மேற்படி ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு அமைச்சு துரித நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1064/2020

கௌரவ அசோக்க பிரியந்த,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்திற்கான கற்பிட்டி குடாநாட்டில் மாதுளை பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுவதனை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், தற்போது அங்கு மாதுளை பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலப் பரப்பு யாது;

(iii) அங்கு மாதுளை பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் எண்ணிக்கை எத்தனை;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) அவ்விவசாயிகளுக்கு உரிய தொழில்நுட்ப அறிவுரைகள் கிடைக்கப்படாமை மற்றும் உற்பத்திகளை சந்தைப்படுத்துவது தொடர்பான பிரச்சினைகள் உள்ளதென்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், மேற்படி பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

1109/2020

கௌரவ ஜே.சீ. அலவத்துவல,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல், பெல்லன்தெனிய பிரதேசத்தில் நடாத்திச்செல்லப்படுகின்ற இயோன் லங்கா நிதி நிறுவனமானது இலங்கை மத்திய வங்கியின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதா;

(ii) அந்நிறுவனத்தில் வைப்புச் செய்தவர்களில் பெரும்பாலானவர்கள் ஓய்வு பெற்ற படை வீரர்கள் என்பதை அறிவாரா ;

(iii) அந்நிறுவனத்தில் பணம் வைப்புச் செய்துள்ள வைப்பாளர்களின் எண்ணிக்கை எத்தனை;

(iv) அவ்வைப்பாளர்களின் வைப்புத் தொகையை மீளவும் அவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

1281/2020

கௌரவ குமாரசிறி ரத்நாயக்க,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனராகலை, செவனகல பிரதேச செயலாளர் பிரிவில் நிரந்தர அல்லது தற்காலிக வீடுகளில் குடியிருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவர்களுள் காணி உறுதி அல்லது காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி (ii) இல் குறிப்பிடப்படும் காணிகளுள் காணி அமைச்சிற்குரிய காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) காணி உறுதி அல்லது காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்படாத காணிகளில் நிரந்தரமாக அல்லது தற்காலிகமாக வீடுகளை அமைத்து அவற்றில் குடும்பங்கள் குடியிருப்பதனை அவர் அறிவாரா?

(ii) ஆமெனில், மேற்படி குடும்பங்கள் குடியிருக்கும் காணிகளுள் காணி அமைச்சிற்குரிய காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்;

(iii) அனுமதிப்பத்திரம் இல்லாத காணிகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான வேலைத்திட்மொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், குறித்த அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2021 யூலை 09, வெள்ளிக்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

85/2020

கௌரவ ஹேஷா விதானகே,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மகாவலி வலயங்களில் நீண்ட காலமாக வசித்து வரும் மக்களின் காணிகளுக்கான உரித்துப் பத்திரங்களை வழங்கும் வழிமுறை யாது என்பதையும்;

(ii) மக்கள் நீண்ட காலமாக வசித்து வரும் வளவ வலயத்தின் ஒரு சில காணிகளுக்கு உரித்துப் பத்திரங்களை வழங்கும்போது, அத்தகைய காணிகளுக்காக விலை மதிப்பு செய்யப்பட்டுள்ள தொகை அநீதியானது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) அவ்விடயம் தொடர்பாக இன்றளவில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது என்பதையும்;

(iv) மகாவலி வலயங்களில் நீண்ட காலமாக வசித்து வரும் மக்களின் காணிகளுக்கு நியாயமான வரிப் பணத்தின் அடிப்படையில் உரித்துப் பத்திரம் வழங்க எடுக்கும் காலம் யாது என்பதையும்;

(v) இவ்விடயம் தொடர்பில் செயலாற்றும் நிறுவனங்களின் செயற்பாடு திருப்தியாக உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

282/2020

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சரும், நிதி அமைச்சரும், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 - 2014 காலப்பகுதியில் இலங்கை இராணுவத்திற்கு சில கலைஞர்கள் விசேட அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளனர் என்பதை அறிவாரா;

(ii) ஆமெனில், அவர்களின் பெயர்கள், ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதி மற்றும் பதவிகள் தனித்தனியே யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தொண்டர் மற்றும் நிரந்தர படையணிகளுள் மேற்படி கலைஞர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள படையணி யாது;

(ii) அவர்களுக்கு இராணுவப் பயிற்சி வழங்கப்பட்டிருப்பின், பயிற்சிக் காலம் மற்றும் பயிற்சியளிக்கப்பட்ட முகாமின் பெயர் என்பன யாவை;

(iii) பயிற்சியின் பின்னர் மேற்படி ஒவ்வொரு கலைஞருக்கும் பொறுப்பளிக்கப்பட்ட கடமை, இணைப்புச் செய்யப்பட்ட படைப் பிரிவு, செலுத்தப்பட்ட சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகள் தனித்தனியே யாவை;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மெற்படி ஆட்சேர்ப்புகள் சட்டரீதியானவையா;

(ii) இன்றேல், அதனுடன் தொடர்புடைய தரப்பினர்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை மேலும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3.

466/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— பிரதம அமைச்சரும் நிதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை ஒவ்வோர் ஆண்டிலும் இலங்கையில் உருவாக்கப்பட்ட புதிய தொழில்வாய்ப்புக்களின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக தனித்தனியே எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வோர் ஆண்டிலும் இலங்கையின் தொழிலின்மை விகிதம் தனித்தனியே யாதென்பதையும்;

(iii) 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மேற்படி காலப்பகுதியில் ஏற்பட்ட தொழிலின்மை விகிதத்தின் வேறுபாடு யாதென்பதையும்;

(iv) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை இலங்கையின் நீண்டகால உற்பத்தி இயலளவில் நிகழ்ந்த வேறுபாடு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

541/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரை ஸ்ரீலங்கன் எயார்லைன் நிறுவனத்தினால் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு செலுத்த வேண்டியுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

(ii) அத் தொகையை அறவிடுவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

869/2020

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவிலுள்ள குறிஞ்சாக்கேணி பாலம் 2014 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக சேதமடைந்ததுடன் அன்றிலிருந்து இப்பிரதேசத்தில் வாழும் மக்கள் தற்காலிக பாலமொன்றினைப் பயன்படுத்துகின்றனர் என்பதையும்;

(ii) 2019 ஆம் ஆண்டு மேற்படி பாலத்தின் நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்கான கேள்விப்பத்திரங்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் கோரப்பட்டதுடன் அதன் பின்னர் அப்போதிருந்த பிரதமரால் அப்பாலத்தினை நிர்மாணிப்பதற்காக அடிக்கல் நாட்டப்பட்டதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாலத்தினை நிர்மாணிப்பதற்கான கேள்வி மனு ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொண்ட நபரின் பெயர் யாதென்பதையும்;

(ii) மேற்படி கேள்விப்பத்திரத்தின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி பாலத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iv) அதன் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

934/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லியவளை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 22 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கும் அஞ்சல் அலுவலகம் தற்காலிக கட்டிடமொன்றில் இயங்கி வருகின்றதென்பதையும்;

(ii) இதற்கென 20,000/- ரூபா மாதாந்த வாடகை செலுத்தப்படுகின்றதென்பதையும்;

(iii) மேற்படி அஞ்சல் அலுவலகத்திற்கு நிரந்தர கட்டிடமொன்றை நிர்மாணித்துத் தருமாறு மக்களும் பொது அமைப்புக்களும் கோரிக்கை விடுத்துள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) முல்லியவளை பிரதேசத்தில் வசிக்கும் மக்களுக்காக தரமான அஞ்சல் சேவையை வழங்குவதற்கு மேற்படி அஞ்சல் அலுவலத்திற்கென நிரந்தர கட்டிடமொன்று நிர்மாணிக்கப்படுமா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், மேற்படி கட்டிடம் எப்போது நிர்மாணிக்கப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

948/2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) யாழ்ப்பாண மாவட்டத்தின், பிரதேச சபை அதிகாரப் பிரதேசமொன்றான நெடுந்தீவின் பிரதான போக்குவரத்துப் பாதையாக கடல்வழிப்பாதை அமைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி தீவில் இயங்கி வருகின்ற 'நெடுந்தாரகை' எனும் பயணிகள் போக்குவரத்துப் படகில் சேவையாற்றுகின்ற அலுவலர்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி ஒவ்வொரு அலுவலரினதும் பதவி, நியமனத் திகதி மற்றும் சேவை அடிப்படை என்பன தனித்தனியே யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி அலுவலர்களுக்கு ஒப்பந்த அடிப்படையிலான நியமனங்கள் யாரால் வழங்கப்பட்டன என்பதையும்;

(ii) வில்லியம் ஜேசுதாசன் அன்ரனி ராஜ், சிந்தாகுலம் மெல்கியாஸ் மிலன், அல்பிரட் மரியதயாளன், அன்ரனி அமலதாஸ், அன்ரூஸ் ரகீம்லயோன் ஆகிய அலுவலர்களுக்கு அவர்களின் கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளின் அடிப்படையில் நிரந்தர நியமனங்கள் வழங்கப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி நிரந்தர நியமனங்கள் வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

8.

1282/2020

கௌரவ குமாரசிறி ரத்நாயக்க,— பெருந்தோட்ட அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் வருடாந்த சோள உற்பத்தி மெட்ரிக் டொன்களில் எவ்வளவு என்பதையும்;

(ii) அதிகூடிய சோள உற்பத்தியை மேற்கொள்ளும் மாவட்டங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் மேற்கொள்ளப்படும் சோள உற்பத்தி மெட்ரிக் டொன்களில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கைக்கு வருடாந்தம் இறக்குமதி செய்யப்படும் சோளத்தின் அளவு மெட்ரிக் டொன்களில் எவ்வளவு என்பதையும்;

(ii) அவ்வாறு சோளம் இறக்குமதி செய்யப்படும் நாடுகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) இலங்கைக்கு சோளம் இறக்குமதி செய்யும் நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) சோள இறக்குமதிக்கென வருடாந்தம் செய்யப்படுகின்ற செலவு எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இலங்கையின் வருடாந்த சோள உற்பத்தியானது உள்நாட்டுப் பாவனைக்கு போதுமானதாக இல்லை என்பதனை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) (i) உள்நாட்டு சோள உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் மேலும் இச்சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

9.

1336/2020

கௌரவ கே.பீ.எஸ். குமாரசிறி,— பிரதம அமைச்சரும் நிதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுர மாவட்டத்திற்கென அங்கீகரிக்கப்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை;

(ii) அம்மாவட்டத்தில் தற்போது பணிபுரியும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை;

(iii) அதற்கமைவாக நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை;

(iv) அம்மாவட்டத்திலுள்ள மொத்த சமுர்த்தி பயனாளிகளின் எண்ணிக்கை;

(v) அம்மாவட்டத்தில் கடந்த அரசாங்கத்தினால் சமுர்த்தி நிவாரணம் வழங்கப்பட்டுள்ள புதிய சமுர்த்தி பயனாளிகளின் எண்ணிக்கை;

எத்தனை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) சமுர்த்தி பயனாளிகளைத் தெரிவுசெய்யும் போது பின்பற்றப்படும் அளவுகோல்கள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

1364/2020

கௌரவ ஆர்.எம். ரஞ்சித் மத்தும பண்டார,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை போக்குவரத்துச் சபையின் பதுளை பிராந்திய தலைமையகத்தில் IV ஆம் தர பதவியொன்றில் பணியாற்றிய திரு. ஜே.எம். கெலும் ஜயசுந்தர 2020 பாராளுமன்ற பொதுத் தேர்தலில் மொனராகலை மாவட்ட வேட்பாளராக போட்டியிட்டுள்ளார் என்பதையும்;

(ii) தேர்தலில் போட்டியிடுவதற்காக விடுமுறை கோரி இவர் பதுளை பிராந்திய முகாமையாளருக்கு 2020.03.17 ஆந் திகதியன்று கடிதமொன்றை சமர்ப்பித்துள்ளார் என்பதையும்;

(iii) இதற்கிடையே இலங்கை போக்குவரத்துச் சபையின் வெல்லவாய டிப்போவின் மூலம் இரண்டு மாதாந்த சம்பளங்கள் இவருடைய பிரத்தியேக கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளதென்பதையும்;

(iv) மேற்படி சம்பளங்களை பதுளை பிராந்திய அலுவலகத்துக்கு அவர் மீள செலுத்துவதற்காகச் சென்றுள்ள போதிலும் அதற்கிடையில் அவரது சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(v) மேற்படி சம்பளங்களை மீள செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டமைக்கான காரணம் கோவிட்-19 கொள்ளை நோய் நிலைமையே என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இவ்வாறு சேவை இடைநிறுத்தப்பட்டதன் மூலம் திரு. ஜயசுந்தரவிற்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதென்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(ii) இவரை மீள சேவையில் அமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2021 யூலை 20, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

46/2020

கௌரவ ஹேஷா விதானகே,— மின்சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சப்ரகமுவ மாகாணத்திலுள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு மின்சாரத்தை வழங்குவதற்கான வேலைத் திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) கடந்த நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த நாளிலிருந்து இன்றுவரை அவ்வேலைத் திட்டத்தின் கீழ் மின்சாரம் வழங்கியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கையானது ஒவ்வோர் பிரதேச செயலகப் பிரிவு ரீதியில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) அக் குடும்பங்களை தெரிவு செய்யும் போது பின்பற்றிய நடைமுறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

176/2020

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி வீதியின் கொழும்பிலிருந்து மொரட்டுவை வரையிலான பகுதியில் காணப்படுகின்ற அதிக வீதி நெரிசலைக் குறைக்கும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படும் கரையோரப் பாதையின் (Marine Drive) நிர்மாணப் பணிகள் கொள்ளுப்பிட்டி தொடக்கம் தெஹிவளை – வாசல வீதி வரை மாத்திரமே மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் மந்தகதியிலேயே இடம்பெறுகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அக்கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவினம் எவ்வளவு;

(ii) அக்கருத்திட்டத்திற்கான ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொண்ட நிறுவனத்தின் பெயர் யாது;

(iii) அக்கருத்திட்டத்தின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி கருத்திட்டத்தின் காரணமாக சொத்துக்களை இழந்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நட்ட ஈட்டுத்தொகை எவ்வளவு;

(ii) மேற்கொண்டும் நட்டஈடு வழங்கப்பட எஞ்சியிருப்பின், அது எப்போது வழங்கப்பட எதிர்பார்க்கப்படுகின்றது;

என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3.

195/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— மின்சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) நுரைச்சோலை பிரதேசத்தில் காற்று வலு மின் உற்பத்தி நிலையமொன்று அமைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி மின்நிலையத்தினால் பிறப்பிக்கப்படும் மின் அலகுகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி மின்நிலையத்தின் மின்மாற்றி செயலிழந்த திகதி மற்றும் அது திருத்தப்பட்ட திகதி ஆகியன வெவ்வேறாக யாவை;

(iii) மேற்படி மின்நிலையத்தை தொடர்ந்தும் அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

239/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட வெள்ளைப் பூடின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி வெள்ளைப் பூடு எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iv) மேற்படி வெள்ளைப் பூடை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு வெள்ளைப் பூடை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

352/2020

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சரும் நிதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுற்றுலாக் கைத்தொழில் துறையை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஹோட்டல்களுக்கும் உணவகங்களுக்கும் மதுபானம் விற்பனை செய்வதற்காக உரிமங்கள் வழங்கப்பட்டன என்பதையும்;

(ii) சுற்றுலாப் பயணிகளின் நடமாட்டம் இல்லாத பிரதேசங்களில் அமைந்துள்ள சில ஹோட்டல்களுக்கும் உணவகங்களுக்கும் கூட மதுபானம் விற்பனை செய்வதற்காக உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் மதுபானம் விற்பனை செய்வதற்காக ஹோட்டல்களுக்கும் உணவகங்களுக்கும் வழங்கப்பட்டுள்ள உரிமங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்தின் பிரகாரம் தனித்தனியாக எத்தனை;

(ii) மேற்படி உரிமங்கள் வழங்கப்பட்டுள்ள ஹோட்டல்களும் உணவகங்களும் அமைந்துள்ள பிரதேசங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) சுற்றுலாக் கைத்தொழில் துறையை மேம்படுத்தும் போர்வையில் இலங்கை பூராகவும் பேணிச் செல்லப்படுகின்ற மதுபான விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதன் காரணமாக மதுபாவனை அதிகரிப்பதனால் மதுபான விற்பனைக்காக உரிமங்கள் வழங்கப்படும் முறையை மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

6.

535/2020

கௌரவ ரோஹண பண்டார,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையிலான ஒவ்வொரு போகத்திலும் அநுராதபுரம் மாவட்டத்தில் பெறப்பட்டுள்ள நெல் அறுவடையினையும்;

(ii) மேற்படி நெல் அறுவடையிலிருந்து நெற் சந்தைப்படுத்தல் சபையினால் ஒவ்வொரு போகத்திலும் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவினையும்;

தனித்தனியாக யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அநுராதபுர மாவட்ட விவசாயிகளின் நெல் அறுவடையின் பெரும்பகுதியை நெற் சந்தைப்படுத்தல் சபையின் மூலம் எதிர்காலத்தில் கொள்வனவு செய்வதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவையென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

605/2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்தின் "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்தின் பிரகாரம், 2020/2021 பெரும்போக பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக இரசாயனப் பசளை இலவசமாக வழங்கப்படுமா;

(ii) ஆமெனில், பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் மொத்த நிலப்பரப்புக்கும் பசளை வழங்கப்படுமா;

(iii) நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் மொத்த நிலப்பரப்புக்கும் பசளை வழங்கப்படுமா;

(iv) ஆமெனில், நெற் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் ஒரு ஏக்கருக்கு ஒவ்வொரு பசளை வகைகளில் வழங்கப்படும் அளவானது வெவ்வேறாக யாது;

(v) மேலதிக பயிர்களை பயிரிடுவதற்காக ஒரு ஏக்கருக்கு வழங்கப்படும் பசளையின் அளவு யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

659/2020

கௌரவ சாந்த பண்டார,— பிரதம அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் நகரம், இலங்கையில் அமைந்துள்ள ஒரு முக்கியமான நகரம் என்பதையும்;

(ii) இந்நகரம் ஒரு முறையியலுக்கமைவாக அபிவிருத்தி செய்யப்படுதல் வேண்டும் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) குருநாகல் நகரை ஒரு முறையியலுக்கு அமைவாக அபிவிருத்தி செய்வதற்கான திட்டமொன்று இன்றளவில் தயார் செய்யப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், இத்திட்டத்தை செயற்படுத்துவதற்குத் தேவையான நிதியைப் பெற்றுக்கொள்வதற்கான வேலைத்திட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், மேற்படி நிதி திரட்டப்படும் மூலங்கள் யாவை;

(iv) குருநாகல் நகரின் அபிவிருத்திப் பணிகளை துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

723/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இதுவரையில் தீயணைப்புப் பிரிவொன்று இன்மையால் எதிர்பாராத தீ விபத்துக்கள் இடம்பெறும் சந்தர்ப்பங்களில் உயிர் மற்றும் சொத்துச் சேதங்கள் ஏற்படுகின்றதென்பதையும்;

(ii) மன்னார் நகர சபைக்கும் முல்லைத்தீவு கரைத்துறைபற்று பிரதேச சபைக்கும் தீயணைப்புப் பிரிவுகளை பெற்றுத்தருவதாக வாக்குறுதியளித்திருந்த போதிலும், இதுவரை அவை வழங்கப்படவில்லையென்பதையும்;

(iii) மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் தீ விபத்து இடம்பெறும் சந்தர்ப்பங்களில் வவுனியாவிலிருந்து தீயணைப்பு வாகனம் வரவேண்டியிருப்பதுடன் இதற்கு சுமார் 1½ மணித்தியாலங்கள் செல்லுமென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கென தீயணைப்புப் பிரிவுகள் பெற்றுக்கொடுக்கப்படும் திகதி யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

859/2020

கௌரவ ஜகத் குமார,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் பொதுப் போக்குவரத்துக் கட்டமைப்பை வலுவூட்டுவதற்கான வேலைத்திட்டத்தின் கீழ் பேருந்துகள், புகையிரதங்கள் மற்றும் முச்சக்கர வண்டிகள் முதலிய போக்குவரத்து ஊடகங்களை அபிவிருத்தி செய்வதற்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) இலங்கையின் தற்போதைய போக்குவரத்துக் கட்டமைப்பை வலுவூட்டுவதற்காக தேவைப்படும் இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கை போக்குவரத்துச் சபையின் சாரதி மற்றும் நடந்துநர் பதவிகளில் வெற்றிடங்கள் நிலவுவதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி பதவிகளில் நிலவும் வெற்றிடங்கள் தனித்தனியே எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தலங்கம டிப்போவினால் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பேருந்துகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அதன் பொருட்டு சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் உட்பட போதிய பணியாட்டொகுதியினர் உள்ளனரா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அவ்வெண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(iv) இன்றேல், போக்குவரத்து சேவை இடம்பெறும் விதம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2021 யூலை 22, வியாழக்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

67/2020

கௌரவ ஹேஷா விதானகே,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்திற்கமைய கழிவு முகாமைத்துவம் எனும் விடயம் மாகாண சபைகளின் கீழ் வருகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறாயின், மாகாண சபை முறை ஆரம்பிக்கப்பட்டது முதல் இது வரை திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்கென பிரத்தியேகமான நிறுவனங்களை அமைத்துள்ள மாகாண சபைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) அவ்வாறான விசேட நிறுவனம் அமைக்கப்படாத மாகாண சபைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அவ்வாறான நிறுவனம் அமைக்கப்படாத மாகாண சபைகளுக்கென விசேட நிறுவனத்தை அமைப்பது தொடர்பில் அமைச்சு எடுக்கும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

199/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சரும் நிதி அமைச்சரும், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் காணப்படுகின்ற அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்களின் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களின் எண்ணிக்கை;

(ii) அவற்றின் பெயர்கள்;

தனித்தனியே யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவற்றில் தனியார் கட்டிடங்களில் அமைச்சுக்களை பேணிவரப்படுகின்ற அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்களின் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களின் எண்ணிக்கை;

(ii) அவற்றின் பெயர்கள்;

(iii) அவற்றுக்காக செலுத்தப்படுகின்ற மாதாந்த வாடகைத் தொகை;

தனித்தனியே யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) தனியார் கட்டிடங்களில் பேணிவரப்படுகின்ற அமைச்சுக்களை அரசாங்க கட்டிடங்களுக்குக் கொண்டு செல்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3.

242/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகன உதிரிப் பாகங்களின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை யாதென்பதையும்;

(iii) மேற்படி மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iv) மேற்படி மோட்டார் வாகன உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு மோட்டார் வாகன உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் தனித்தனியாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

355/2020

கௌரவ புத்திக பத்திறண, — நீர்வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குடிநீர் வழங்கப்படுகின்ற அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள வாவிகளின் நீரின் தரம் வீழ்ச்சியடைந்துள்ளது என்பதையும்;

(ii) E-coli உள்ளிட்ட பல்வேறு கிருமிகள் கலந்துள்ளதால் இந்நீர் மக்களின் சுகாதாரத்திற்குப் பாதகமானது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) குடிநீரைப் பெற்றுக்கொள்வதற்காக பயன்படுத்தப்படுகின்ற அநுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள வாவிகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி வாவிகளிலுள்ள நீரின் தரத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

519/2020

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வாழைச்சேனையில் அமைந்துள்ள கடற்றொழில் துறைமுகத்தில் சாதாரண இழுவைப் படகுகளை கையாளுவதற்கான வசதிகள் உள்ள போதும் அதன் நுழைவாயில் மற்றும் ஆழம் போதுமானதாக இல்லாததால் மிகப் பெரிய இழுவைப் படகுகளை கையாளுதல் பிரச்சினையான விடயமொன்றாகி உள்ளதோடு, இதன் காரணமாக உள்நாட்டு கடற்றொழிலாளர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளார்கள் என்பதையும்;

(ii) மேற்படி கடற்றொழில் துறைமுகத்தை விரிவாக்குவதன் தேவையொன்று உள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி கடற்றொழில் துறைமுகத்தை விரிவாக்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

543/2020

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2015 ஆண்டு தொடக்கம் 2018 வரையான காலப்பகுதியில் இலங்கையின் தேசிய பாடசாலைகளுக்கான கல்விசாரா பதவியணிகளுக்கு ஊழியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டார்கள் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வொரு தேசிய பாடசாலைக்கும் இவ்வாறு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பதவிப் பெயர்கள் தனித்தனியே யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு தேசிய பாடசாலைக்கும் இவ்வாறு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியே எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

671/2020

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அண்மையில் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட பிங்கிரிய கிணியம நிர்ப்பாசனத் திட்டத்தின் உத்தேசிக்கப்பட்ட எதிர்கால பணிகளுக்குச் செலவாகும் நிதி எவ்வாறு திரட்டப்படும் என்பதையும்;

(ii) மேற்படி உத்தேசிக்கப்பட்ட பணிகளுக்குச் செலவாகும் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி உத்தேசிக்கப்பட்ட பணிகளுக்காக எவ்வளவு காலம் செல்லும் என்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்தின் மூலமாக நீரைப் பெறும் குளங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

757/2020

கௌரவ அமரகீர்த்தி அத்துகோரள,— வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) பொலன்னறுவை மாவட்டத்தில் —

(i) காட்டு யானைகளின் நடமாட்டம் தொடர்பாக ஆய்வு நடத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) காட்டு யானைகள் அதிகளவில் நடமாடும் தேசிய வனப் பூங்காக்கள் மற்றும் வன ஒதுக்கங்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) யானை கொரிடோக்கள் இருப்பின், அவை அமைந்துள்ள இடங்கள் யாவை என்பதையும்;

(iv) யானை கொரிடோக்களுக்கு குறுக்கே கிராமங்கள் அல்லது மக்கள் குடியிருப்புப் பகுதிகள் இருப்பின், அவை யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு செப்டெம்பர் வரை மாவட்டத்தில் யானை - மனித மோதல் காரணமாக —

(i) உயிரிழந்த ஆட்கள் மற்றும் யானைகளின் எண்ணிக்கை பிரதேச செயலகப் பிரிவு வாரியாக எவ்வளவென்பதையும்;

(ii) சேதமடைந்துள்ள வீடுகளின் எண்ணிக்கையானது வருட வாரியாக எவ்வளவென்பதையும்;

(iii) உயிரிழந்த மற்றும் சொத்துக்களை இழந்தவர்களுக்கு செலுத்தப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகை ஒவ்வொரு நபர் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மாவட்டத்தில் யானை-மனித மோதலை கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப் பட்டுள்ள புதிய நடவடிக்கைகள் யாவை என்பதை மேலும் அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

9.

803/2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிளிநொச்சி மாவட்டத்தின் கரச்சி பிரதேச செயலாளர் பிரிவில் கிளி/வட்டக்கச்சி மத்திய மகா வித்தியாலயம் என்ற பெயரில் ஒரு பாடசாலை உள்ளதென்பதையும்;

(ii) மேற்படி பாடசாலையின் பொருட்டு புதிய கேட்போர் கூடமொன்றை நிர்மாணிப்பதற்காக 2017ஆம் ஆண்டில் அடிக்கல் நாட்டப்பட்டது என்பதையும்;

(iii) ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் விடுவிக்கப்படாமை காரணமாக கேட்போர் கூடத்தை நிர்மாணிக்கும் பணிகள் இன்றளவில் நிறுத்தப்பட்டுள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கேட்போர் கூடத்தை நிர்மாணிப்பதற்காக நிதி ஏற்பாடுகளை ஒதுக்கிய அமைச்சு யாது என்பதையும்;

(ii) மேற்படி நிதி ஏற்பாடுகள் விடுவிக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி கேட்போர் கூடத்தை முழுமையாக நிர்மாணிப்பதற்குத் தேவையான தொகை எவ்வளவு;

(ii) அதற்கென நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்படும் திகதி யாது;

(iii) மேற்படி நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு மாணவர்களின் பயன்பாட்டுக்காக அதனை வழங்க எடுக்கும் காலம் யாது;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

10.

871/2020

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான டிப்போக்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு டிப்போவிலும் தற்போது போக்குவரத்தில் ஈடுபடுத்தக்கூடிய நிலையிலுள்ள பேரூந்துகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு டிப்போவிலும் தற்போது நிலவும் ஊழியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் அறிவிப்பாரா?

(ஆ) திருகோணமலை மாவட்டத்திலுள்ள டிப்போக்களின் மனித வளம் மற்றும் அந்த டிப்போக்களில் காணப்படும் பேரூந்துத் தொகுதிகள் என்பவற்றை அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2021 ஆகஸ்ட் 03, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

71/2020

கௌரவ ஹேஷா விதானகே,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள உள்நாட்டு பால்மா உற்பத்தி தொழிற்சாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அந்த தொழிற்சாலைகளின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(iii) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் மேற்படி தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட அளவுகள் ஒவ்வொரு வருட அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) தற்போது உள்நாட்டு பால்மா உற்பத்தி தொழிற்சாலைகள் முகம்கொடுத்துள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

243/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட துணி வகைகள் மற்றும் ஆடைகளின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி துணி வகைகள் மற்றும் ஆடைகள் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iv) மேற்படி துணி வகைகள் மற்றும் ஆடைகளை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு துணி வகைகள் மற்றும் ஆடைகளை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

256/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ள சிறைச்சாலை அலுவலர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி திணைக்களத்தில் தற்போது சேவையாற்றிவருகின்ற சிறைச்சாலை அலுவலர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இத்திணைக்களத்தில் தற்போது நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சிறைச்சாலைகள் திணைக்களத்தில் தற்போது நிலவுகின்ற வெற்றிடங்களை நிரப்புதவதற்காக;

(ii) சிறைச்சாலைகளில் இடம்பெறுகின்ற முறைகேடுகளை ஒழிப்பதற்காக;

அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

271/2020

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015.01.23 தொடக்கம் 2018.10.31 வரையிலான காலப்பகுதியில் வெளிநாட்டுப் பயிற்சிகளில் பங்கேற்ற ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தைச் சேர்ந்த ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி பயிற்சிகளுக்காக நிறுவனத்தினால் உறப்பட்ட செலவினம் ஒவ்வொரு ஊழியருக்கமைவாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) வெளிநாடுகளில் பயிற்சி பெற்ற ஊழியர்களின் அறிவினை இலங்கைக்கு பொருந்தும் வகையில் பயன்படுத்திக் கொள்வதற்கான முறையான வேலைத்திட்டமொன்று நிறுவனத்தில் நடைமுறையிலுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டம் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

618/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை அரச பல்கலைக்கழகங்களில் வெளிவாரி பட்டப் படிப்பு கற்கைநெறிகளை பயில்வதற்காக பதிவு செய்து கொண்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வெளிவாரி பட்டப் படிப்பு கற்கைநெறிகளை பயில்வதற்காக மாணவர்களை பதிவு செய்யும் நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு இன்றளவில் தீர்மானமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாறானதொரு தீர்மானத்தை மேற்கொள்வதற்கு வழிவகுத்த காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) இதன் காரணமாக தற்போது வெளிவாரி பட்டப் படிப்பினை மேற்கொள்வதற்கு பதிவு செய்து கொண்டுள்ள மாணவர்கள் பாரிய அசௌகரியத்திற்கு முகங்கொடுப்பார்கள் என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், வெளிவாரி பட்டப் படிப்பு கற்கைநெறிகளை மீண்டும் துரிதமாக ஆரம்பிப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

833/2020

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் அனுமதிப்பத்திரம் பெற்று நடாத்திச் செல்லப்படுகின்ற மதுபான உற்பத்திச்சாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவ்வுற்பத்திச்சாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அவ்வுற்பத்திச்சாலைகள் நடாத்திச் செல்லப்படுகின்ற இடங்களின் முகவரிகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே (அ) (i) இல் குறிப்பிடப்பட்ட மதுபான உற்பத்திச்சாலைகளுள் 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மூடப்பட்டுள்ள மதுபான உற்பத்திச்சாலைகள் உள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த உற்பத்திச்சாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அவ்வாறு மூடப்பட்ட உற்பத்திச்சாலைகளில் மீண்டும் மதுபான உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்கு ஏதுவாக அமைந்த காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

872/2020

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்திலுள்ள அரசாங்கப் பாடசாலைகளுக்கென அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அந்த எண்ணிக்கையானது ஒவ்வொரு பாடத்தின் அடிப்படையில் வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) மாவட்டத்திலுள்ள அரசாங்கப் பாடசாலைகளில் தற்போது பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) அப்பாடசாலைகளில் தற்போது நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு பாடத்தின் அடிப்படையில் வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(v) மேற்படி ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

907/2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம், தலாவ நகரின் பேருந்து தரிப்பிடத்தின் கட்டிடங்கள் மிகவும் பழமையான மற்றும் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றதென்பதையும்;

(ii) மழை நாட்களில் மேற்படி பேருந்து தரிப்பிடம் பயணிகளுக்கு பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பேருந்து நிலையத்தை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

930/2020

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெளிநாட்டலுவல்கள் அமைச்சினால் பேணப்பட்டு வருகின்ற "Contact Srilanka" இணையத்தளத்தில் பதிவு செய்து இலங்கைக்கு மீள வருவதற்கு விண்ணப்பித்துள்ள வெளிநாடு வாழ் இலங்கை பிரஜைகளின் எண்ணிக்கை;

(ii) மேற்படி பிரஜைகளில் இன்றளவில் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ள பிரஜைகளின் எண்ணிக்கை;

ஒவ்வொரு நாட்டின் பிரகாரம் தனித்தனியாக எத்தனையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கைக்கு மீள வருவதற்கு விண்ணப்பித்துள்ள வெளிநாடு வாழ் இலங்கையர்களை அழைத்து வருவதற்கு வகுக்கப்பட்டுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(ii) மாதாந்தம் அழைத்து வருவதற்கு திட்டமிடப்பட்டுள்ள எண்ணிக்கை அண்ணளவாக எத்தனையென்பதையும்;

(iii) சகலரையும் மீள இலங்கைக்கு அழைத்து வருவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி இலங்கையர்கள் மத்தியில் உள்ள நோயாளர்கள், முதியோர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், சிறுவர்கள் மற்றும் தொழில் இழந்தவர்கள் போன்ற விசேட குழுக்களின் நலனோம்புகை தொடர்பாக மேற்படி ஒவ்வொரு நாட்டிலும் அமைந்துள்ள இலங்கை தூதுவராலயங்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் வெவ்வேறாக யாவை என்பதையும் அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

10.

973/2020

கௌரவ எஸ். எம். எம். முஸ்ஸாரப்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைப் பல்கலைக்கழகங்களுள், மருத்துவம், பொறியியல், விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் ஆகிய பாடநெறிகள் நடாத்தப்படுகின்ற பல்கலைக்கழகங்களின் பெயர்கள் வெவ்வேறாக யாவை;

(ii) இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்திலுள்ள பீடங்களினதும் அதன் வளாகங்களினதும் பெயர்கள் யாவை;

(iii) 2015 முதல் 2019 ஆம் ஆண்டு வரையில் மேற்குறிப்பிட்ட பல்கலைக்கழகத் திற்குரியதாக தாபிக்கப்பட்டுள்ள வளாகங்களின் பெயர்கள் யாவை;

(iv) மேற்குறிப்பிட்ட வளாகங்களுக்கு சேர்க்கப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழத்தில் விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவத்திற்கான வளாகமொன்றை ஆரம்பிப்பாரா;

(ii) இதற்காக சுற்றுலாக் கைத்தொழிலுக்குப் புகழ் பெற்ற அருகம்பே அமைந்துள்ள பொத்துவில் பிரதேசம் தெரிவுசெய்யப்படுமா;

(iii) ஆமெனில், பொத்துவில் பிரதேசத்தை மையமாக வைத்து குறிப்பிட்ட வளாகத்தை ஆரம்பிப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

# 2021 ஆகஸ்ட் 04, புதன்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

29/2020

கௌரவ ஹேஷா விதானகே,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 70 வயதைப் பூர்த்தி செய்துள்ள சிரேஷ்ட பிரசைகளுக்கு செலுத்தப்படுகின்ற மாதாந்தக் கொடுப்பனவு ரூ. 2000/= ஆகும் என்பதையும்;

(ii) அவ்வாறு செலுத்தப்படுகின்ற கொடுப்பனவில் ரூ 100/= 2016 சனவரி மாதம் முதல் செலுத்தப்படாது தடுத்து வைக்கப்பட்டு வருகின்றது என்பதையும்;

(iii) இவ்வாறு நிதியை தடுத்து வைத்துக் கொள்வது தொடர்பில் சிரேஷ்ட பிரசைகசள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றார்கள் என்பதையும்;

(iv) இவ்வாறு தடுத்து வைக்கப்படுகின்ற நிதி, சமூக பாதுகாப்பு நிதியம் எனும் கணக்கில் வைப்புச் செய்யப்படுகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இதுவரை அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ள தொகை யாது என்பதையும்;

(ii) அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ள நிதியைப் பயன்படுத்தி சிரேஷ்ட பிரசைகளின் நலனுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவ்வாறு ரூ. 100/= வீதம் தடுத்து வைப்பதை இடைநிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

136/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— மின்சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை இலங்கை முழுவதிலும் இடம்பெற்றுள்ள மின்சாரத் தடைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி மின்தடைகள் இடம்பெற்ற திகதிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி மின்தடைகளின் பின்னர் நியமனம் செய்யப்பட்ட குழுக்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) மேற்படி குழுக்களினால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் யாவை என்பதையும்;

(v) இலங்கைக்கு 24 மணித்தியாலங்களும் தொடர்ச்சியாக மின்சாரம் வழங்க அமைச்சு வசமுள்ள வேலைத்திட்டம் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

177/2020

கௌரவ எஸ். எம். மரிக்கார்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கையின் பிரதான வைத்தியசாலையொன்றாகிய கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற பதின்மூன்று மாடிகளைக் கொண்ட வாட்டுத் தொகுதியின் நிர்மாணப் பணிகள் மிகவும் மந்த கதியில் இடம்பெறுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வாட்டுத் தொகுதியினை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட செலவுத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) குறித்த நிர்மாணப் பணிக்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ள நிறுவனம் யாதென்பதையும்;

(iii) மேற்படி நிர்மாணப் பணிகளை நிறைவு செய்ய எதிர்பார்க்கும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

189/2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— பிரதம அமைச்சரும், நிதி அமைச்சரும், புத்த சாசன, சமய, சலாசார அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) சிவில் பாதுகாப்புப் படையணியானது கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் பல விவசாயப் பண்ணைகளைப் பேணி வருகின்றது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் அவ்வாறு பேணப்பட்டு வருகின்ற பண்ணைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொறு பண்ணையிலும் வேலை செய்வோரின் எண்ணிக்கையும், அதன் விஸ்தீரணம் ஏக்கர்களிலும், மாவட்டம் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு அடிப்படையில் அவற்றின் அமைவிடமும் யாவை என்பதையும்;

வெவ்வேறாக அவர் இச் சபையில் குறிப்பிடுவாரா?

(இ) (i) பாதுகாப்புப் படையினரால் பேணப்பட்டு வருகின்ற பண்ணைகளில், வட மாகாண சபைக்கு ஒப்படைக்கப்பட வேண்டிய பண்ணைகளை இதுவரை ஒப்படைக்காதிருப்பதற்கான காரணம் யாதென்பதையும்;

(ii) அப் பண்ணைகள் வட மாகாண சபைக்கு எப்போது ஒப்படைக்கப்படும் என்பதையும்?

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5.

324/2020

கௌரவ புத்திக பத்திறண,— சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்குத் தனித்துவமான பன்னத்தாவர வகையினங்களின் எண்ணிக்கை எத்தனை;

(ii) அவற்றுக்கு மத்தியில் அழிவடையும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதன் காரணமாக சிவப்பு தரவுப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பன்னத்தாவர வகையினங்கள் யாவை;

(iii) இன்றளவில் அழிவடைந்துள்ள இலங்கைக்குத் தனித்துவமான பன்னத்தாவர வகையினங்கள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கைக்குத் தனித்துவமான பன்னத்தாவரங்கள் தொடர்பாக அண்மையில் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், அது மேற்கொள்ளப்பட்ட திகதி யாது;

(iii) இன்றேல், அத்தகைய ஆய்வு நடத்தப்படுமா;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இலங்கைக்குத் தனித்துவமான பன்னத்தாவரங்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை;

என்பதை அவர் மேலதிகமாகவும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

6.

469/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வோர் ஆண்டிலும் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஆண்டு வாரியாக தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வோர் ஆண்டிலும் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி, குறித்த ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தின் சதவீதமாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட ஒவ்வொர் ஆண்டிலும் பதிவு செய்யப்பட்ட புத்தாக்கங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

தனித்தனியே அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) காப்புரிமை அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு பின்பற்றப்பட வேண்டிய முறையியல் யாதென்பதையும்;

(ii) புத்தாக்க முயற்சிகளில் ஈடுபடும் ஆராய்ச்சியாளர்கள் முகங்கொடுக்கும் நிதி ரீதியான சிரமங்களைக் குறைப்பதற்காக வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

613/2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கலாவாவி முதல் திசாவாவி வரையில் நீரை எடுத்துச் செல்கின்ற பழைய யோத கால்வாயின் மதிற்சுவரானது சுமார் 12 கி.மீற்றர் நீளமானதாகக் காணப்படுவதுடன், ஏராளமான விவசாயிகள் இக்கால்வாயின் மதிற்சுவரை பல்வேறு தேவைகளுக்காக பயன்படுத்துகின்றனர் என்பதையும்;

(ii) தற்போது சேதமடைந்துள்ள இந்த மதிற்சுவரை புனரமைப்பதன் மீது அதிகாரிகளின் கவனம் செலுத்தப்படவில்லை என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இம்முறை பெரும்போகத்துக்கு முன்னதாக மேற்படி கால்வாயின் மதிற்சுவரை புனரமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா;

(ii) ஆமெனில், குறிப்பிட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

1337/2020

கௌரவ கே.பீ.எஸ். குமாரசிறி,— வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் சுமார் 7500 காட்டு யானைகள் உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) காட்டு யானைகளினால் வருடாந்தம் 10 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பயிர்ச் சேதம் ஏற்படுத்தப்படுகின்றன என்பதையும்;

(iii) யானை – மனித மோதலின் காரணமாக 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை முறையே 206, 279, 319 மற்றும் 293 காட்டு யானைகளும் 70, 87, 98 மற்றும் 93 மனிதர்களும் மரணித்துள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) காட்டு யானைகள் கிராமங்களுக்குள் நுழைவதனைத் தடுப்பதற்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள யானை வேலிகளை மறுசீரமைப்பதற்கும், பராமரிப்பதற்கும் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(ii) புதிய யானை வேலிகளை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா;

(iii) ஆமெனில், அவற்றின் எண்ணிக்கை எத்தனை;

(iv) நிர்மாணிக்கப்பட்டுள்ள யானை வேலிகளை பராமரிப்பதற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள சிவில் பாதுகாப்புப் படையணியைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எத்தனை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) கிராமங்களுக்குள் நுழையும் யானைகளை விரட்டுவதற்காக ஆளொருவருக்கு மாதாந்தம் வழங்கப்படும் யானை வெடிகளின் எண்ணிக்கை எத்தனை;

(ii) அவ் வெடிகளை பகிர்ந்தளிப்பதற்காக முறையான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2021 ஆகஸ்ட் 05, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

72/2020

கௌரவ ஹேஷா விதானகே,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை திண்மக் கழிவு முகாமைத்துவத்துடன் தொடர்புடைய சர்வதேச பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றிய உள்ளூராட்சிமன்ற பிரதிநிதிகளின் எண்ணிக்கையானது ஒவ்வொரு வருடத்தின் அடிப்படையில் வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு பிரதிநிதியினதும் உரிய உள்ளூராட்சிமன்றத்தின் பெயர்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) அந்த ஒவ்வொரு செயலமர்வும் இடம்பெற்ற நாடு, நகரம் மற்றும் காலப்பகுதி என்பவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு செயலமர்விலும் பங்குபற்றுவதற்காக செலவிட்ட பணம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(v) அச்செயலமர்வுகளின் பின்னர் திண்மக் கழிவு முகாமைத்துவத்துடன் தொடர்புடைய நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்திய உள்ளூராட்சி மன்றங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

244/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட மருத்துவ தொழில்நுட்ப உபகரணங்களின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி மருத்துவ தொழில்நுட்ப உபகரணங்கள் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iv) மேற்படி மருத்துவ தொழில்நுட்ப உபகரணங்களை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு மருத்துவ தொழில்நுட்ப உபகரணங்களை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

260/2020

கௌவ சமிந்த விஜேசிறி,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகார சபையின் தற்போதைய அங்கத்தவர்களின் பெயர்கள் மற்றும் தகைமைகள் யாவை என்பதை வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) கடந்த காலப்பகுதியில் சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகார சபையின் நிர்வாக நடவடிக்கைகளில் சீர்குலைவு ஏற்பட்டிருந்ததென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) ஆமெனில், சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதியின் நிர்வாக நடவடிக்கைகளை முறைசார்படுத்துவதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4.

323/2020

கௌரவ புத்திக பத்திறண,— சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்குத் தனித்துவமான பிளாந்தன்களினதும் அத்தகைய தாவர வகையினங்களினதும் எண்ணிக்கை எத்தனை;

(ii) அவற்றுக்கு மத்தியில் அழிவடையும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதன் காரணமாக சிவப்பு தரவுப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பிளாந்தன்கள் மற்றும் அத்தகைய தாவர வகையினங்கள் யாவை;

(iii) இன்றளவில் அழிவடைந்துள்ள இலங்கைக்குத் தனித்துவமான பிளாந்தன்கள் மற்றும் அத்தகைய தாவர வகையினங்கள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கைக்குத் தனித்துவமான பிளாந்தன்கள் மற்றும் அத்தகைய தாவர வகையினங்கள் தொடர்பாக அண்மையில் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், அது மேற்கொள்ளப்பட்ட திகதி யாது;

(iii) இன்றேல், அத்தகைய ஆய்வு நடத்தப்படுமா;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இலங்கைக்குத் தனித்துவமான பிளாந்தன்களையும் அத்தகைய தாவர வகையினங்களையும் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை,

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை,

என்பதை அவர் மேலதிகமாகவும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5.

619/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது கலைப் பிரிவில் வெளிவாரி பட்டப் படிப்பு கற்கை நெறிகளுக்கென பரிந்துரைக்கப்பட்டுள்ள பாடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பாடங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி பாடப் பிரிவுகள் ஏதேனும் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில் அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) நடப்பு தொழில் சந்தைக்கும் உலகப் போக்குகளுக்கும் இசைந்தொழுகக்கூடிய வெளிவாரி பட்டதாரிகளை உருவாக்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

818/2020

கௌரவ சாந்த பண்டார,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) “சுபீட்சத்தின் நோக்கு” கொள்கைப் பிரகடனத்திற்கமைவாக உள்நாட்டுக் கைத்தொழில்களை ஊக்குவிப்பது அரசாங்கத்தின் நோக்கமாகும் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2020 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட புதிய கைத்தொழில்கள் யாவை என்பதையும்;

(ii) 2021 ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்காக திட்டமிடப்பட்டுள்ள புதிய கைத்தொழில்கள் மற்றும் அவை ஆரம்பிக்கப்படவுள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி கைத்தொழில்ளை ஆரம்பிப்பதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முன்வந்துள்ளனரா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி முதலீட்டாளர்களை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

834/2020

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— மின்சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சூரிய மின்சக்தி, காற்றலை மின்சக்தி மற்றும் சிறிய மின்னுற்பத்தி நிலையங்களிலிருந்து மின்சாரம் கொள்வனவு செய்யப்படும்போது இலங்கை மின்சார சபையினால் பின்பற்றப்படும் முறையியல், ஒவ்வொரு கொள்வனவு வகையின் அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) நிலையான விலையில் மின்சாரம் கொள்வனவு செய்யப்பட்ட காலப்பகுதியில், மேற்கூறப்பட்ட மின்சார கொள்வனவுகளின்போது அலகொன்றுக்கு இறுதியாக செலுத்தப்பட்ட விலைகள், ஒவ்வொரு கொள்வனவு வகையின் அடிப்படையில் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி (ii) இல் குறிப்பிட்ட விலைகள் தீர்மானிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

851/2020

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலனறுவை மாவட்டத்தில் அமைந்துள்ள பிரதான வாவிகள் பலவற்றில் சல்வீனியா எனப்படும் பாசி வகை வளர்ந்துள்ளதென்பதையும்;

(ii) மேற்படி வாவிகளுக்கு மத்தியில் கிரிதலே விவசாய குடியிருப்புத் திட்டத்திற்கான தம்பல வாவி மற்றும் கடவல வாவி ஆகிய வாவிகளில் இந்த பாசி வகை பெருமளவில் வளர்ந்துள்ளதென்பதையும்;

(iii) மேற்படி வாவிகளில் பாசி வளர்ந்துள்ளதனால் அவற்றில் சேகரித்து வைக்கக்கூடிய நீரின் அளவு குறைந்துள்ளதோடு அவ்வாவிகளிலிருந்து விவசாய நடவடிக்கைகளுக்காக வழங்கப்படும் நீரின் அளவும் குறைந்துள்ளதென்பதையும்;

(iv) கடவல வாவி மழைக் காலங்களில் பெருக்கெடுப்பதோடு அந்த நீரில் அடித்து வரப்படுகின்ற பாசி விதைகளின் மூலம் அவ்வாவியைத் தொடந்து கீழ்ப் பகுதியில் அமைந்துள்ள பராக்கிரம சமுத்திரத்தில் பாசி பெருகுவதற்கான ஆபத்துள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறாயின், தம்பல வாவி மற்றும் கடவல வாவி ஆகியவற்றில் தற்போது வளர்ந்துள்ள பாசியினை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

931/2020

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைப் புலம்பெயர் தொழிலாளர்களை இலங்கைக்கு மீள அழைத்து வருவதற்காக விமான வசதிகளை வழங்குவதன் பொருட்டு அனுமதியளிக்கப்பட்டுள்ள நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி நிறுவனங்களைத் தெரிவுசெய்த செயன்முறை யாதென்பதையும்;

(iii) மேற்படி புலம்பெயர் தொழிலாளர்களை இலங்கைக்கு மீள அழைத்து வருவதற்கு மேற்குறிப்பிட்ட நிறுவனங்கள் அநீதியான முறையில் கட்டணங்களை அறவிடுகின்றன என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கைக்கு மீள வருகின்ற இலங்கைப் புலம்பெயர் தொழிலாளர்களை தொற்றுத் தடைகாப்பின் நிமித்தம் தனிமைப்படுத்துவதற்கு அங்கீகாரமளிக் கப்பட்டுள்ள தனியார் நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) அந் நிறுவனங்களைத் தெரிவுசெய்த செயன்முறை யாதென்பதையும்;

(iii) இலங்கைக்கு வருகைதந்துள்ள இலங்கைப் புலம்பெயர் தொழிலாளர்களை தொற்றொதுக்க தனிமைப்படுத்தல் செயற்பாட்டுக்காக மேற்படி நிறுவனங்கள் அநீதியான முறையில் கட்டணங்களை அறவிடுகின்றன என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

974/2020

கௌரவ எஸ். எம். எம். முஸ்ஸாரப்,— நீர்வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பொத்துவில் பிரதேச சபையானது தமது ஆளுகைப் பிரசேத்தில் அமைந்துள்ள வீடுகளுக்கு சீரற்ற முறையில் நீர் வழங்குகின்றது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள, நீர் மற்றும் கழிவு நீர் அகற்றல் வசதிகளற்ற வீடுகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி வீடுகளுக்கு நீர் மற்றும் கழிவு நீர் அகற்றல் வசதிகளை வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று உள்ளதா;

(iii) ஆமெனில், இதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2021 ஆகஸ்ட் 06, வெள்ளிக்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

81/2020

கௌரவ ஹேஷா விதானகே,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) விவசாய இரசாயனங்களினதும் வளமாக்கிகளினதும் பாவனையினாலும் ஏனைய பல்வேறு மனித செயற்பாடுகளின் விளைவினாலும் சுற்றாடலுக்கு ஏற்படும் அழிவு காரணமாக இலங்கையிலுள்ள நீர் மூலங்கள் மாசடைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மக்களின் பாவனைக்கு பொருத்தமற்ற நீரைக் கொண்டுள்ள இலங்கையிலுள்ள ஆறுகள் வாவிகள் மற்றும் ஏனைய நீர் மூலங்கள் தொடர்பாக ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஆறுகள், வாவிகள் மற்றும் ஏனைய நீர் மூலங்கள் மாசடைவதற்கான பிரதான காரணங்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி இடங்களிலுள்ள நீரை பாவனைக்கு உகந்த வகையில் தூய்மையாக்குவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) எதிர்வரும் காலத்தில் நீர் மூலங்கள் மாசடைவதைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

171/2020

கௌரவ எஸ். எம். மரிக்கார்,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) லோ லெவல் வீதியில் அம்பதலே தொடக்கம் ஒருகொடவத்த வரையிலான பகுதியின் அபிவிருத்தி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படவில்லை என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வீதிக்கான அபிவிருத்திப் பணிகள் தாமதமடைவதற்கான காரணங்கள் யாவை என்பதையும் ;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வீதியில் இதுவரை அபிவிருத்தி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள அளவு மற்றும் பூர்த்தி செய்யப்படுவதற்கு எஞ்சியுள்ள அளவு;

(ii) மேற்படி வீதி அபிவிருத்திக் கருத்திட்டத்தின் காரணமாக சொத்துக்களை இழந்தவர்களுள் ஏற்கனவே நட்டஈடுகள் வழங்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை மற்றும் நட்டஈட்டுத் தொகை;

(iii) மேற்கொண்டும் நட்டஈடுகள் வழங்கப்படவிருக்குமாயின் குறிப்பிட்ட நபர்களின் எண்ணிக்கை மற்றும் நட்டஈடாக வழங்கப்படும் தொகை மற்றும் நட்டஈடு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படும் திகதி யாதென்பதை தனித்தனியாகவும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

178/2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்குகின்ற தபாலகங்கள் மற்றும் உபதபாலகங்கள் வகைப்படுத்தலுக்கு அமைய சீராக செயற்படுகின்றனவா என்பதையும்;

(ii) மேற்படி மாவட்டத்திலுள்ள தபாலகங்கள் மற்றும் உப தபாலகங்களின் எண்ணிக்கை தனித்தனியே யாவையென்பதையும்;

(iii) நிரந்தர காணி மற்றும் கட்டிடங்களைக் கொண்ட தபாலகங்கள் மற்றும் உப தபாலகங்களின் எண்ணிக்கை தனித்தனியே யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பாரதிபுரம், புன்னைநீராவி, பள்ளிக்குடா ஆகிய பிரதேசங்களில் உப தபாலகங்கள் அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், 2016.09.05 ஆம் திகதி அப்போதைய அமைச்சருக்கு என்னால் அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்திற்கு அமைய, தபால் மாஅதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்ட 2016.09.09 ஆம் திகதிய PPS&MR/HR/09-182 ஆம் இலக்க கடிதம் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளாமைக்கான காரணம் யதென்பதையும்;

(iii) கல்மடுநகர், திருநகர், கோணாவில், கரடிப்போக்கு, திருவையாறு, அம்பாள்குளம், முரசுமோட்டை, தருமபுரம், கண்டாவளை, புளியம்பொக்கணை, குஞ்சுப்பரந்தன், சிவநகர், முகமாலை, இயக்கச்சி கிளாலி, எழுதுமட்டுவாள், சோறன்பற்று, தட்டுவன்கொட்டி, சுண்டிக்குளம், செட்டியகுறிச்சி, இரணைதீவு, கௌதாரிமுனை, பல்லவராயன்கட்டு, நல்லூர், கிராஞ்சி, வேரவில் ஆகிய இருபத்தாறு (26) உபதபாலகங்களுக்கு நிரந்தர கட்டட வசதிகளைப் பெற்றுக் கொடுக்கும் திகதி யாதென்பதையும்;

(iv) கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதான தபாலகங்களான கிளிநொச்சி, பரந்தன், பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய நான்கு தபாலகங்களும் நவீன/கணினி வசதிகளுடன் இயங்கிவருகின்றனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

284/2020

கௌரவ புத்திக பத்திரண,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் காணப்படும் மனித நுகர்விற்கு உகந்த கீரை வகைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி கீரைகளில் காணப்படும் போசாக்குத் தன்மை தொடர்பில் முறையான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதனை மேற்கொண்ட நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்;

(iv) மேற்படி கீரை வகைகளுள் இலங்கைக்கே தனித்துவமான கீரை வகைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(v) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உள்ளூர் கீரைகளில் போசாக்கு மற்றும் மூலிகைத் தன்மை அதிகம் என்பதையும்;

(ii) காடழிப்பு மற்றும் இரசாயனப் பசளை பயன்பாட்டின் காரணமாக மேற்படி கீரை வகைகள் அரிதாகி உள்ளதென்பதையும்;

(iii) அவற்றுள் சில கீரை வகைகள் தற்போது அழிந்து விட்டதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) உள்ளூர் கீரை வகைகளை பிரபல்யப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5.

431/2020

கௌரவ சாந்த பண்டார,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கையின் மத்திய அதிவேக நெடுஞ்சாலை தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருவதையும்;

(ii) அந்த அதிவேக நெடுஞ்சாலையின் ஒரு பகுதி அளவ்வ மற்றும் நாரம்மல பிரதேச செயலகப் பிரிவுகளினூடாக நிர்மாணிக்கப்படுவதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இந்த சாலை நிர்மாணிப்பதற்காக மேற்படி பிரதேசங்களில் வசிக்கும் குடும்பங்களிடமிருந்து சுவீகரிக்கப்பட்ட காணிகளின் அளவு யாது என்பதையும்;

(ii) மேற்படி சுவீகரிக்கப்புகளுக்கென நியாயமான இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இன்றேல், நியாயமான இழப்பீட்டுத் தொகையை வழங்கத் திட்டமிட்டுள்ள வேலைத்திட்டம் யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

443/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் பாரிய நிதி நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இந்த நிதி நெருக்கடியிலிருந்து மேற்படி நிறுவனத்தை மீட்டுக்கொள்வதற்கு அமைச்சினால் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

523/2020

கௌரவ அமரகீர்த்தி அதுகோரள,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலன்னறுவை மாவட்டத்தில், பெரும்போகத்தில் நெற்செய்கையினை மேற்கொள்ளும் விவசாயிகளின் எண்ணிக்கை மற்றும் அவர்கள் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் வயற்காணிகளின் ஏக்கர் அளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி வயற்காணிகளில் சிறிய நீர்ப்பாசன, பாரிய நீர்ப்பாசன மற்றும் மகாவலியின் கீழ் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் வயற்காணிகளின் அளவு தனித்தனியே யாதென்பதையும்;

(iii) மேற்படி வயற்காணிகளுக்கு உரமானியம் வழங்கப்படுகின்றதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பராக்கிரம சமுத்திரம், கிரிதலே வாவி, மின்னேரிய வாவி மற்றும் கவுடுல்ல வாவி ஆகிய பாரிய வாவிகளின் நீரைக்கொண்டு பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் நிலப்பரப்பு யாதென்பதையும்;

(ii) அந்த நீரைக் கொண்டு பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) ஒவ்வொரு வருடமும் பெரும்போகத்தின்போது மழை நீரின் மூலம் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் சேனைகள், வீட்டுத்தோட்டங்கள் போன்றவை உள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அவற்றின் ஏக்கர் அளவு கமநல அதிகாரப் பிரதேசங்களுக்கு அமைய தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இலங்கையின் ஒட்டுமொத்த நெல் உற்பத்தியில் பொலன்னறுவை மாவட்டத்தின் பங்களிப்பானது, மெற்றிக் தொண்களிலும் மற்றும் சதவீதத்திலும் தனித்தனியே யாதென்பதை அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

8.

553/2020

கௌரவ அஸோக அபேசிங்ஹ,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) குருணாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள தேசிய வீதிகள், மாகாண வீதிகள் மற்றும் கிராமிய வீதிகளின் நீளம் பிரதேச செயலகப் பிரிவுகளின் அடிப்படையில் தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி வீதிகளில் —

(i) காபட் இடப்பட்ட வீதிகளின் நீளம்;

(ii) தார் இடப்பட்ட வீதிகளின் நீளம்;

(iii) காபட் அல்லது தார் இடப்படாத வீதிகளின் நீளம்;

எவ்வளவு என்பதையும் தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி (அ) இல் குறிப்பிட்ட கிராமிய வீதிகளின் நீளம் தனித்தனியாக உள்ளூராட்சி மன்றங்களின் அடிப்படையில் எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி கிராமிய வீதிகளைப் புனரமைப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

9.

601/2020

கௌரவ உதயன கிரிந்திகொட,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) மத்திய அதிவேக நெடுஞ்சாலை —

(i) கருத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

(ii) கருத்திட்டத்திற்கு இன்றளவில் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

(iii) கருத்திட்டத்தை நிறைவு செய்வதற்கு செலவிடப்பட வேண்டியுள்ள எஞ்சிய தொகை எவ்வளவென்பதையும்;

(iv) கருத்திட்டத்தை நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த திகதி யாதென்பதையும்;

(v) கருத்திட்டத்திற்கு ஏற்புடையதாக கடந்த ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட முறைகேடுகள்/ தாமதங்கள் காரணமாக அதனை நிறைவுசெய்ய முடியுமென உத்தேசிக்கப்படுகின்ற திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இக்கருத்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் —

(i) ஒப்படைக்கப்பட்டுள்ள கம்பனிகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) தாமதம் இடம்பெற்றுள்ள கம்பனிகளுக்கு அதன் நிர்மாணப் பணிகள் மீள வழங்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இக்கருத்திட்டத்தின் கண்டி நகருக்கு அண்மித்த இறுதி நுழைவு காணப்படுகின்ற பிரதேசம் யாதென்பதையும்;

(ii) கண்டியிலிருந்து கலகெதர வரையான வீதியில் காணப்படுகின்ற கடுமையான வாகன நெரிசல் காரணமாக அதன் ஊடாக அதிவேக நெடுஞ்சாலைக்குள் பிரவேசிப்பதற்கு 30-45 நிமிடங்கள் வரை எடுப்பதால் கண்டி பிரதேச மக்களுக்கு இலகுவாக அதிவேக நெடுஞ்சாலைக்கு பிரவேசிப்பதற்கு நுழைவு வீதி அமைக்கப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி அதிவேக நெடுஞ்சாலை நுழைவுகள் நிர்மாணிக்கப்படும் பிரதேசங்கள் யாவை என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

10.

612/2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கெகிராவ பொலிஸ் நிலையமானது சுமார் 49 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்வாங்குவதுடன் அங்கு சுமார் 200 பொலிஸ் உத்தியோகத்தர்கள் சேவையாற்றுகின்றனர் என்பதையும்;

(ii) மேற்படி பொலிஸ் நிலையம் இயங்கும் கட்டிடமானது சுமார் 50 வருட காலம் பழைமையானது என்பதையும்;

(iii) மேற்படி பொலிஸ் நிலையத்தில் மிகவும் சேதமடைந்த நிலையில் காணப்படும் பாளையங்களைப் பயன்படுத்தும் உத்தியோகத்தர்கள் மழைக் காலங்களில் மிகவும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) கெகிராவ பொலிஸ் நிலையத்தில் காணப்படும் குறைபாடுகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2021 ஆகஸ்ட் 17, செவ்வாய்க்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

35/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வரையறுக்கப்பட்ட லங்கா புத்ர அபிவிருத்தி வங்கி ஆரம்பிக்கப்பட்ட திகதி முதல் இன்று வரையில் ஈடுபடுத்தப்பட்ட மொத்த மூலதனம், ஒதுக்குத் தொகையின் அளவு, பங்குகள் மீதான கிடைக்கப்பெற்ற வருமானம், சொத்துக்கள் மீதான கிடைக்கப்பெற்ற வருமானம், மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை, பணியாளர் ஒருவருக்காக செலவிடப்பட்ட தொகை, மீண்டெழாத செலவுகள், வரியாக அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட்ட தொகை, மற்றும் இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதை அவர் தனித்தனியாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

139/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) “சுபீட்சத்தின் நோக்கு” கொள்கைப் பிரகடனத்தின் கீழ் தொழில் வாய்ப்பற்ற பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பினை வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) தொழில் வாய்ப்பற்ற பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்குவது தொடர்பில் பின்பற்றப்பட்ட நடவடிக்கை முறைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இற்றைவரை தொழில் வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ள பட்டதாரிகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) அவர்கள் பணியாற்றும் தொழில் நிலையங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களின் கடமைப்பணிகளின் தன்மை யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

170/2020

கௌரவ எஸ். எம். மரிக்கார்,— பிரதம அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாலம்பே தொடக்கம் கொழும்பு - கோட்டை வரை இலகு மின்சார புகையிரதக் கருத்திட்டமொன்றைச் செயற்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டிருந்ததென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்திற்கு மண் பரிசோதனை மற்றும் காணிகளைச் சுவீகரிப்பதற்கு ஏற்புடைய நில அளவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டம் தொடர்ந்தும் செயற்படுத்தப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கருத்திட்டம் தொடர்பாக மேற்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

325/2020

கௌரவ புத்திக பத்திறண,— வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்குத் தனித்துவமான ஊர்வன மற்றும் பாம்பு வகைகளின் எண்ணிக்கை எத்தனை;

(ii) அவற்றுக்கு மத்தியில் அழிவடையும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதன் காரணமாக சிவப்பு தரவுப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஊர்வன மற்றும் பாம்பு வகைகள் யாவை;

(iii) இன்றளவில் அழிவடைந்துள்ள இலங்கைக்குத் தனித்துவமான ஊர்வன மற்றும் பாம்பு வகைகள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கைக்குத் தனித்துவமான ஊர்வன மற்றும் பாம்பு வகைகள் தொடர்பாக அண்மையில் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், அது மேற்கொள்ளப்பட்ட திகதி யாது;

(iii) இன்றேல், அத்தகைய ஆய்வு நடத்தப்படுமா;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இலங்கைக்குத் தனித்துவமான ஊர்வன மற்றும் பாம்பு வகைகளைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை;

என்பதை அவர் மேலதிகமாகவும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5.

416/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— பிரதம அமைச்சரும் நிதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள எதனோல் லீற்றர்களின் அளவு;

(ii) இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள எதனோல் லீற்றர்களின் அளவு;

(iii) இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள எதனோல் ஒரு லீற்றர் விற்பனை செய்யப்பட்டுள்ள விலை;

யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2020 ஆம் ஆண்டில் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள எதனோல் லீற்றர்களின் அளவு யாது;

(ii) 2020 ஆம் ஆண்டில் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள எதனோல் ஒரு லீற்றர் விற்பனை செய்யப்பட்டுள்ள விலை எவ்வளவு;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 2018 - 2019 ஆம் ஆண்டுகளிலும் 2020 ஆம் ஆண்டிலும் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள எதனோலின் ஒரு லீற்றர் விற்பனை செய்யப்பட்டுள்ள விலைகளுக்கு இடையில் வேறுபாடு உள்ளதா;

(ii) ஆமெனில், அந்த வேறுபாடு யாது;

என்பதை அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

6.

580/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரிடம் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் உள்ள ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுக்கும் ஒரு பிரதேச சபை வீதம் நிறுவப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) இற்றைவரை பிரதேச சபையொன்று நிறுவப்படாத மன்னார் மாவட்டத்தின் மடு, முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான், கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் வெற்றிலைக்கேணி ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு பிரதேச சபைகளை நிறுவுமாறு தொடர்ச்சியாக கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும் இற்றைவரை இக்கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டவில்லை என்பதையும்;

(iii) மடு பிரதேச செயலகப் பிரிவில் உள்ள சின்னவலயங்கட்டு, காக்கையன்குளம், கல்மடு கட்டம்-2, இரணை இலுப்பைக்குளம் ஆகிய கிராமங்களில் வசிக்கும் மக்கள் தங்களுடைய தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு 70 கி.மீ மேலதிகமாக பயணம் செய்து மாந்தை மேற்கு பிரதேச சபைக்கு செல்ல வேண்டியுள்ளதெனவும்;

அவர்அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், சம்பந்தப்பட்ட 04 பிரதேச சபைகளை நிறுவுவதற்கு இற்றைவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) அதற்காக எடுக்கப்படும் காலம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

621/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மருத்துவச் சபையில் தற்போது காணப்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பதவிப் பெயரின் பிரகாரம் வெவ்வேறாக எத்தனை;

(ii) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

8.

733/2020

கௌரவ கௌரவ இஷாக் ரஹுமான்,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் பொலிஸ் சார்ஜண்ட் பதவிக்கு கீழுள்ள பதவிகளில் பணிபுரியும் பட்டதாரி பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எத்தனை;

(ii) கல்வித் தகைமைகளுக்கு உகந்த பதவியுயர்வுகள் கிடைக்கப்படாமை காரணமாக மேற்படி உத்தியோகத்தர்கள் பாரிய மன விரக்திக்கும் மன அழுத்தத்திற்கும் உள்ளாகியுள்ளனர் என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(iii) ஆமெனில், மேற்படி உத்தியோகத்தர்களின் கல்வித் தகைமைகளுக்கு உகந்த பதவி உயர்வுகளை வழங்கி அவர்களிடமிருந்து பயனுள்ள சேவையினை பொலிஸ் திணைக்களத்திற்குப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வுகளை வழங்குவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

9.

800/2020

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) தொழில் அமைச்சின் செயலாளரது பயன்பாட்டுக்காக மாதாந்த வாடகை அடிப்படையில் வாகனமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறாயின், அவ்வாகனம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள திகதி யாதென்பதையும்:

(ii) அதற்காக செலுத்தப்படும் மாதாந்த வாடகைத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) வாகனம் பெற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்;

(iv) அந்த நிறுவனத்தின் முகவரி யாதென்பதையும்;

(v) அவ்வாகனத்தின் உரிமையாளரது பெயர் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இலங்கையானது அந்நியச் செலாவணி தொடர்பான பல சிக்கல்களை எதிர்நோக்கியுள்ள இத்தகைய சந்தர்ப்பத்தில் வாகனங்கள் வாடகைக்குப் பெற்றுக் கொள்ளப்படுவதை அங்கீகரிக்கின்றாரா என்பதையும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

10.

1800/2021

கௌரவ ரோஹண திசாநாயக்க,— வன சீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இயற்கையான சூழலில் சுதந்திரமாக நடமாடும் மந்திகள், குரங்குகளால் நெல், மரக்கறி, பழங்கள் மற்றும் சோளம் ஆகிய பயிர்களுக்கும், வீடுகள் போன்ற சொத்துகளுக்கும் அணில், கிளி போன்ற பிராணிகளுக்கும் தீங்கு விளைவிக்கப்படுவதை அறிவாரா என்பதையும்;

(ii) இவ்விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனம் யாது என்பதையும்;

(iii) சுதந்திரமாக நடமாடும் மந்திகளையும் குரங்குகளையும் பிடித்து துல்லியமாக இனங்காணப்பட்ட பூங்காக்களில் விடுவிக்கும் வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2021 ஆகஸ்ட் 18, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

38/2020

கௌரவ ஹேஷா விதானகே,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1983 ஆம் ஆண்டில் உள்நாட்டு யுத்த நிலைமை ஆரம்பிக்க முன்னர், வடக்கு மாகாணத்தில் காணப்பட்ட இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குரிய எரிபொருள் நிரப்பு நிலையங்களின் —

(i) எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அமைக்கப்பட்டிருந்த இடங்களின் முகவரிகள் யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமையாளர்களது பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) அவர்களது முகவரிகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்குறிப்பிட்ட (அ)(iii) இல் குறிப்பிட்ட உரிமையாளர்களுள், வடக்கு மாகாணத்தில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்த காலப்பகுதியினுள் கொலை செய்யப்பட்டு, காணாமல் போனதன் காரணமாக அல்லது இறப்பின் காரணமாக குறிப்பிட்ட எரிபொரு நிரப்பு நிலையங்களின் உரிமையானது மாற்றமடைந்ததா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்குறிப்பிட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் புதிதாக உரித்தினைப் பெற்றுக்கொண்ட உரிமையாளர்களின் —

(i) எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) முகவரிகள் யாவை என்பதையும்;

(iv) பின் உரிமையாளர்களுக்கு, முன் உரிமையாளர்களது உறவு முறைமையொன்று காணப்படுமாயின் குறித்த உறவு முறை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு மேலும் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2.

258/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற விளையாட்டுப் பாடநெறிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி பாடநெறிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பாடநெறியையும் தற்போது பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாது என்பதையும்;

(iv) தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற விளையாட்டுப் பாடநெறிகளின் தரத்தை மேம்படுத்த அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

300/2020

கௌரவ எஸ். எம். மரிக்கார்,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கடுவலை நகரத்தில் காணப்படுகின்ற அதிக வாகன நெரிசலைக் குறைப்பதற்கென அரசாங்கத்தினால் ஏதேனும் வேலைத்திட்டம் முன்மொழியப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(iii) மேற்படி வேலைத்திட்டம் எப்போது நடைமுறைப்படுத்தப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

326/2020

கௌரவ புத்திக பத்திறண,— வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்குத் தனித்துவமான ஈரூடக உயிரின வகைகளின் எண்ணிக்கை எத்தனை;

(ii) அவற்றுக்கு மத்தியில் அழிவடையும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதன் காரணமாக சிவப்பு தரவுப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஈரூடக உயிரின வகைகள் யாவை;

(iii) இன்றளவில் அழிவடைந்துள்ள இலங்கைக்குத் தனித்துவமான ஈரூடக உயிரின வகைகள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கைக்குத் தனித்துவமான ஈரூடக உயிரினங்கள் தொடர்பாக அண்மையில் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், அது மேற்கொள்ளப்பட்ட திகதி யாது;

(iii) இன்றேல், அத்தகைய ஆய்வு நடத்தப்படுமா;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இலங்கைக்குத் தனித்துவமான ஈரூடக உயிரினங்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை;

என்பதை அவர் மேலதிகமாகவும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5.

594/2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கான அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி மருத்துவமனையில் தற்போதுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி மருத்துவமனையில் இன்றளவில் நிலவும் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மருத்துவமனையில் கடமையில் ஈடுபட்டுள்ள மருத்துவர்கள் மற்றும் தாதியர்களின் எண்ணிக்கை இவர்களின் தொடர்பாடல் மொழிக்கமைய வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிப்பாரா?

(ஆ) (i) கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு திடீர் விபத்துப் பிரிவொன்றை நிறுவுவதற்கு 2019.02.15 ஆம் திகதியன்று அடிக்கல் நாட்டப்பட்டதென்பதையும்;

(ii) மேற்படி பிரிவை நிறுவுவதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி நிர்மாணப் பணிகள் இதுவரை ஆரம்பிக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) நிதி ஒதுக்கப்படவிலலையெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(v) மேற்படி மருத்துவமனையில் திடீர் விபத்துப் பிரிவு ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

604/2020

கௌரவ இஷாக் ரஹுமான் ,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மஹாஇலுப்பல்லமவில் அமைந்துள்ள களப் பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்துக்குச் சொந்தமான முழு நிரப்பரப்பின் அளவு;

(ii) அவற்றில் விதை உற்பத்தி நிலையத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலப்பரப்பின் அளவு;

(iii) கள ஆராய்ச்சி நிலையத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலப்பரப்பின் அளவு;

(iv) பண்ணை பொறித்தொகுதி நிலையத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலப்பரப்பின் அளவு;

(v) பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படாத நிலப் பரப்பின் அளவு;

ஏக்கர்களில் எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படாத நிலப்பரப்பினை பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

622 /2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மருத்துவச் சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட மருத்துவர்களின் மொத்த எண்ணிக்கை எத்தனை;

(ii) மேற் குறிப்பிட்ட மருத்துவர்கள் மத்தியில் தகைமைகளைக் கொண்டிராத மருத்துவர்களும் உள்ளனர் என்பதை அறிவாரா;

(iii) ஆமெனில், அது தொடர்பாக அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

835/2020

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சரும், நிதி அமைச்சரும், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையில் நடாத்திச் செல்லப்படும் ஏற்றுமதிச் செயற்பாட்டு வலயங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு ஏற்றுமதிச் செயற்பாட்டு வலயமும் —

(i) ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) கொண்டுள்ள நிலப் பரப்பு எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிலப்பரப்பில் இதுவரை பயன்படுத்தப்பட்டுள்ள நிலப் பரப்பு எவ்வளவென்பதையும்;

வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) எதிர்காலத்தில் நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ள ஏற்றுமதி தயாரிப்பு வலயங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்குத் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

9.

854/2020

கௌரவ அஜித் ராஜபக்ஷ,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கொழும்பு 05, கிரிமண்டல மாவத்தை எனும் முகவரியில் பேணிச் செல்லப்படும் வ/ப ஆசிரி சத்திர சிகிச்சை வைத்தியசாலை அமைந்துள்ள காணியானது அவ்வைத்தியசாலையை நிர்மாணிப்பதற்கு முன்னர் அரசாங்கத்திற்குச் சொந்தமானதாக இருந்ததென்தை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி காணி, மேற்குறிப்பிடப்பட்ட வைத்திசாலையை நிர்மாணிப்பதற்காக ஒப்படைக்கப்பட்ட அடிப்படை யாதென்பதையும்;

(ii) மேற்குறிப்பிடப்பட்ட வைத்தியசாலையை நிர்மாணிப்பதற்காக இக்காணி ஒப்படைக்கப்பட்டபோது, ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை இச்சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

1801/2021

கௌரவ ரோஹண திசாநாயக்க,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளதான அரச காணிகளுக்காக வழங்கப்பட்டுள்ள காணி உறுதி வகைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) அத்தகைய உறுதி வகைகளில், பின் உரித்தாளரைக் குறிப்பிட்டு வழங்கப்படும் உறுதி வகைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அத்தகைய உறுதிகளுக்கு உட்பட்ட வகையில் வழங்கப்பட்ட காணிகளை, குடும்பத்தின் ஏனைய அங்கத்தவர்களிடையே சட்ட ரீதியாக பிரிக்கும் எளிமையான வழிமுறையொன்றைத் தயாரிக்க அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2021 ஆகஸ்ட் 19, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

40/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய சுவடிக் கூடத் திணைக்களத்தினால் திரைப்படங்களை பேணிப் பாதுகாப்பதற்கு ஏதேனும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், இதுவரையில் பேணிப் பாதுகாக்கப்பட்டுள்ள திரைப்படங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தேசிய சுவடிக் கூடத் திணைக்களத்தில் திரைப்படங்களைப் பேணிப் பாதுகாக்கும் பிரிவின் அலுவலர்களுக்கு திரைப்படங்களை பேணிப் பாதுகாப்பது தொடர்பில் வெளிநாட்டுப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், வெளிநாட்டுப் பயிற்சிக்கென அனுப்பப்படும் நாடுகள் மற்றும் நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iii) கடந்த காலப்பகுதியில் வெளிநாட்டுப் பயிற்சிகள் வழங்கப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

143/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— மின்சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மின்சார சபை கடன் பெற்றுக்கொண்டுள்ள அரசாங்க நிறுவனங்கள் மற்றும் வங்கிகளின் பெயர்கள் யாவை;

(ii) 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் இலங்கை மின்சார சபையானது மேற்படி நிறுவனங்கள் மற்றும் வங்கிகளுக்கு செலுத்த வேண்டியுள்ள கடன் தொகை வெவ்வேறாக யாது;

(iii) இலங்கை மின்சார சபையினை நிதிரீதியில் பலப்படுத்துவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

154/2020

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு 15 இல் அமைந்துள்ள புனித அந்தோனியார் மகளிர் மகா வித்தியாலயத்தில் வர்த்தகப் பட்டதாரி ஆசிரியர் பதவியொன்றிலும் ஆங்கிலம், உரோமன் கத்தோலிக்கம், சித்திரம் மற்றும் தமிழ்மொழி ஆகிய பாடங்களில் தலா ஒரு ஆசிரியர் பதவியிலும் வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்பதையும்;

(ii) மேற்படி வித்தியாலயத்தில் கல்விசாரா பதவியணியிலும் அலுவலக உதவியாளர், நூலக உதவியாளர், தொழிலாளர் மற்றும் காவலாளி ஆகிய பதவிகளில் தலா ஒரு வெற்றிடம் வீதம் காணப்படுகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

272/2020

கௌரவ புத்திக பத்திறண,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை தேசிய கூட்டுறவுச் சபை இயங்கி வருகின்ற கட்டிடத்தில் 2017 ஆம் ஆண்டில் உள்ளக திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) அதன்போது பெறுகைச் செயன்முறையினை மீறி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) அதன் காரணமாக பாரிய நிதி ரீதியான நட்டம் ஏற்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி திருத்த நடவடிக்கைகளுக்காக கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நிறுவனமும் சமர்ப்பித்துள்ள கேள்விப்பத்திரங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) குறித்த டெண்டர் வழங்கப்பட்ட நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்;

(v) மேற்படி நிறுவனத்திற்கு குறித்த டெண்டர் வழங்கப்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி டெண்டர் வழங்கப்பட்ட நிறுவனத்தின் பதவியணியைச் சேர்ந்த உறுப்பினரொருவருக்கும் இலங்கை தேசிய கூட்டுறவுச் சபையின் போக்குவரத்துப் பிரிவில் எழுதுவினைஞராக கடமையாற்றும் ஒருவருக்கும் இடையில் உறவுமுறைத் தொடர்பு உள்ளதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) இல்லையெனில், அது தொடர்பில் விசாரணை நடத்தப்படுமா என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5.

579/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) வட மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் சுவீகரித்துக்கொள்ளப்பட்டுள்ள காணிகளின் பரப்பளவு தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) அந்த அளவானது வட மாகாணத்திற்கான மொத்தக் காணிப் பரப்பளவின் எத்தனை சதவீதம் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இவ்வகையில் காணிகள் சுவீகரித்துக்கொள்ளப்படும்போது தனியார் காணிகள், விவசாய வாவிகள், விவசாயக் காணிகள் மற்றும் கால் நடைகளுக்கான புற்தரைகளும் சுவீகரித்துக்கொள்ளப்பட்டுள்ளதோடு அது மக்களின் வாழ்வாதாரத்தின் மீது மட்டுமன்றி சகவாழ்வின் மீதும் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(இ) மேற்படி காணிகள் சுவீகரித்துக்கொள்ளப்படும்போது மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர் மற்றும் மாகாண காணி ஆணையாளர் ஆகியோரின் ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

6.

718/2020

கௌரவ சாந்த பண்டார,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்வது விளையாட்டு நடவடிக்கைகளுக்கு வசதியாக அமையும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இலங்கையில் தடகள விளையாட்டுக்கென தற்போது காணப்படுகின்ற சர்வதேச விளையாட்டு மைதானங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மாவட்ட மட்டத்தில் முழுமையான வசதிகளுடன் கூடிய விளையாட்டு மைதானங்களை அமைப்பதற்கான முறையொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்காக நிதி ஏற்பாடுகளை ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

979/2020

கௌரவ வேலு குமார்,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) விக்டோரியா மின் உற்பத்தி நிலைய நிர்மாணக் கருத்திட்டத்தில் பணியாற்றிய வெளிநாட்டவர்களுக்கு குண்டசாலை பிரதேச செயலகப் பிரிவின் "திகன விலேஜ்"இல் தங்குமிட வசதிகள் வழங்கப்பட்டிருந்தன என்பதையும்;

(ii) அங்கு அலுவலகக் கட்டிடங்கள், உணவகங்கள் மற்றும் தங்குமிட விடுதிகள் போன்றவை உள்ளன என்பதையும்;

(iii) இன்றளவில் அது இலங்கை மகாவலி அதிகாரசபையினால் நிர்வகிக்கப்படுகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) "திகன விலேஜ்"இல் காணப்படும் அலுவலகக் கட்டிடங்கள், உணவகங்கள் மற்றும் தங்குமிட விடுதிகளின் எண்ணிக்கையும்;

(ii) அவை இன்றளவில் பயன்படுத்தப்படுவதன் நோக்கங்களும்;

தனித் தனியாக யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) "திகன விலேஜ்"இல் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஒரு கட்டிடம் தனியார் தரப்புக்கு / நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அது எந்த அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) குறித்த கட்டிடம் வழங்கப்பட்டுள்ள தனியார் தரப்பின் / நிறுவனத்தின் பெயர் யாது என்பதையும்;

(iv) அந்தப் பிரதேசத்தில் சட்டவிரோத குடியமர்த்தல்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளனவா என்பதையும்;

(v) அவ்வாறாயின், அதற்கெதிராக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

8.

1018/2020

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன,— பிரதம அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை அப்போது காணப்பட்ட மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சுப் பொறுப்பை வகித்த அமைச்சர்/ அமைச்சர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி அமைச்சின் கீழ் காணப்பட்ட நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம், மேற்படி அமைச்சின் கீழ் காணப்பட்டதா என்பதையும்;

(iv) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை மேற்படி நிறுவனத்துக்குப் பொறுப்பாகவிருந்த தவிசாளர் / தவிசாளர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனத்திற்கு பொறித்தொகுதிகளை கொள்வனவு செய்கையில் கொள்வனவு நடைமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) கொள்வனவு நடைமுறைகள் பின்பற்றப்படாது 670 மில்லியன் ரூபா பெறுமதியான பொறித்தொகுதிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) மேற்படி கொள்வனவின் போது ஏதேனும் முறைகேடு இடம்பெற்றிருப்பின், அந்த முறைகேடு யாதென்பதையும்;

(iv) அதற்குப் பொறுப்புக்கூற வேண்டிய ஆட்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(v) அது தொடர்பாக முறையான விசாரணை நடாத்தப்பட்டு குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

1019/2020

கௌரவ யூ. கே. சுமித் உடுகும்புர,— சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்தல ராஜபக்ச சர்வதேச விமான நிலையம் இலங்கைக்கு பெரும் சொத்தாக உள்ளதென்பதையும்;

(ii) கடந்த ஆட்சிக் காலத்தில் அதில் நெல் களஞ்சியப்படுத்தப்பட்டதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட விமான நிலையத்தில் நெல் களஞ்சியப்படுத்தும் சாத்தியம் உள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி விமான நிலையத்தில் நெல் களஞ்சியப்படுத்தப்பட்ட இடம் யாதென்பதையும்;

(iii) களஞ்சியப்படுத்தப்பட்ட நெல்லின் அளவு எவ்வளவென்பதையும்;

(iv) இதற்காக ஆலோசனை வழங்கிய ஆட்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) நெல் களஞ்சியப்படுத்தப்பட்ட பின்னர் அவ்வளாகத்தை மீள புனரமைப்பதற்கு செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(ii) அதற்கு பொறுப்புக்கூற வேண்டிய ஆட்களிடமிருந்து அப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இன்றேல், எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) சர்வதேச விமான நிலையமொன்றில் நெல் களஞ்சியப்படுத்தியதன் மூலம் இலங்கை சர்வதேச ரீதியாக அபகீர்த்திக்கு உள்ளானதா என்பதையும் அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

10.

1277/2020

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை அரசாங்கத்தினால் வெளிநாடுகள், வெளிநாட்டு முகவர் நிறுவனங்கள் மற்றும் வங்கிகளிடமிருந்து 2015.01.01ஆம் திகதி தொடக்கம் 2020.10.01 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கடன் மற்றும் நிதியுதவி என்பவற்றின் அளவு தனத்தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி கடன் மற்றும் நிதியுதவிகள் பெற்றுக்கொள்ளப்பட்டமைக்கான நோக்கம், கருத்திட்டம், ஆண்டு, நாடு மற்றும் தேவை என்பன தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி கடன் மற்றும் நிதியுதவிகளானவை அவற்றைப் பெற்றுக்கொண்ட நோக்கத்திற்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளன என்பது தொடர்பில் உத்தரவாதம் அளிக்கின்றாரா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2021 ஆகஸ்ட் 20, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

42/2020

கௌரவ ஹேஷா விதானகே,— அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரிடம் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தில் மாகாண சபைக்குரியதான பாதைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவற்றின் மொத்த நீளம் எத்தனை கிலோ மீற்றர்கள் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த அரசாங்கத்தின் மாகாண சபை நிதி ஒதுக்கீட்டின் மூலம் அபிவிருத்தி செய்யப்பட்ட பாதைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) அதற்கென செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) தற்போதைக்கு சேதமடைந்த நிலையிலுள்ள மாகாண சபைக்குரிய பாதைகளின் அபிவிருத்தியை மேற்கொள்வதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

202/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள விளையாட்டுக் கழகங்கள் மற்றும் அவற்றின் பெயர்கள்;

(ii) மேற்படி கழகங்களுக்கு மத்தியில் உரிய முறையில் தேர்தல்களை நடாத்தியுள்ள விளையாட்டுக் கழகங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள்;

(iii) தேர்தல்களை நடாத்துவதில் தடை ஏற்பட்டுள்ள விளையாட்டுக் கழங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள்;

(iv) தேர்தல்களை நடாத்துவதில் தடை ஏற்பட்டுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கான தேர்தல்களை நடாத்துவதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்;

யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

245/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பஞ்சின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி பஞ்சு எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iv) மேற்படி பஞ்சை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு பஞ்சை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

273/2020

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச நிறுவனங்களில் பாவனையின் பின்னர் அகற்றப்பட்டுள்ள வாகனங்கள் பெருமளவில் காணப்படுகின்றன என்பதையும்;

(ii) அவை துருப்பிடித்து வருகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அரச நிறுவனங்களிலிருந்து பாவனையின் பின்னர் அகற்றப்பட்டுள்ள வாகனங்களின் இன்றைய பெறுமதி எவ்வளவென்பதையும்;

(ii) அவ்வாகனங்கள் தொடர்பில் தொகைக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அக்கணிப்பீடு மேற்கொள்ளப்பட்ட திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) (i) அரச நிறுவனங்களிலிருந்து பாவனையின் பின்னர் அகற்றப்படும் வாகனங்களை அப்புறப்படுத்துவதற்கான முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5.

533/2020

கௌரவ ரோஹண பண்டார,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான மருந்தகங்களின் (ஒசுசல) எண்ணிக்கை எத்தனை;

(ii) குறிப்பிட்ட மருந்தகங்கள் அமைந்துள்ள இடங்களின் முகவரிகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்குத் அறிவிப்பாரா?

(ஆ) அரச மருந்தகக் கிளை வலையமைப்பினை அநுராதபுர மாவட்டத்தில் மேலும் விஸ்தரிப்பதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்குத் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

584/2020

கௌரவ வேலு குமார்,— பிரதம அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் பெருந்தோட்டத்துறை சார்ந்ததாக தோட்ட மருத்துவ நிலையங்கள் (Estate Dispensary) நடைமுறையில் உள்ளன என்பதையும்;

(ii) அத்தகைய ஒரு நிலையத்தின் பொறுப்பாளராக, தோட்ட மருத்துவ உதவியாளர் பதவியை வகிக்குமொருவர் (Estate Medical Assistant) கடமையாற்றுகின்றார் என்பதையும்;

(iii) நோயாளர்களை பரிசீலித்து ஔடதங்களை நியமித்தல், குறிப்பிட்ட தோட்ட மருத்துவ உதவியாளரால் மேற்கொள்ளப்படுகிறது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) பெருந்தோட்டத்துறை சார்ந்ததாக தற்போது இயங்கிவரும் தோட்ட மருத்துவ நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி வைத்தியசாலைகளில் பணியாற்றும் தோட்ட மருத்துவ உதவியாளர்களின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி தோட்ட மருத்துவ உதவியாளர்களின் தகைமைகள் யாவை;

(iv) அவர்களது விடயப்பொறுப்புக்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி தோட்ட மருத்துவ உதவியாளர்களினால் மேற்கொள்ளப்படும் விடயப்பொறுப்பு சட்டரீதியானதா;

(ii) இன்றேல், இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

7.

669/2020

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முன்மொழியப்பட்டுள்ள கும்புக்கன் ஓயா நீர்ப்பாசன கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கும் திகதி யாதென்பதையும்;

(ii) அதன் மதிப்பீட்டுச் செலவீனம் எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி நீர்ப்பாசன கருத்திட்டத்திற்காக செலவாகும் தொகையினை பெற்றுக்கொள்ளும் முறை யாதென்பதையும்;

(iv) மேற்படி நீர்ப்பாசன கருத்திட்டத்தினை நிறைவு செய்வதற்கு எவ்வளவு காலம் செல்லும் என்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் பயன்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

730/2020

கௌரவ அமரகீர்த்தி அத்துகோரள,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கையில் —

(i) வருடாந்த நன்னீர் மீன் உற்பத்தி மற்றும் தேவை யாது என்பதையும்;

(ii) ஆகக்கூடிய நன்னீர் மீன் அறுவடையைப் பெற்றுத்தரும் மாவட்டம் யாது என்பதையும்;

(iii) நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலில் ஈடுபடும் மொத்தக் குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) பொலன்னறுவை மாவட்டத்தில் —

(i) நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மாதாந்த நன்னீர் மீன் அறுவடை எவ்வளவு என்பதையும்;

(iii) நன்னீர் மீன்பிடிக் கைத்தொழில் மேற்கொள்ளப்படுகின்ற குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களில் விடப்பட்ட மீன் குஞ்சுகளின் அளவு தனித்தனியாக யாது என்பதையும்;

(ii) அக்காலப்பகுதியில், மேற்படி குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களிலிருந்து பெறப்பட்ட மீன் அறுவடை தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) விடப்பட்ட மீன் குஞ்சுகளுக்கு ஒப்பீட்டு ரீதியாக பெறப்பட்ட மீன் அறுவடை தொடர்பில் திருப்தி அடைவாரா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணம் யாது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) சிறிய குளங்களைச் சார்ந்து நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் மேலும் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

9.

786/2020

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாணவர் ஆலோசனை ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரர்களின் மொத்த எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அப்பரீட்சையில் சித்தியெய்தவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) அப்பரீட்சையில் சித்தியெய்தவர்களுக்கு இதுவரை நியமனங்கள் வழங்கப்படவில்லையென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், மேற்படி பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு துரிதமாக நியமனங்களை வழங்குவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

1017/2020

கௌரவ பிரேமலால் ஜயசேகர,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தில் 'ஐ- ரோட்' கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி மாவட்டத்தில் மேற்குறித்த கருத்திட்டத்தின் மூலம் காபட் இட்டு அபிவிருத்தி செய்வதற்கு அங்கீகாரமளிக்கப்பட்ட வீதிகளின் நீளம் எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் உடன்படிக்கை கைச்சாத்திட்டுள்ள ஒப்பந்தக்காரர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வொரு ஒப்பந்தக்காரரும் அபிவிருத்தி செய்வதற்காக உடன்படிக்கை கைச்சாத்திட்டுள்ள வீதிகளின் பெயர்கள் மற்றும் அவற்றின் நீளம்;

(ii) மேற்படி வீதிகளில் இன்றளவில் அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு மக்கள் உடைமைக்கு கையளிக்கப்பட்டுள்ள வீதிகளின் பெயர்கள் மற்றும் அவற்றின் நீளம்;

(iii) இன்றளவில் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்படாதுள்ள வீதிகளின் பெயர்கள் மற்றும் அவற்றின் நீளம்;

என்னவென்பதை வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்படாத வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2021 செப்டம்பர் 07, செவ்வாய்க்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

43/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை பொலிஸ் சேவையின் உப பொலிஸ் பரிசோதகர் பதவியில் தற்போதுள்ள அலுவலகர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) இணைத்துக் கொள்ளல் ஒழுங்குகளின் படி உப பொலிஸ் பரிசோதகர் பதவியில் உள்ள அலுவலர் ஒருவர், பொலிஸ் பரிசோதகர் பதவி வரையில் பதவியுயர்வு பெறுவதற்கு நிறைவு செய்ய வேண்டிய சேவைக் காலம் எவ்வளவு என்பதையும்;

(iii) அதன்படி, உரிய சேவைக் காலத்தினை நிறைவு செய்த உப பொலிஸ் பரிசோதகர்களுக்கு பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

310/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தற்போதைய பணிப்பாளர் சபை உறுப்பினர்களது பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு உறுப்பினரதும் கல்வி மற்றும் தொழிற் தகைமைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு உறுப்பினருக்கும் செலுத்தப்படுகின்ற சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) அவர்களின் நியமனத்தின் போது புத்திஜீவிகள் குழுவின் பரிந்துரைகள் பெறப்பட்டனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

322/2020

கௌரவ புத்திக பத்திரண,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் கிரிக்கட் விளையாட்டை மேம்படுத்துவதற்காக 2019 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி தொகையில் அரசாங்க பாடசாலைகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள தொகையில் பாடசாலைகளிலிருந்து வெளியேறியுள்ள பிள்ளைகளின் கிரிக்கற் விளையாடும் திறமைகளை வளர்ப்பதற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கிரிக்கட் விளையாட்டின் மூலம் சர்வதேச வெற்றிகளைப் பெற்றுக்கொள்வதற்காக பாடசாலை விளையாட்டு வீரர்களை வழிப்படுத்துவதற்கான திட்டங்களைத் தயார் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இலங்கை கிரிக்கட் நிறுவனம் மற்றும் அத்துடன் இணைந்த ஏனைய சங்கங்களின் நிருவாக மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் அரசாங்கம் சம்பந்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகளில் சம்பந்தப்படுகின்ற முறை யாதென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4.

488/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் அமைந்துள்ள விளையாட்டுப் பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி விளையாட்டுப் பாடசாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு விளையாட்டுப் பாடசாலைகளிலும் இன்றளவில் கற்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iv) இவர்களுக்கு வழங்கப்படுகின்ற கொடுப்பனவுகள் மற்றும் இதர வசதிகள் யாவையென்பதையும்;

(v) விளையாட்டுப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

599/2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்துள்ள தனியொரு பிரதேச செயலகப் பிரிவாகிய நெடுந்தீவில் காணப்படுகின்ற 08 அரச பாடசாலைகள், பௌதீக வளங்கள் மற்றும் ஊழியர் பற்றாக்குறையுடன் இயங்குகின்றதென்பதையும்;

(ii) தரைவழிப் பாதை இல்லாத காரணத்தினால் உயர் கல்வி கற்கையில் மேற்படி தீவுப் பகுதி மாணவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி தீவுப் பகுதியில் அமைந்துள்ள ஒரு பாடசாலையிலேனும் க.பொ.த. (உயர்தரப்) பரீட்சைக்கு கணிதம் மற்றும் விஞ்ஞானப் பிரிவுகளில் தோற்றுவதற்கு கணிதம் மற்றும் விஞ்ஞானப் பிரிவுகள் ஆரம்பிக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட பாடசாலைகளில் க.பொ.த (உயர்தரப்) பரீட்சைக்கு ஏற்புடையதாக கணிதம் மற்றும் விஞ்ஞானப் பாடங்களில் கற்பதற்குரிய கணிதம் மற்றும் விஞ்ஞானப் பிரிவுகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

725/2020

கௌரவ சாந்த பண்டார,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) எலிக்காய்ச்சல் தொற்றுவதன் காரணமாக இலங்கையில் ஆட்கள் மரணிக்கின்றனர் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) எலிக்காய்ச்சல் தொற்றியதன் காரணமாக 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் மரணித்தவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி நோய் பரவுவதைத் தடுப்பதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

858/2020

கௌரவ ஜகத் குமார,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கடந்த சனாதிபதித் தேர்தல் காலத்தில், அரசியல் நட்பு அடிப்படையில் சமுர்த்தி இயக்கத்தின் நிதி துஷ்பிரயோகம் செய்யப்பட்டமையும் சமுர்த்தி வங்கி பணியாட்டொகுதியினருக்கு அரசியல் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்பட்டமையும் சட்டத்திற்கு முரணானதென தேர்தல் ஆணைக்குழுவினால் அப்போதைய அமைச்சரவைக்கு அறிவிக்கப்பட்டிருந்தது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) இது தொடர்பாக நடப்பு அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 2015.01.12 முதல் 2015.06.26 வரையான காலப்பகுதியில் சமுர்த்தி விடயத்திற்குப் பொறுப்பாக பணியாற்றிய அமைச்சர் ஒரு இலட்சம் ரூபா கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள கடன் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) அவ்வாறு வழங்கப்பட்ட கடன்களில் இதுவரை அறவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேலும் அறவிடப்படுவதற்கு மீதியுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

மாவட்ட அடிப்படையில் தனித்தனியே அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) அப்போதைய அரசாங்கம் அரசியல் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட ஒரு சிலருக்கு மாத்திரம் இக்கடனை வழங்கியுள்ளது என்பதையும் அவர் ஏற்றுக்கொள்வாரா?

(உ) இவ்வாறு தவறான முறையில் கடன் வழங்கப்பட்டுள்ளமை தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

8.

860/2020

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மதுவரித் திணைக்களத்தின் முக்கிய விடயப்பொறுப்பு யாது;

(ii) இலங்கையினுள் அமைந்துள்ள மொத்த மதுவரி நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி எண்ணிக்கை மாவட்ட வாரியாக வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மதுவரித் திணைக்களத்தில் உள்ள மொத்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி எண்ணிக்கையானது மாவட்ட வாரியாக வெவ்வேறாக யாது;

(iii) மதுவரித் திணைக்களத்தின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு இந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை போதுமானதாக உள்ளதா;

(iv) மதுவரித் திணைக்களத்துக்கு புதிய உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

873/2020

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை நிர்மாணிப்பதன் மூலம் இலங்கைக்கு கிடைக்கும் நன்மைகள் யாவை என்பதையும்;

(ii) அதை நிர்மாணிப்பதற்கு செலவாகும் பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி செலவினத்தை துறைமுக அதிகாரசபையினால் ஏற்க முடியுமா என்பதையும்;

(iv) மேற்படி முனையத்தை நிர்மாணிப்பதற்கு தேவைப்படும் காலம் எவ்வளவென்னபதையும்;

(v) இதனை நிர்மாணிப்பதன் ஊடாக இலங்கைக்கு கிடைக்கும் வருடாந்த வருமானம் அண்ணளவாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

944/2020

கௌரவ மயந்த திசாநாயக்க,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையில் கண்டி, பல்லேகல சர்வதேச கிரிக்கெட் விளையாட்டு மைதானத்தில் நடாத்தப்பட்டுள்ள சர்வதேச கிரிக்கெட் போட்டிகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி போட்டிகளின் மூலம் ஈட்டப்பட்டுள்ள வருமானம் ஒவ்வொரு போட்டிக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

(iii) 2010 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையில் மேற்படி விளையாட்டு மைதானத்தை பராமரிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதித்தொகை வருடாந்த ரீதியில் வெவ்வேறாக யாது;

(iv) மேற்படி விளையாட்டு மைதானத்தின் பராமரிப்புப் பணிகள் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்றனவா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?